

863

உ

ஸ்ரீ:

# ஸ்ரீ ஸ்வாமிமலை
# க்ஷேத்திர மாகாத்மியம்.

இது

ஸ்ரீ ஸ்வாமிமலை, புராணகேஸரீ, ராமாயணம்,

பிரும்மஸ்ரீ ஸுப்பராய சாஸ்திரிகள்,

குமாரர்களான

**R. S. ஸுப்ரமண்ய சாஸ்திரிகளாலும்,**

**R. S. ஸாம்பமூர்த்தி பாகவதரவர்களாலும்,**

தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு

கும்பகோணம்

ஸ்ரீ கோமளாம்பா அச்சுக்கூடத்தில்

அச்சிட்டு வெளியிடப்பட்டது.

1935.

விலை ] *All Rights Reserved.* [ ரூ. **1—0—0**

Acc. No: 863
Q1:38

1.00

3962
32-1
863
ACC.No. 863
TIRUPPOOVANA MADAM.
KOVILOOR MADALAYAM
KOVILUR-630 307
MANAGIRI VIA

உ

குருநாதாய நம:

# ஸ்ரீ ஸ்வாமிமலை க்ஷேத்ர மாஹாத்மியம்.

## முதல் அத்தியாயம்.

### (பஞ்சாக்ஷரமஹிமையின் வரலாறு)

விக்னேச்வர த்யானம்.

ஓங்கார நிலயம் தேவம் கஜவக்த்ரம் சதுர்புஜம் ।
பிசண்டிலமஹம் வந்தே ஸர்வவிக்நோபசாந்தயே: ॥

மங்களச்லோகம்.

மங்களம் திசது மே விநாயகோ
மங்களம் திசது மே ஷடாநந: ।
மங்களம் திசது மே மஹேச்வரீ
மங்களம் திசது மே மஹேச்வர: ॥

(கதையின் வரலாறு)

அகிலாண்டகோடி ப்ரம்மாண்டங்களை ஸிருஷ்டித்த ஸரஸ்வதிநாதனான பிரம்மதேவன் ஸத்யலோகத்தில் திவ்யாஸனத்தில் வாணியுடன் வீற்றிருக்கும் காலத்தில் ஸமஸ்த ருஷீச்வரர்களும் வந்து, ப்ரம்மதேவரை நமஸ்கரித்து, ஹே ப்ரபோ! நாங்கள் தவம்செய்து க்ஷேமத்தை அடைய விரும்புகிறோம்; அதற்குரிய ஸ்தானத்தைத் தாங்கள் சொல்லவேண்டும் என்று ப்ரார்த்தித்தார்கள். உடனே பத்மயோனியானவர், தர்ப்பப் புல்லினை சக்ரமாக வளைத்து, "ஏ முனிவர்களே! இந்தச் சக்ரத்தைப் பின்தொடர்வீர்களாக. இது நின்றவிடமே தவம் செய்யத்தகுதியுள்ள இடம்" என்று சொல்லி, அச்சக்ரத்தை விட்டார். அந்தச் சக்ரம் அநேக தேசங்களைக் கடந்து கடைசியில் கோமதிநதியின் அருகில் வந்து நின்றது. ருஷீச்வரர்

கள் அந்த இடம் தவம் செய்ய மிகவும் உத்தமமான ஸ்தானம் என்று எண்ணி, அதற்கு 'நைமிசாரணியம்' என்ற நாமதேயம் சூட்டி, அவ்விடத்தில் தங்கி, தவம் செய்துவந்தார்கள். ஒரு ஸமயம் வேதவ்யாஸமஹரிஷியின் சிஷ்யரான ஸூத புராணிகர் சிஷ்யர்களுடன் நைமிசாரண்யம் வந்துசேர்ந்தார். அங்குள்ள முனீச்வரர்கள் ஸூதபௌராணிகரை எதிர்கண்டு அழைத்துக்கொண்டுவந்து ஆஸநத்தில் உட்காரவைத்து, அர்க்ய பாத்ய ஆசமனங்களினால் உபசரித்தார்கள்.

ருஷிகளின் ப்ரச்னம்

எல்லாப் புராணங்களையும் நன்ருகச் சொல்லும் மஹிமை பொருந்திய ஸூதமஹர்ஷியே! தேவரீரிடம் நாங்கள் பதினெண்புராணங்களையும் இதிஹாஸங்களையும் கேட்டோம். இப்பொழுது நாங்கள் ஸ்ரீஸ்வாமிமலை மாஹாத்மியத்தைக் கேட்க மிகுந்த ஸந்தோஷமுள்ளவர்களாக இருக்கின்ருேம். கேட்கக் கேட்கப் பரமானந்தத்தை அளிக்கும் ஸ்ரீஸ்வாமிநாதனுடைய திவ்ய சரித்திரங்களைச் சொல்லவேணும் என்று நைமிசாரண்யத்தில் உள்ள ருஷீச்வரர்கள் அனைவரும் வேண்டினர்கள். அதைக் கேட்டு ஸூதபுராணிகர் சொல்லுகிருர்.

ஸூதர் சொல்லுகிருர்:—

ஓ தபோதனர்களே! ஸ்ரீஸ்வாமிமலையின் பெருமையையும் ஸ்ரீஸ்வாமிநாதனுடைய திவ்ய சரித்ரங்களையும் சொல்லுவதற்கு என்னாலும், என்னுடைய பரமாசார்யரான ஸ்ரீவேதவியாஸமஹர்ஷியினாலும் ஸாத்யமாகாது. ஆனாலும், ஸ்ரீநந்திகேசருக்கும் அகஸ்தியருக்கும் ஸம்வாதரூபமான ஸ்ரீஸ்வாமிமலை க்ஷேத்ரமாஹாத்மியத்தைச் சொல்லுகிறேன், கேளுங்கள் என்று சொல்லி, தீனதயாளுவும், கங்கை என்னும் மங்கையை முடிமேல் தரித்தவரும், ஸர்வேச்வரனும், உலகமாதாவான பார்வதியுடன் கூடினவருமான பரமேசுவரனையும், தமது ஆசார்யரான ஸ்ரீவேதவியாஸமஹர்ஷியையும் நமஸ்காரம் செய்து எல்லாப் பாபங்களைப் போக்குவதும், எல்லா மங்களங்களையும் அளிப்பதும், ஆயுர்விருத்தி செய்கிறதும், ஸர்வரோகங்களை நாசம் பண்ணுவதும், ராஜாக்களை வச்யம் செய்கிறதும் எல்லாப் பயங்களினின்றும் விடுவிப்பதுமான ஸ்ரீஸ்கந்தனுடைய திவ்ய சரித்திரங்களைச் சொல்லத் தொடங்கினர்:—

முன்னொரு காலத்தில், மஹாதபஸ்வியான அகஸ்திய மஹர்ஷியானவர் ஸ்ரீமஹாதேவனின் குமாரரான ஸ்ரீஸ்வாமிநாதனுடைய திவ்ய சரித்ரங்களை அறிய விருப்பங்கொண்டு ஸமஸ்தமங்களங்களையும் கொடுக்கவல்ல கைலாஸபர்வதத்தின் அடிவாரத்தில் விபூதியைத் தரித்து, பஞ்சாக்ஷரத்தை ஜபித்து வெகுகாலம் தவம் செய்தார். அக்காலத்தில் அகஸ்தியமுனிவருக்கு அநுக்ரஹம் செய்ய எண்ணிப் பரமசிவன், முதல் வாசற்காரப்போனுன நந்திகேசனை அழைத்து, " ஓ நந்திகேசா! நீ அகஸ்தியரிடம் சென்று அவருடைய மனோபீஷ்டங்களை நிறைவேற்றி வருவாயாக " என்று ஆக்ஞாபித்தார். அதைக் கேட்டு நந்திபகவான் விமானத்தில் ஏறி, கும்பஸம்பவரின் ஸமீபம் வந்துசேர்ந்தார். நந்திபகவானைக்கண்ட அகஸ்தியமுனிவர் எழுந்து ப்ரதக்ஷிணநமஸ்காரங்கள் செய்து பூஜித்து, " ஹே பகவன்! பூமியில் தர்மார்த்தகாமமோக்ஷங்களைக் கொடுக்கும் புண்யக்ஷேத்ரங்களான கைலாஸபர்வதம், கந்தமலை, இமயமலை, திருப்பரங்குன்றம், திருப்பதி, திருவண்ணமலை, திருத்தணி, மருதமலை, ஸ்வாமிமலை, பழணிமலை, ரத்னகிரி, கதிர்காமம், சிதம்பரம், திருச்செந்தூர் முதலிய எல்லா க்ஷேத்திரங்களின் இதிஹாஸங்களையும் தேவரீரிடமிருந்து கேட்டிருக்கின்றேன். அவைகளுள் ஸர்வாபீஷ்டங்களையும் கொடுக்கவல்ல அழகு பொருந்திய ஸ்வாமிமலையின் க்ஷேத்ரமாஹாத்மியத்தை மறுமுறை கேட்க மிக்க ஆவலுள்ளவனுக இருக்கிறேன். ஆதலால், க்ஷேத்ர மாஹாத்மியம், குமாரதாரையின் விருத்தாந்தம், ஸ்வாமிபுஷ்கரிணியின் மஹிமை, ஸ்வாமிகூபத்தின் பெருமை, ஸ்ரீகுருநாதனின் அற்புத சரித்ரங்கள் இவைகளை விரிவாய்ச் சொல்லவேண்டும் " என்று நந்திபகவானை வேண்டினுர்.

நந்திபகவான் சொல்லுகிறுர்:—

" ஓ அகஸ்த்ய முனிவரே! அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு புருஷார்த்தங்களையும் அளிக்கவல்ல திருவேரகமான்மியத்தைச் சொல்லுகிறேன்; கேளும். முன்னொரு காலத்தில், கைலயங்கிரியின் கொடிமுடியில் உலகமாதாவான பார்வதியுடன் பரமசிவன் திவ்ய ஆஸனத்தில் வீற்றிருந்தார். அப்போது முப்பத்துமுக்கோடி தேவர்களும், நாற்பத்தெண்ணுயிரம் ருஷீச்வரர்களும் வந்து பரமசிவனை வணங்கி, " ஹே

ப்ரபோ! பஞ்சாக்ஷரமஹாமந்திரத்தை எங்களுக்கு உபதேசிக்க வேண்டும். அதை எவ்விதம் ஜபம் செய்வது என்பதையும் தெரிவிக்கவேண்டும்” என்று வேண்டினார்கள். பரமசிவன் அவர்கள் வசனத்தைக் கேட்டு மனங்கலங்கி, “ஏ தேவர்களே! எனக்கு ஏற்பட்டிருக்கும் சாபத்தினால் அந்த மஹா மந்திரம் எனக்கு மறந்துபோய்விட்டது. என் புத்ரனான குஹனைக் குருவாக அடைந்து அந்த மந்திரத்தை உபதேசித்துக் கொள்ளப்போகிறேன். பிறகு உங்களுக்கு அதை உபதேசிக்கிறேன்” என்று சொல்லி தேவர்களை அனுப்பிவிட்டு, “எக்காலத்தில் நமக்கு ப்ருகுமஹர்ஷியினால் ஏற்பட்டிருக்கும் சாபம் நீங்கும்?” என்று வருந்தி, பார்வதியுடன் கைலயங்கிரியை விட்டுக் கிளம்பி, அநேக க்ஷேத்திரங்கள் சென்று கடைசியாக லோபாமுத்ரையின் அம்சத்தில் உண்டான காவேரிநதியின் வடகரையில் இருக்கும் ஸ்வாமிமலையை அடைந்து ஸர்வலோக சரண்யனாய் சக்திதரனாய் விளங்கும் தன் புதல்வனான குஹனைக் கண்டு ஆனந்தங்கொண்டு மனக்கவலையைவிண்டு, கண்ணில் ஆநந்த பாஷ்பம் பெருக, உலகத்தார்கள் க்ஷேமத்தை அடையவிரும்பி “ஹே புத்ர! ஹே குரோ! எனக்கு பஞ்சாக்ஷரத்தை உபதேசம் செய்யவேணும்” என்று வேண்ட, உடனே ஸ்ரீகுஹன் தன்பிதாவுக்கு மந்திரத்தை உபதேசித்தார். பரமேச்வரன் தான் உபதேசம்பெற்று தன் குமாரனை வாழ்த்தி மந்திரத்தை ஜபித்து ஸித்தி அடைவதன் பொருட்டு திருவிடைமருதூரை அடைந்தார். பரமேச்வரன் “எனக்கு நீர்தான் ஸ்வாமி” என்று சொன்னதால் ஸ்வாமிநாதனென்று பெயர் உண்டானது. இவ்விஷயங்களை அறிந்த ஸகல ருஷிகளும் ஸ்வாமிமலை வந்து ஸ்ரீ குருநாதனைத் தர்சித்து எல்லாப் பாக்கியங்களையும் அடைந்தார்கள் என்று சொன்னார்.

*அகஸ்தியரின் ப்ரச்னம்:—*

ஹே நந்திபகவன்! அந்த கார்த்திகேயன் உபதேசம் செய்த விஷயத்தைச் சொல்லவேணும் என்று வணங்கி வினவினர்.

*ஸ்ரீ நந்திகேச்வரர் சொல்லுகிறார்:—*

சிவசக்திஸ்வரூபமான நாதம் பிந்து இவைகளுடன் ப்ரணவத்தை ஆரம்பத்தில் உச்சரித்து (ய) த என்ற அக்ஷரத்திற்கு

அடுத்த எழுத்தான (ந) என்கிற அக்ஷரமும், (ஹ) ப, என்கிற அக்ஷரத்திற்கு அடுத்த எழுத்தான (ம) என்கிற அக்ஷரமும் (வா) என்கிற அக்ஷரத்திற்கு அடுத்த எழுத்தான (ஶ்ரீ) சி என்கிற அக்ஷரமும், (ஊா) லா, என்கிற அக்ஷரத்திற்கு அடுத்த எழுத்தான (வா) என்கிற அக்ஷரமும், அதன் பிறகு (ய) என்கிற அக்ஷரமும் எல்லாம் சேர்ந்து ஓம் நமச்சிவாய என்னும் பஞ்சாக்ஷரத்தை உபதேசித்து இதுபோன்ற இருபத்தைந்து தத்வங்களை உபதேசித்து அருளினர். வச்யம், ஆகர்ஷணம், ஸ்தம்பனம், உச்சாடனம், மோஹனம், மாரணம், ப்ரதிராஜபயங்கரம், ஸேனுஸ்தம்பனம், கஜஸ்தம்பனம், ஹயஸ்தம்பனம், இவைகள் செய்வதற்கும் பூதப்ரேதபிசாசம் முதலானவைகளை நிக்ரஹம் செய்வதற்கும், அபஸ்மார குஷ்டச்லேஷ்மம் முதலான வியாதிகளை நாசம் செய்வதற்கும், பிரம்மரக்ஷஸை ஓட்டுவதற்கும் ஆசார்யனிடம் உபதேசம் செய்துகொண்டு, கல்பத்தில் சொல்லப்பட்ட த்யான அங்கந்யாஸ கரந்யாஸத்துடன் ப்ரயோகம் செய்தால், தன் மனதின் எண்ணப்படி ஸகலமும் அடையப்படும். இந்த பிரம்மாண்ட மத்தியில் உள்ள ஜகத்தில் ஏழு கோடி மஹாமந்திரங்கள் சொல்லப்பட்டன. எல்லா மந்திரங்களும் பஞ்சாக்ஷரத்தில் நின்றும் உண்டாயின. காயத்ரி மந்திரமானது பிரம்மக்ஷத்திரிய வைச்யர்களுக்குச் சொல்லப்பட்டன. இந்த பஞ்சாக்ஷரமோவெனில், சண்டாளஜாதிவரையில் ஜபம் செய்யலாம் என்று விசேஷமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. காயத்ரியைப்போலவே மிகவும் ரஹஸ்யமாகவே ஜபிக்கவேண்டும். ஹே அகஸ்தியரே! வேதங்களின் ஸாரமாயும் நிர்மல மனஸ்விகளான முனிகணங்களினல் அறியத்தகுந்ததாயும் இருக்கின்ற மஹாமந்திரத்தை உம்மிடம் வைத்த அன்பின் பெருக்கால் சொன்னேன். ச்ரத்தையில்லாதவர்களுக்கு ஒருகாலும் சொல்லக்கூடாது. உமக்கு ஸர்வமங்களங்களும் உண்டாவதற்காகவே சொன்னேன்.

ஸ்ரீஸ்வாமிமலை க்ஷேத்திரமாஹாத்மியத்தில் பஞ்சாக்ஷரமஹிமையைச் சொல்லும் முதல் அத்தியாயம் முற்றிற்று.

---

விசேஷக் குறிப்பு— ஸ்ரீ பாலஸுப்பிரமணியர் உபதேசித்த விஷயத்தை ஸ்காந்தத்தில் சொல்லும் காலத்தில் ஸாக்ஷாத்

பரமேச்வருடைய மடியில் உட்கார்ந்துகொண்டு ஒருவருக்கும் தெரியாது வலது செவிதனில் சொன்னதாகத் தெரிகின்றது. அத்துடன் பரமசிவன் தான் உபதேசம் செய்து கொண்டதை ஏகாந்தத்தில் உலகமாதாவான பார்வதிக்குச் சொல்லும்பொழுது நிஷ்களமான சிவனுன நானும் அநபாயினியான நீயும் சேர்ந்து ஒரு ஸ்வரூபமாக நம்முடைய குமாரன் தோன்றினுன். ஸமஸ்த தேவதாஸ்வரூபமாயும், ஆறு முகமும், பன்னிரண்டு கைகளும், பதினெட்டுக் கண்களும் கொண்ட நமது ஸ்வரூபமான ஸ்ரீஸ்கந்தனுடைய விபூதியை அநேககோடிவர்ஷங்களினுலும் சொல்ல இயலாது. அவனே ப்ரணவஸ்வரூபன்; ஸகல சராசரங்களையும் படைத்து, ரக்ஷித்து, ஸம்ஹரித்து, மும்மூர்த்திஸ்வரூபமாக விளங்குகிறவன்; பக்தவத்ஸலன், பரமபுருஷன், ஆறுசோதியாய் ஆறறிவாய் உதித்தவன், புருவமத்தியில் ஆறுபட்டையாய் உருட்சியுள்ள ஒரு மணி ப்ரகாசம் பொருந்தியிருக்கின்றது. அந்த ஜோதிமணியே ஷண்முகமென்று பெயர். இதனன்றி மூலாதாரத்திற்குமேல் மூன்றிடம் தாண்டி விசுத்தியாகிய ஹ்ருதயஸ்தானத்தில் இடதுபுறந்தனில் ஆறு தலையுடைய ஒரு நாடி இருக்கின்றது. அது சுப்பிரமண்யம் என்று பெயர் கொண்டது; ஆறறிவும் சேர்ந்த சுத்த விவேகமும் ஆறு ஆதாரங்களிலுள்ள ஆறு பிரகாசமும் ஷண்முகம்— ஸத்சித் ஆனந்தமே சுப்பிரமண்யம் என்று பரமசிவம் சொல்லியிருப்பதால் சிவமே சுப்பிரமண்யம், சுப்பிரமண்யமே சிவம் என்கிற எண்ணத்துடன் இக்கலியுகத்தில் உதித்த நாம் அறிந்து உபாஸிக்கவேண்டும். அப்படி அபேதமாக எண்ணுது பேதமாக எண்ணி உபாஸித்தால் நமக்கு அனுகூலமில்லாமல் போகிறதுடன் மஹா கொடிய நரகத்தையும் அனுபவிக்கும்படியாக ஏற்படும். நிற்க (திருவேரகம் என்பது நான்காவது படைவீடு) ஏரகம் என்பது அழகு பொருந்தியதாயுள்ள இடம் என்பது பொருள். படைவீடென்பது அடங்கியிருக்குமிடம் என்பது பொருள். பெரியோர்கள் நன்குய் சாஸ்திரஆராய்ச்சி செய்து ஸ்ரீபால சுப்பிரமண்யம் என்னும் பரம்பொருளின் மஹிமையை அறிந்து உபாஸித்து நன்மையை அடைவார்களாக.

## இரண்டாவது அத்தியாயம்.

அகஸ்தியர் கேட்கின்றார்:—

ஹே நந்திகேசரே! ஸமஸ்த பாக்யங்களையும் அளிப்பவரும் மாயாதீதரும் ஸர்வ வல்லமைகளும் பொருந்தப்பெற்றவருமான பரமேசுவரனை ப்ருகுமஹர்ஷி எதற்காகச் சபித்தார்? அந்தச் சாபத்தை சங்கரன் எதற்காக அங்கீகாரம் செய்துகொண்டார்? இவைகளை எனக்குச் சொல்லவேண்டுமென்றார். இவ்வசனத்தைக் கேட்ட நந்திகேசன் சொல்லுகிறார்:—

ஹே மஹர்ஷே! உம்மால் கேட்கப்பட்ட விஷயம் மிகவும் ரஹஸ்யமானது. மேலும் பிராமணர்களின் மஹிமையும் ஸ்ரீஸதாசிவன் அடியார்களிடம் அதிக அன்புடையவர் என்கிற விபரம் இவைகள் வெளியாகின்றன. நீர் சஞ்சலமில்லாமல் கேளும். நான்கு வேதங்களையும் ஆறு சாஸ்திரங்களையும் அறிந்தவரான ப்ருகு என்று பெயர் கொண்ட ஒரு பிராம்மணச்ரேஷ்டர் தான் தவம் செய்து ஸர்வலோக சரண்யனை பரம்பொருளை அறிய விருப்பங்கொண்டு, காட்டை அடைந்து நல்ல ஆஹாரங்களை விலக்கிக் கந்தமூலாதிகளை புஜித்தும், பிறகு பழம் தீர்த்தம் இவைகளை உட்கொண்டும் சில காலம் உதிர்ந்த சரகுமுதலானவைகளை சாப்பிட்டும், பிறகு காற்றையும் புஜித்து தவம் செய்தும் ப்ரயோஜனமில்லாமல் கைலாஸபர்வதத்தின் அடிவாரத்தில் உட்கார்ந்துகொண்டு, என்னுடைய யோகாப்யாஸத்தை எவர்கள் கெடுக்கின்றார்களோ அவர்கள் முன்செய்த புண்யங்களையும் இழந்து அவர்களுக்கு உபதேசமாகி இருக்கும் மஹாமந்திரங்களும் நாசமடைந்து, தன் புத்தியையும் இழக்கக்கடவர்கள்; எவர்களாக இருந்தாலும் என் சாபத்தை அனுபவித்தே ஆகவேண்டும் என்று சபித்து, ப்ராணயாமம் செய்து ச்வாஸ நிரோதனம் செய்து இந்திரியங்களை அடக்கி, யோகாப்யாஸம் செய்ய ஆரம்பித்தார். இவ்விதம் வெகுகாலம் ஒன்றிலும் பற்றில்லாமல் ஆத்மாராமனை ஞானக்கண்ணால் கண்டு களித்து ஸ்தம்பம்போல் இருக்கும்பொழுது, தேவர்கள் இவருடையஸமாதியைக் கெடுத்துவிடவேண்டுமென்று வெகு ப்ரயாஸப்பட்டும்

எல்லாம் வீணாக ஆகிவிட்டது. ஒரு ஸமயத்தில் அந்த மஹா யோகியின் சிரஸ்ஸானது யோகாப்யாஸத்தினுடைய மஹிமையால் வெடித்து அதினின்றும் நெருப்பானது கிளம்பி ஸர்வ உலகங்களையும் எரிக்க ஆரம்பித்துவிட்டது. அதனால் மிகவும் பயந்த இந்திராதி தேவர்கள் ஸத்யலோகம் வந்து பிரம்மதேவனை நமஸ்கரித்து விஷயத்தைத் தெரிவித்தார்கள். தன்னால் ஒன்றும் செய்யமுடியாததை எண்ணி எல்லாத் தேவர்களுடன் ஸ்ரீவைகுண்டம் வந்து ஸ்ரீமஹாவிஷ்ணுவினிடம் ஸமாசாரங்களைச்சொல்லி, "ஹே ப்ரபோ! அந்த ப்ருகுமஹர்ஷிக்கு அனுக்ரஹம்செய்து எங்களை ரக்ஷிக்கவேணும்" என்று பிரமன் முதலானவர்கள் பிரார்த்திக்க, வாஸுதேவன் தம்மால் முடியாது என்று எண்ணி பிரம்மா முதலானவர்களை அழைத்துக்கொண்டு மந்தர பர்வதம் வந்துசேர்ந்தார். அவ்விடத்தில் உலகமாதாவான தேவியுடன் உல்லாஸமாக வீற்றிருக்கும் மஹேச்வரனைப்பார்த்து ப்ரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்து ஸ்தோத்தரித்து "ஹே தீனதயாளோ! கைலாஸபர்வதத்தின் அடிவாரத்தில் ப்ருகுமஹரிஷியானவர் தங்களைக் காணவேணுமென்று வெகுகாலமாக யோகாப்பியாஸம் செய்துவருகிறார். இப்பொழுது அவரது சிரஸ்ஸானது வெடித்து யோகாக்னி கிளம்பி, எல்லா உலகங்களையும் தஹிக்க ஆரம்பித்துவிட்டது. தாமதித்தால் அந்த அக்னி எல்லாவற்றையும் பஸ்மம் செய்துவிடும். தாங்கள் கைலாஸம் சென்று ப்ருகுமஹர்ஷி எதைக் கேட்கின்றாரோ அது எதுவாக இருந்தாலும் அதைக்கொடுத்து எங்களை இந்த பேராபத்திலிருந்து காப்பாற்றவேண்டும்" என்று பிரார்த்தித்தார்கள். பக்தவத்ஸலனான பரமேச்வரன் ப்ருகுமஹர்ஷிக்கு அனுக்ரஹம் செய்யக்கருதித் தேவர்களை அனுப்பிவிட்டு, பார்வதியுடன் விருஷபவாஹனத்தின்மீது ஏறி கைலாஸபர்வதம் வந்துசேர்ந்தார். அந்த இடத்தில் நிச்சலமான மனதுடன் உட்கார்ந்திருக்கும் மஹர்ஷியைப் பார்த்து, கபாலாக்னியின் உக்ரத்தையும் கண்டு அதிசயித்து பரபரப்புடன் விருஷபவாஹனத்தை விட்டு இறங்கி ப்ருகுமஹர்ஷியின் ஸமீபம் வந்து தன் கையினால் வெடித்த சிரஸ்ஸை ஒன்றாகச் சேர்த்து, "ஹே ப்ருகுமஹர்ஷே! உம்முடைய தபஸ்ஸினாலும் யோகாப்பியாஸத்தினாலும் நான் மிகுந்த ஸந்தோஷமடைந்தேன். உமது விருப்பம் எதுவா

னும் தருகிறேன் எழுந்திரும் கொஞ்சங்கூட ஸந்தேஹம் வேண்டாம் என்றார். அவ்வசனத்தைக் கேட்டதும் ஸமாதியைக் கலைத்து கண்விழித்து எந்த பரமாத்மஸ்வரூபத்தை அந்தர்முகமாகப் பார்த்துக்கொண்டு இருந்தாரோ, அந்த ஸ்வரூபம் தன் முன்னால் ப்ரத்யக்ஷமாகி இருப்பதைக் கண்டு ஆனந்தம் கொண்டு சரணகமலங்களைப் பிடித்துக்கொண்டு ஸ்தோத்திரம் செய்கிறார்.

ப்ருகு ஸ்தோத்திரம்.

ஹே ஜகத்ரக்ஷக! நான் உள்புறம் உம்மை எவ்விதம் பார்த்தேனோ அந்த சந்திரசேகரரான தங்களை நேரில்கண்டேன். என்னுடைய ஜன்மாவானது பரிசுத்தமாக ஆயிற்று. எந்த பரமேசனைக் காணவேணுமென்று மகான்கள் கடுமையாக யோகாப்யாஸம் செய்கின்றார்களோ, எந்தப்பரம் பொருளின் ஸாக்ஷாத்காரத்தை அறியவிரும்பி வேதாத்யயனம் செய்கின்றார்களோ, எந்தபரமனை தர்சிக்கவேணுமென்று உலகத்தோர்கள் தர்மங்களையும்தானங்களையும்செய்கின்றார்களோ,எந்தசிவனைப்பார்க்கவேண்டுமென்று நியமமாக லிங்கத்தைப் பூஜிக்கின்றார்களோ. எந்த சங்கரனைக் காண விருப்பங்கொண்டு வேதாந்திகளாய்த் திரிகின்றார்களோ, அப்படிப்பட்ட பசுபதியை நான் நேரில் கண்டேன். நான் தன்யனாக ஆனேன். கிருதகிருத்யனாக ஆனேன். ஹே ப்ரபோ! நான் அஞ்ஞானத்தினால், என் தவத்தை தேவர்கள் நாசம் செய்துவிடப்போகின்றார்களே என்று பயந்து, என் தவத்தைக்கெடுத்தவர்கள் எவர்களாகஇருந்தாலும் அவர்கள்அஞ்ஞானத்தால் சூழப்பட்டவர்களாக ஆகட்டும் என்று சபித்துவிட்டு யோகம் செய்ய ஆரம்பித்தேன். அது எப்படியிருந்தாலும் சரி; புஷ்பத்திற்கு பழமானது எப்படியோ அப்படியே என்னுடைய யோகத்திற்குத் தாங்களை காண்பதுதான் ப்ரயோஜனம் என்று பரவசமாக நின்றார். இவ்விதம் சொன்ன ப்ருகு மஹர்ஷியின் வார்த்தையைக் கேட்டதும் பகவான் சொல்லுறார்.

பரமசிவ வசனம்.

ஹே தபஸ்வியே! உனக்கு ஹிதமாக என் தர்சனம் இருந்தாலும் ஸரி அஹிதமாக இருந்தாலும் ஸரி, என்னுடைய வரவானது உன் ஸமாதியை நாசம் செய்துவிட்டது. ஆகையினால்

உம்மால் கொடுக்கப்பட்ட சாபத்தைத் நான் ஏற்றுக்கொண்டேன். உமக்கு வேண்டியதைக் கேளும். இதைக்கேட்ட ப்ருகுவானவர் எழுந்து நமஸ்கரித்து 'ஹே தீனதயாகரனே! என்னால் கொடுக்கப்பட்ட சாபத்தைத் தாங்கள் ஹிதமாக ஏற்றுக்கொண்டது பிராமணர்களுடைய மாகாத்மியம் வெளிபாவதற்கும், பக்தர்களின் வார்த்தையின்படி நடப்பவர் என்று உலகத்தோர்கள் அறிந்து கொள்வதற்குமேயொழிய வேறில்லை. நான் பரிகாரத்தையும் சொல்லுகிறேன். தாங்கள் உங்களுடைய குமாரரான முருகனைக் குருவாக அடைந்து என் சாபத்தைப்போக்கடித்துக்கொள்ளவும். பெரியோர்களாக இருந்தாலும் நல்லவிஷயத்தைக் குழந்தைகளிடமிருந்தும் கிரஹணம் செய்யவேண்டியது என்கிற உலகவார்த்தையை நிஜமாகவே தாங்கள் அனுஷ்டித்துக்காட்டவேண்டும்' என்று பிரார்த்தித்தும் எப்பொழுதும் தங்களிடம் மனமானது த்ருடமாக இருக்கவேண்டும் என்றும் வேண்டினார். பரமசிவன் அதின்படியேசெய்வதாகச்சொல்லிவேண்டியவரன்களை ப்ருகுமகர்ஷிக்கு அளித்து அந்தர்த்தானமானார். பிறகு வெகுகாலம் கழித்து தனக்கு ஏற்பட்டிருக்கும் சாபத்தை நிவர்த்தி செய்துகொள்ள வேண்டுமென்கிற எண்ணத்துடன், கைலாஸத்தைவிட்டுக்கிளம்பி அநேகப்ரதேசங்களைக் கடந்து, காவேரி நதியின் கரையில் மங்களகரமான பர்வதத்தில் வஸிக்கும் தன் குமாரனைப்பார்த்து அந்த இடத்தில் உபதேசம் செய்துகொள்ள இச்சைகொண்டு, முன்னொரு காலத்தில் தான் பார்வதிக்கும் ஸ்கந்தனுக்கும் உபதேசித்த பஞ்சாக்ஷர மஹாமந்திரத்தைத் தன் குமாரனிடமிருந்து உபதேசம் செய்துகொண்டு தனக்கு ஏற்பட்டிருக்கும் சாபத்தை விலக்கிக்கொண்டார். ஹே அகஸ்தியரே! பரமசிவன் "எனக்கு நீர்தான் ஸ்வாமி"யென்று சொன்னபடியினால் ஸ்வாமிமலை என்றும், சிவனுக்கு சரவணபவன் குருவாக இருந்ததால் குருமலை என்றும், பூமியானவள் க்ஷேத்திரவிருக்ஷமாக இருப்பதால் தாத்ரீகிரி என்றும்,ஸ்வபாவமாகவே மிகுஅழகுபொருந்தி இருப்பதால் ஸௌந்தராசலம் என்றும்,அதற்குஅனேகம்பெயர்கள் உண்டாயிற்று. அந்தக்ஷேத்திரமகிமையை சொல்வதற்கு பிருஹஸ்பதியும் ஸமர்த்தராகமாட்டார். ஸ்வாமிமலையில் பார்வதியின் செல்வப் புதல்வரான ஸ்ரீஸ்வாமிநாதனைத் தரிசித்தவர்கள் இகத்தில் ஸகலபாக்யங்களையும் அனுபவித்து முடிவில் மோக்ஷத்தை அடை

கின்றார்கள். பக்தி ச்ரத்தையுடன் ஸ்ரீ குருநாதனைத் தரிசனம் செய்கின்றவர்கள் தன்யர்கள். பகவானுடைய திவ்ய திருநாமங்களான ஸ்கந்தன் குஹன் ஷண்முகன் என்கிற நாமங்களை ஸங்கீர்த்தனம்செய்தால், அஷ்டைச்வர்யங்களையும் அடைந்து க்ஷேமத்தை அடைவார்கள். ஷஷ்டி திதியிலாவது சுக்ரவாரத்திலாவது ஸ்வாமியைத் தரிசனம் செய்கின்றவர்கள் திரும்புதல் இல்லாததான மோக்ஷத்தை அடைவார்கள்.

ஸ்ரீஸ்வாமிமலை க்ஷேத்திரமாஹாத்மியத்தில் இரண்டாவது அத்தியாயம் முற்றிற்று.

---

## மூன்றுவது அத்யாயம்.

---

### ஸ்ரீ ஸுப்பிரமணிய அஷ்டோத்திர சதநாமார்ச்சனையின் மஹிமை.

நந்திபகவான் சொல்லுகிறார்:—

குடத்தில் ஜனித்தவரான ஹே அகஸ்தியரே! பஞ்ச மஹாபாதகங்களைப் போக்கடிக்கின்ற பஞ்சாக்ஷரமஹாமந்திரத்தை எவன் மூன்று காலமும் நியமமாக ஸ்னானம் செய்து ஜபிக்கிறானோ, அவன் அநேக அச்வமேதயாகங்கள் செய்த பலனை அடைகிறான். நிர்மலமான மனதுடன் ஒரு நாளைக்குப் பதினையிரம் தடவையாக ஆறு மாதம் வரை ஜபிக்கின்றவன் அணிமாதி அஷ்ட ஐசுவர்யங்களையும் அடைகிறான். பவழமாலை, முத்துமாலை, ருத்திராக்ஷமாலை இவைகளைக் கையில்வைத்துக் கொண்டு ஜபம் செய்தால் ஒவ்வொரு ஜபத்திற்கும் ஆயிரம் பங்கான பலன் கிடைக்கும். இந்த பஞ்சாக்ஷரமஹாமந்திரத்தை ஸ்வாமிமலையிலாவது, நெல்லிவிருக்ஷத்தின் ஸமீபத்திலாவது, ஸ்ரீஸ்வாமிநாதனுடைய ஸந்நிதியிலாவது, குமாரதாரை என்று பெயருள்ள காவேரியின் கரையிலாவது ஸ்வாமிநாதன் ஸந்நிதியில் விளங்கும் புஷ்கரணிப்ரதேசத்திலாவது பிரம்ம தீர்த்தக்கரையிலாவது, ஸ்வாமிபர்வதத்தின் ஈசான திக்கில் இருக்கின்ற சரவணதீர்த்தத்தின் ஸமீபத்திலாவது ஸ்வாமிகூப ப்ரதேசத்திலாவது இருந்து ஜபம் செய்கின்றவர்களுக்கு ஏற்

படும் பலத்தை எடுத்துச்சொல்வதற்கு பரமேச்வரனாலும் முடியாது. பஞ்சாக்ஷரம் பரமேசுவரன் உருத்திராக்ஷம் விபூதி இவைகளில் ஒரே விதமான எண்ணத்தைக் கொள்ளவேண்டும். எவன் ஸ்வாமிமலையில் பஞ்சாக்ஷரத்தை உபதேசம் செய்துகொள்கிறானோ அவன் கோடி வம்சங்களைக் கரையேற்றி எப்போதும் ஸ்ரீ ஸ்கந்தனோடு இருக்கிறான். எவன் விபூதி ருத்திராக்ஷம் சிவன் இவைகளிடம் பேதபுத்தியைப் பண்ணுகிறானோ அவன் மிகவும் பயங்கரமான நரகங்களை அநுபவிக்கின்றான். ஸரஸ்வதிகடாக்ஷம் பெறவேண்டுமானால் ஸ்கந்தஷஷ்டியில் செவ்வையாகப் பகவானை ஆராதித்து ஒவ்வொரு மாதத்திலும் வருகிற ஷஷ்டி திதியன்று நியமமாகப் பூஜை செய்துகொண்டு இரண்டு வருஷம் வரை பக்தியுடன் இவ்விதமே இருக்க வேண்டும். தேவர்களுக்கும் அஸுரர்களுக்கும் யுத்தம் ஏற்பட்ட காலத்தில் தேவராஜன் தேவதாஸ்திரங்களைப் பெறவேண்டுமென்கிற இச்சையுடன் ஸ்வாமிநாத ஸ்வாமியை நமஸ்கரித்து நூற்றெட்டு நாமங்களால் பூஜித்து ஜெயம் பெற்றான். அந்த அஷ்டோத்தரசதநாமங்களால் அர்ச்சனை செய்தால் உடனே ஸரஸ்வதிகடாக்ஷம் பெற்று எல்லோராலும் பூஜிக்கத் தகுதியுள்ளவர்களாக ஆகலாம்.

அகஸ்தியர் கேட்கின்றார்:—

ஹே நந்திபகவன்! ஸ்ரீ ஸ்வாமிநாதனுடைய அஷ்டோத்தரத்தை எனக்குத் தெரிவிக்கவேணும்.

நந்திபகவான் சொல்லுகிறார்:—

அஷ்டோத்தரத்திற்கு கார்க்கிய ரிஷி. அனுஷ்டுப் சந்தஸ். பகவான் கிருத்திகாஸுதன் தேவதை.

(த்யான ச்லோகம்)

த்விஷட்புஜம் ஷண்முக மம்பிகா ஸுதம்
குமார மாதித்ய ஸஹஸ்ர தேஜஸம் ।
வந்தே மயூரா ஸநமக்னி ஸம்பவம்
ஸேனான்ய மத்யாஹ மபீஷ்ட ஸித்தயே ॥

(அஷ்டோத்தரம்.)

1. ஓம் ஸ்கந்தாய நம:
2. ஓம் குஹாய நம:
3. ஓம் ஷண்முகாய நம:
4. ஓம் பாலநேத்ரஸுதாய [நம:
5. ஓம் ப்ரபவே நம:
6. ஓம் பிங்களாய நம:
7. ஓம் கிருத்திகாஸுநு [வே நம:
8. ஓம் சிகிவாஹாய நம:
9. ஓம் த்விஷட்புஜாய நம:
10. ஓம் த்விஷண்ணேத்ராய [நம:
11. ஓம் சக்திதராய நம:
12. ஓம் பிசிதாசிப்ரபஞ்ஜனு [ய நம:
13. ஓம் தாரகாஸுரஸம் [ஹாரிணே நம:
14. ஓம் ரக்ஷோபலவிமர்த்த [னுய நம:
15. ஓம் மத்தாய நம:
16. ஓம் ப்ரமத்தாய நம:
17. ஓம் உன்மத்தாய நம:
18. ஓம் ஸுரஸங்கஸ்ய ரக்ஷி [த்ரே நம:
19. ஓம் தேவஸேனுபதயே [நம:
20. ஓம் ப்ராஜ்ஞாய நம:
21. ஓம் க்ருபாளவே நம:
22. ஓம் பக்தவத்ஸலாய நம:
23. ஓம் உமாஸுதாய நம:
24. ஓம் சக்திதராய நம:
25. ஓம் குமாராய நம:
26. ஓம் க்ரௌஞ்சதாரணுய [நம:
27. ஓம் ஸேநாந்யே நம:
28. ஓம் அக்நிஜன்மனே நம:
29. ஓம் விசாகாய நம:
30. ஓம் சங்கராத்மஜாய நம:
31. ஓம் சிவஸ்வாமினே நம:
32. ஓம் கணஸ்வாமினே நம:
33. ஓம் ஸர்வஸ்வாமினே [நம:
34. ஓம் ஸநாதநாய நம:
35. ஓம் அனந்தசக்தயே நம:
36. ஓம் அக்ஷோப்யாய நம:
37. ஓம் பார்வதிப்ரியநந்தனு [ய நம:
38. ஓம் கங்காஸுதாய நம:
39. ஓம் சரோத்பூதாய நம:
40. ஓம் பாவகாத்மஜாய நம:
41. ஓம் ஆத்மபுவே நம:
42. ஓம் அக்னிகர்ப்பாய நம:
43. ஓம் சமீகர்ப்பாய நம:
44. ஓம் விச்வரேதஸே நம:
45. ஓம் ஸுராரிக்னே நம:
46. ஓம் ஹிரண்யவர்ணுய [நம:
47. ஓம் சுபக்ருதே நம:
48. ஓம் வஸுமதே நம:
49. ஓம் வடுவேஷத்ருதே [நம:
50. ஓம் ஜ்ருமப்பாய நம:
51. ஓம் ப்ரஜ்ருமபாய நம:

52. ஓம் உஜ்ஜ்ரும்பாய நம:
53. ஓம் கமலாஸனஸன்னு [தாய நம:
54. ஓம் ஏகவர்ணாய நம:
55. ஓம் த்விவர்ணாய நம:
56. ஓம் த்ரிவர்ணாய நம:
57. ஓம் சதுர்வர்ணாய நம:
58. ஓம் பஞ்சவர்ணாய நம:
59. ஓம் ப்ரஜாபதயே நம:
60. ஓம் பூஷ்ணே நம:
61. ஓம் கபஸ்தினே நம:
62. ஓம் கணநாய நம:
63. ஓம் சந்திரவர்ணாய நம:
64. ஓம் கலாதராய நம:
65. ஓம் மாயாதராய நம:
66. ஓம் மஹாமாயினே நம:
67. ஓம் கைவல்யாய நம:
68. ஓம் ஸகலாத்மகாய நம:
69. ஓம் விச்வயோனயே நம:
70. ஓம் அமேயாத்மனே நம:
71. ஓம் தேஜோநிதயே நம:
72. ஓம் அநாமயாய நம:
73. ஓம் பரமேஷ்டினே நம:
74. ஓம் குரவே நம:
75. ஓம் ப்ரம்மணே நம:
76. ஓம் வேதகர்ப்பாய நம:
77. ஓம் விராட்வபுஷே நம:
78. ஓம் புளிந்த கன்யாபர்த் [ரே நம:
79. ஓம் மஹாஸாரஸ்வத(ப்ர [த)ாய நம:
80. ஓம் ஆச்ரிதாகிலதாத் [ரே நம:
81. ஓம் சோரக்னாய நம:
82. ஓம் ரோகநாசனாய நம:
83. ஓம் அனந்தமூர்த்தயே [நம:
84. ஓம் ஆனந்தாய நம:
85. ஓம் சிகண்டிக்ருதகேத [னாய நம:
86. ஓம் டம்பாய நம:
87. ஓம் பரமடம்பாய நம:
88. ஓம் மஹாடம்பாய நம:
89. ஓம் வ்ருஷாகவயே நம:
90. ஓம் காரணோபாத்த தே [ஹாய நம:
91. ஓம் காரணாதீத விக்ர [ஹாய நம:
92. ஓம் அநீச்வராய நம:
93. ஓம் அம்ருதாய நம:
94. ஓம் ப்ராணாய நம:
95. ஓம் ப்ராணாதாராய நம:
96. ஓம் பராவராய நம:
97. ஓம் வ்ருத்தஹந்த்ரே [நம:
98. ஓம் வீரக்னாய நம:
99. ஓம் ரக்தாய நம:
100. ஓம் ச்யாமாய நம:
101. ஓம் ஸுபிங்களாய நம:
102. ஓம் பஹுவர்ணாய நம:
103. ஓம் கோபதயே நம:
104. ஓம் தாக்ஷிணாத்யவரப்ர [தாய நம:
105. ஓம் ஸர்வேச்வராய நம:
106. ஓம் லோககுரவே நம:
107. ஓம் அஸுராநீகமர்த்த [னாய நம:
108. ஓம் ஸ்ரீஸ்வாமிநாதாய [நம: ஓம்

இந்த ஸ்ரீஸ்வாமிநாத ஸ்வாமியினுடைய நூற்றெட்டுத்திரு நாமங்களால் ஸ்ரீகுருநாதனைப் பூஜித்தால் ஸர்வாபீஷ்டங்களை யும் அடையலாம். இன்னமும் திருடர்களால் உபத்திரவம் ஏற்பட்ட காலத்திலும், அரசனைக்காணவிரும்பும்போதும், சத்துருவை ஜயிக்க எண்ணிய ஸமயத்திலும் பூதம்வேதாளம்பிசாசு ப்ரும்மரக்ஷஸ் இவைகளினால் பீடை உண்டான காலத்திலும் பக்தியுடன் பகவானுடைய திருநாமங்களை மூன்று தடவை விபூதியில் ஜபித்து விபூதியை தரித்துக்கொண்டால் ஸர்வ உபத்திரவங்களும் நீங்கி ஸுகத்தை அடையலாம். ஸமஸ்த வியாதிகளும் நீங்கும். இவ்விதம் ஆறு மாதம் ஜபித்தால் குஷ்டம் முதலான வியாதிகள் நீங்கும். ஏழு கோடி மஹாமந்திரங்களில்காயத்ரீமந்திரம்எப்படிமேலோ? அஷ்டவஸுக்களில் அக்னி எப்படிமேலோ ? காலங்களில் வஸந்தகாலம் எவ்விதம் மேலோ ? ஸமஸ்த நதிகளில் கங்கை எப்படி மேலோ, அது போல் எல்லா அஷ்டோத்தரசதநாமங்களையும் விட ஸ்ரீஸ்வாமிநாதனுடைய நூற்றெட்டு நாமங்கள் சிறந்தது. நீரும் இதை ஜபித்துவந்தால் ஆண்டவன் பிரத்தியக்ஷமாக ஆகி உமக்கு வேண்டியதை அளிப்பார்.

ஸ்ரீஸ்வாமிமலை க்ஷேத்திரமாஹாத்மியத்தில்
ஸ்ரீ குருநாதன் அஷ்டோத்தரசதநாமங்களைச் சொன்ன
மூன்றாவது அத்தியாயம் முற்றிற்று.

---

## நான்காவது அத்தியாயம்.

---

### (ஸ்ரீ ஸ்வாமிநாதஸ்வாமியின் முன்னிலையிலிருக்கும் ஐராவதத்தின் வரலாறு)

நந்திபகவான் சொல்லுகின்றார்:—

ஹே அகஸ்தியரே ! கேளும், முன்னொரு காலத்தில் ஹரிகேசன் என்கிற ஒரு ராக்ஷஸன் ஈச்வரனைக் குறித்து தவம் செய்து அநேக வரன்களைப் பெற்று, கணக்கில் அடங்காததான ராக்ஷஸப்படைகளுடன் பூமியில் உள்ளவர்களை ஜயித்து, கடைசியாக அஷ்டதிக்பதிகளையும் ஜயிக்கவேண்டுமென்கிற எண்ணம்

கொண்டு ஸைந்யங்களுடன் அமராவதிபட்டணம் வந்துசேர்ந்து யுத்தத்தைத் தெரிவிக்கும் சங்கநாதம் செய்தான். அதைக் கேட்டு தேவராஜன் விஷயங்களை அறிந்து முப்பத்துமுக்கோடி தேவர்களையும் யுத்தம் செய்வதற்காக அனுப்பினன். அவ் வார்த்தையைச் சிரமேற்றுங்கி கவசங்களைத் தரித்து வில்லைக்கரங் களில் ஏந்தி குந்தம் பரிகம் பிண்டிபாலம் முதலான ஆயுதங்களைத் தரித்த தேவர்கள் யுத்தம் செய்ய ஸன்னத்தர்களாய் இருக்கும் ராக்ஷஸர்களுடன் சண்டைசெய்தார்கள். வெகுகாலம்வரை இரு திறத்தார்களும் ஓய்வு ஏற்படாமல் பார்த்தவர்கள் மயிர்க்கூச் சல் அடையும்படியான யுத்தம் செய்தார்கள். கடைசியாக ராக்ஷஸர்கள் கைகளை ஓங்கி தேவர்களை அடித்து சின்னபின்னப் படுத்தி அமராவதியை கைக்கொள்ள யத்தனிக்கும்போது, இச் செய்தியை அறிந்த தேவேந்திரன் அதிதுரிதமாக வாஹன மேறி வஜ்ராயுதத்தைத் தரித்து ராக்ஷஸர்கள் முன்னிலையில் வந்துநின்று வீரவாதம் பேசி ராக்ஷஸர்களை நாசம் செய்தான். இதை அறிந்த ஹரிகேசன் உடனே புறப்பட்டு அநேக பாணங் களால் இந்திரனை அடித்து கையில் வைத்திருந்த வஜ்ராயுதத் தைப் பொடியாக்கி ஹிம்ஸித்தான். ஆயுதமில்லாமல் தேவ ராஜன் மனம் கலங்கி முன்னின்று யுத்தம் செய்யச் சக்தியில் லாமல் புறம் காட்டி ஓட ஆரம்பித்தான். அந்த ஸமயத்தில் அசரீரி உண்டாயிற்று— "ஹே தேவேந்திரா! இந்த ராக்ஷ ஸர்களை ஜயிக்கவேண்டுமென்று உனக்கு இச்சையிருந்தால் சீக் கிரமாகக் காவேரிக்கு அருகாமையில் இருக்கும் ஸ்ரீ ஸ்வாமிமலை சென்று, ஸ்வாமி கூபத்தில் ஸ்நாநம் செய்து ஸ்ரீஸ்வாமிநாதனை யதோக்தமாகப் பூஜை செய். அந்த பரமாத்மாவினுடைய அரு ளால் மறுபடியும் ராக்ஷஸர்களை ஜயித்து ராஜ்யத்தை அடை வாய்' என்று. இதைக்கேட்டு உடனே தேவேந்திரன் ஸ்ரீஸ்வாமிமலை வந்துசேர்ந்து ஸ்வாமிகூபத்தில் ஸ்நாநம் செய்து பரிசுத்தமான மனதுடன் த்வாரபாலர்களை நமஸ்கரித்து ஸன்னி தானம் வந்து ஸ்ரீதாரகபரமேச்வரரைப் பூஜித்துப் பிறகு ஸ்ரீஸ்வாமிநாதஸ்வாமிக்கு அபிஷேகாதிகள் செய்துவைத்து பாரி ஜாதமலர்களினல் அர்ச்சித்து தேவர்மிருதங்களை நிவேதனம் செய்து ஆனந்தபரவசனுகி மெய்சிலிர்க்கப் பகவானை ஸ்தோத் திரம் செய்கின்றுன்.

ஹே தேவதேவனே ! பார்வதியின் திருக்குமாரனே ! மயில்வாஹனனே ! ஸர்பாபரணனே ! ஸ்ரீ சங்கரன்செல்வனே! பிரம்மாவினுல் ஸ்துதிக்கப்பட்டவனே ! உமக்கு அநேக நமஸ்காரம். ஹே ப்ரபோ ! நாங்கள் எல்லோரும் தங்களுடைய அனுக்ரஹங்களினுல் ஸுகமாக இருந்துவருகிறோம். எங்களுடைய வாழ்வும் நீரே; உறவினரும் நீரே. ஒவ்வொரு ஸமயங்களிலும் எங்களுக்குக் கஷ்டம் வந்த காலங்களில் தேவரீர் தான் காப்பாற்றியிருக்கிறீர்கள். இப்பொழுது நான் மஹா பாபிகளான ராக்ஷஸர்களினுல் படும் துன்பம் சொல்லினும் அடங்காது.எல்லாவற்றையும் இழந்துவிட்டேன். எனக்குத்தேவரீரைத் தவிர்த்து வேறு கதி கிடையாது. தேவரீர்தான் என்னைக் காப்பாற்றவேண்டும் என்று ஐந்து ச்லோகங்களால் ஸ்தோத்திரம் செய்தான்.

ஸ்ரீ குஹபஞ்ஜரபஞ்சக ச்லோகம்

ஸோமஸூர்யஹுதபுக்ஸமவர்ணை:
லோசனைரதிசுபாஸுரவைரின் ।
ஸம்ஹராசு மஹதீமரிஸேனும்
த்வம் க்ஷணேன க்ருபயா ஹரஸூனோ ॥ (1)

ஸ்வபித்ருகுருமநீசம் வந்தியமாசாபதீசம்
பரிசிதபுஜகேசம் பக்தஸந்தானபாசம் ।
அஸுரகுலவிநாசம் தேவசோகப்ரணாசம்
நமத ஸததமஸ்மின் பர்வதே ஸ்வாமிஸம்ஜ்ஞே ॥ (2)

ஸுரபதிமஸுராரிம் தேவரக்ஷாஸு தக்ஷம்
ஸகல முநிஜநாநாம் வந்த்யமாநாங்க்ரி பத்மம் ।
பரிவ்ருதமமரௌகை: பங்கஜைரர்ச்யமானம்
ஸகல நிகமவேத்யம் ஜான்ஹவிலாள்யமானம் ॥ (3)

ஹிமகிரிதநயாயா அர்ப்பகம் க்ருத்திகாபி:
ஸமதிகமபிரக்ஷ்யம் கார்த்திகேயம் க்ருதார்த்தம் ।
ஸகலஜநகஸூநும் தத்வதீபப்ரகாசம்
ஹுதவஹஸமரூபம் வல்லிகாப்ராணநாதம் ॥ (4)

கவிபிரதிஸுபூஜ்யம் கல்பிதார்த்தப்ரகாசம்
ஸ்வஜனஹ்ருதயபீடே நித்யவாஸம் நிதாந்தம் ।
அஹமபிமதஸித்யை தம் புனப்புண்யபூதம்
சிகிவரக்ருதகேதும் க்ரௌஞ்சபேத்தாரமீடே ॥ (5)

உடனே ஷண்முகன் ப்ரத்யக்ஷமாகி ஹே இந்திரா! நீ ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம் என்று சொல்லி, ராக்ஷஸர்களின் நாசத்திற்காக ஸம்மோஹனாஸ்திரத்தைக் கொடுத்தனுப்பினார். அதைப்பெற்றுக்கொண்டு இந்திரன் தனது வைரிகளான ராக்ஷஸர்களை ஹதம்செய்து ஜயத்தை அடைந்தான். மறுபடியும் ஸ்வாமிமலை வந்து தனது வாஹனமான ஐராவதத்தை ஸ்வாமிநாதஸ்வாமியின் முன்னிலையில் ஞாபகார்த்தமாக நிறுத்தி, பகவானிடம் விடை பெற்றுக்கொண்டு ஸுகமாக தேவலோகம் சேர்ந்தான். ஆகையால் இந்திரனால் ஸ்தோத்ரம் செய்யப்பட்ட குஹபஞ்ஜரத்தை எவர்கள் அனுதினமும் பாராயணம் செய்து வருகின்றார்களோ, அவர்கள் ஸகல ஐச்வர்யங்களையும் பெற்று எல்லாக் கார்யங்களிலும் ஜயத்தை அடைவார்கள். மிகவும் ரஹஸ்யமாயும் ஸகல ஐச்வர்யகரமாயுமுள்ள இந்தச்சரித்திரத்தை உம்மிடம் வைத்த அன்பினால் சொன்னேன். ஸமஸ்த மங்களமும் உமக்கு உண்டாகக்கடவது.

ஸ்ரீஸ்வாமிமலை க்ஷேத்திரமாகாத்மியத்தில்
குஹபஞ்ஜரம், ஐராவதத்தினது வரலாறு, இவைகளைச் சொன்ன
நான்காவது அததியாயம் முற்றிற்று.

## ஐந்தாவது அத்தியாயம்.

நந்திகேசர் சொல்லுகின்றார்—

ஹே அகஸ்தியரே! க்ஷேத்திரமாஹாத்மியத்தைச் சொல்லுகிறேன் கேளும். மஹாதபஸ்வியாயும் ஸர்வவித்யாபாரங்கதருமான பிருகதச்வர் என்று பெயர் கொண்ட ஓர் அந்தணர் சித்தசுத்தி ஏற்பட்டு ஸ்வப்ரகாசனான ஆத்மாராமனைக் கண்ணால் காணவிருப்பங்கொண்டு புண்யக்ஷேத்திரங்களான கேதாரம், நைமிசாரண்யம், காசி, ப்ரயாகை, புஷ்கரம், கோவர்த்தனம் கோமதி, ஹரித்வாரம், கோபர்வதம், விருத்தபர்வதம், கௌரீமாயூரம், தலைக்காவேரி, குக்ஷிபர்வதம் முதலான க்ஷேத்திரங்களுக்குச் சென்றும், புண்யதீர்த்தங்களில் ஸ்நாநம் செய்தும், தன் மனவிருப்பம் நிறைவேறாமல் கடைசியாக முன்செய்த புண்யத்தினால் திருவேரகம் வந்து புண்யதீர்த்தங்களில் ஸ்நாநம் செய்து

ஸ்ரீஸ்வாமிநாதப்ரபுவைத் தர்சனம் செய்தவளவில் மனச்சுத்தி பெற்று மிக்க ஸந்தோஷமடைந்து அவ்விடத்திலேயே தன் காலம் முழுவதையும் கழிக்க இச்சைகொண்டு க்ஷேத்திரகூபத்தின் வடக்குப்ரதேசத்தில் ஒரு மடம் ஸ்தாபனம் செய்து, பஞ்சாக்ஷரமஹாமந்திரத்தை ஜபம் செய்துவந்தார். ஆறுமாத காலத்திற்குள் தனது விருப்பம் நிறைவேறி அளவிடமுடியாத ஆனந்தவாரிதியில் மூழ்கி அவ்விடத்தில் வாஸம் செய்துவந்தார். அப்பொழுது பிரம்மஹத்தியினாலே சூழப்பட்ட ஒரு பிராமணன் தன் ப்ரஜ்ஞையில்லாமல் பிசாசைப்போல் எங்கும் ஓடி அலைந்து ஸ்வாமிமலை வந்துசேர்ந்தான். அவ்விடம் வந்ததும் அவனுக்கு ஞானம் ஏற்பட்டு தான் முன்செய்த தப்பிதத்தைஎண்ணி மனம் வருந்திக் கோவிலில் மடத்தில் வஸிக்கும் பிருஹதச்வரைக்கண்டு ஓடோடியும் வந்து நமஸ்கரித்து, 'பெரியோரே! நான் தெரியாமல் பிராமணனைக்கொலைசெய்துவிட்டேன்,என்னைப்பிரம்மஹத்திசூழ்ந்துகொண்டது. அதனால் கஷ்டப்படுகிறேன்; என்னைக்காப்பாற்றவேண்டும்'என்றுசரணாரவிந்தங்களைப்பிடித்துக்கொண்டுபிரார்த்தித்தான்.உடனே பிருகதச்வமகர்ஷியானவர் "ஹேபிராமணா! நீ பூர்வபுண்யவசத்தினால் இந்த க்ஷேத்திரத்தை வந்து அடைந்தாய்; உனக்கு இனிமேல் யாதொருவிதமான பயமும் வேண்டாம். கொஞ்சகாலத்திற்குமுன் இந்த க்ஷேத்திரத்தில் நடந்த ஒரு செய்தியைச் சொல்லுகிறேன். கேள், மஹாபாபங்களைச் செய்பவனும் மகாகொடியவனும் கோரரூபியாயும் தெய்வங்களையும் வஞ்சிப்பவனும் பெரிய சரீரமுள்ளவனும் உள்ள ஒரு பிராமணாதமன் தினம் பிறர்களுடைய வஸ்திரங்களைத்திருடி அதனால் கிடைக்கும் தொகையை வைத்துக்கொண்டு துர்வினியோகம் செய்து வந்தான். இப்படியே வெகுகாலமாக ஜீவனம் செய்துவரும்போது அந்தப் பாபத்தினால் வெண்குஷ்டம் ஏற்பட்டுவிட்டது. எல்லா ஜனங்களும் அவனைவெறுக்க ஆரம்பித்துவிட்டார்கள். அந்த ச்வேதகுஷ்டன் பசியால் வருந்தி தன்னை ஆதரிப்பவர்கள் ஒருவரும் இல்லாமல் தவித்து எங்கும் சென்று கடைசியாக ஸ்வாமிமலை வந்துசேர்ந்தான். அன்றிரவு ஆகாரத்தை உத்தேசித்து ஒரு வீட்டில் புகுந்து உள்ளே சென்று அன்னத்தைத் திருட்டுத்தனமாக சாப்பிட்டுக்கொண்டிருந்தான். உள்ளே ஓசை உண்டானதைக் கேட்ட அந்த வீட்டுக்காரன் வெளியில் வந்து ஜனங்களை அழைத்துக்கொண்டு உள்ளே சென்று

ச்வேதகுஷ்டனைக் கண்டு திருடனென்று எண்ணி அவனைப் பின் கட்டாகக் கட்டி அடித்துத் தொந்தரவு செய்தும், அவன் மௌன மாக இருப்பதை அறிந்து வெளியில் இழுத்துவந்து கோவிலிற் குள் அழைத்துச் சென்று அவனைக் கைகளினாலும் தண்டத்தி னாலும் அடித்தும் கன்னத்தில் அரைந்தும் கடைசியில் கிணற்றில் தள்ளியும் விட்டார்கள். இரவு முழுவதும் ச்வேதகுஷ்டன் கிணற்றில் உயிருக்கு மன்றாடி மூர்ச்சையாக ஆனான். ப்ராதக் காலத்தில் எல்லோரும் கரையில் இழுத்துப்போட்டுப் பார்க் கும் காலத்தில் மார்பில் பூணூல் இருப்பதைக் கண்டு விப்ரன் என்று உணர்ந்து மூர்ச்சையைத் தெளிய வைத்தார்கள். அக் காலத்தில் அவன் ஸகல பாபங்களாலும் விடுபட்டு திவ்யமய மான தேஹத்தோடு கோடிஸூர்யப்ரகாசனாக ஆனான். எல்லோரும் பார்த்துக்கொண்டிருக்கும்போது கைலாஸத்திலி ருந்து ப்ரமதகணங்கள் சந்திரனுக்குச் சமானமான விமானத் தைக் கொண்டுவந்து இந்த ச்வேதகுஷ்டனை திவ்யபுருஷனை விமானத்தில் ஏற்றி அரம்பயர்கள் ஆட தேவர்கள் கொண்டாட கந்தர்வர்கள் பாட கைலாஸம் சென்றார்கள். ஹே ப்ராம்மணா! நான் இதை நேரில் பார்த்தேன். அன்றுமுதல் க்ஷேத்திர கிணற் றில் மூன்று காலமும் ஸ்னானம்செய்து சிவதேசிகனான ஸ்ரீகுருநா தனைத் தர்சனம் செய்து வருகிறேன். ஆனதால் நீயும் உன் பாபங்கள் விலகவேண்டிய நிமித்தம் ஸ்நானம் செய்து ஸ்வாமி யைத் தரிசிப்பாயாக" என்று சொன்னார். உடனே அந்த விப் ரன் ஸ்வாமிகூபத்தில் ஸ்னானம் செய்து மகாபாபங்களால் விடு பட்டு ஸ்ரீஸ்வாமிநாதனைத்தர்சனம் செய்து க்ஷேமத்தை அடைந் தான். ஸ்வர்ணத்தை திருடினதோஷம் பிரும்மஹத்திதோஷம் ஸுராபான தோஷம் ஆசார்யன் படுக்கையிலிருந்த தோஷம் சேர்க்கையினால் ஏற்பட்ட தோஷம். இந்த பஞ்சமஹாபாதகங்க ளும் க்ஷேத்திர கூபத்தின் ஸ்னானத்தினால் விலகிவிடும். இந்த அத்யாயத்தைப் பாராயணம் செய்தவர்கள் கேட்டவர்கள் எல் லோரும் க்ஷேமத்தை அடைவார்கள். ஹே அகஸ்தியரே! நீர் பரமபாகவதரானதால் உமக்கு இதைச் சொன்னேன். ஆஸ்தி கர்களுக்கு உபதேசம் செய்யும்.

ஸ்ரீ ஸ்வாமிமலை மாகாத்மியத்தில் க்ஷேத்திர மஹிமையைச் சொன்ன ஐந்தாவது அத்தியாயம் முற்றிற்று.

## ஆறுவது அத்தியாயம்.

ஸ்ரீ நந்திகேச பகவான் சொல்லுகிறார்:—

ஹே அகஸ்தியரே! கிருதயுகத்தில் மந்வந்தர கல்பத்தில் ஆஹிதாக்னியான யஜ்ஞமித்திரன் என்கிற ஒரு பிராமணச்ரேஷ்டர் இருந்தார். அவர் முக்கடன்களினின்றும் விடுபட்டு மோக்ஷ பதவியை அடையவிரும்பி அனேக காலம் தவம் செய்து, பிறகு தனக்கு புத்ரன் இல்லாமையினால் வருந்தி நர்மதா நதி தீரத்தில் வஸித்து ஸாக்ஷாத் பரமேசுவரனை மிகுந்த பக்தியோடு பூஜை செய்து வந்தார்.

இவ்விதம் விடாமுயற்சியுடன் பூஜை செய்துவரும் அந்த யக்ஞமித்திரருக்குப் பன்னிரண்டாவது வருஷத்தில் பரமதயாகரனை பரமேச்வரன் ப்ரத்யக்ஷமானார். ஈசான தத்புருஷ அகோர வாமதேவ ஸத்யோஜாதம் என்று சொல்லும்படியான ஐந்துமுகங்களோடுகூடிய முக்கண்ணனை பார்வதியோடு விருஷப வாஹனத்தில் தன் முன்னால் பார்த்து, எழுந்து நமஸ்கரித்து ஆநந்தக் கண்ணீர் பெருக பகவானை ஸ்தோத்தரித்து தனக்கு புத்திரனைக் கொடுக்கவேணுமென்று பிரார்த்தித்தார். உடனே ஸதாசிவன் 'ஹே யக்ஞமித்திர! உமக்கு இந்த ஜன்மாவில் ஸத்புத்ரன் கிடையாது, இருந்தாலும் உம்முடைய தவத்திற்குப் பலனாக (மூகனை) ஊமைப் பிள்ளையைக் கொடுக்கிறேன். ஏனென்றால் நீர் முன் ஜன்மாவில் குழந்தையாகவிருக்கும் காலத்தில் தெரியாமல் மொக்காக இருக்கும் புஷ்பங்களைக் கொய்து எனக்குப் பூஜை செய்தாய், அதினால் இப்பொழுது மூகனை புத்திரனைக் கொடுத்தேன். நிற்க, தேவர்களாக இருந்தாலும் ஸரி அவரவர்கள் முன் செய்த கர்மவினையை அனுபவித்துத்தான் ஆகவேண்டும். அது தெரியாமல் தைவங்களை நொந்துகொள்கிறார்கள். நீயும் முன் ஜன்மத்தில் செய்த பூஜாபலனாக மூக புத்திரனை அடைவாயாக" என்று அனுக்ரஹித்து அந்தர்த்தானமானார். யக்ஞமித்திரரும் அனுபவிக்க வேண்டியதை அனுபவித்துத் தான் தீரவேண்டுமென்று எண்ணி பத்னியுடன் தன் நகரம் வந்து சேர்ந்தார். கொஞ்சகாலத்திற்கெல்லாம் சிவனுடைய அருளால் ஒரு புத்திரனை அடைந்தார். ஸர்வலக்ஷண ஸம்பன்னனாக இருந்தும் ஐந்தாவது வயதில் பேசும் திறமை இல்லாமல் இருப்பதை

நினைந்து வருத்தமடைந்து குழந்தையின் தாயார் தன் கணவனைப் பார்த்து 'ஹே நாதா ! நமது புதல்வன் இப்படியே இருந்தால் எல்லோரும் பரிஹஸிப்பார்களே; ஏதாகிலும் பரிஹாரம் செய்ய வேண்டாமா ? க்ஷேத்ரங்கள் தோறும் சென்று புண்ணிய தீர்த்தங்களில் ஸ்னானம் செய்து தர்மங்களைச் செய்துவந்தால் அதினுல் நமது செல்வன் பேசும் திறமையை அடையலாம் என்கிற எண்ணம் உண்டாகி இருக்கிறது. தாங்கள் வேண்டிய கார்யங்களைச் செய்யவேணு'மென்று மிகுந்த வணக்கமாய் தெரிவித்தாள். அவ்வார்த்தையைக் கேட்ட யக்ஞமித்ரர் 'ஹே ப்ரியே ! நாம் எக்கார்யம் செய்தபோதிலும் நமது அபீஷ்டம் ஒருநாளும் நிறைவேருது. நாம் செய்த கர்மவினையை அனுபவித்துத் தான் தீரவேண்டும். நான் எங்கு செல்வேன். இதை யாரிடம் சொல்வேன்' என்று மனம் பதறி ஒன்றும் புரியாமல் இருக்கும்போது, ஒரு ஆகாசவாக்கு உண்டாயிற்று.

அசரீரி:—

"ஹே விப்ரச்ரேஷ்டரே! நீர் யாதொன்றுக்கும் கவலைப்பட வேண்டாம். உம்முடைய குமாரன் பேசும் திறமையையடைய வேண்டுமென்கிற எண்ணம் உமக்கு இருந்தால் நான் சொல்லுகின்ற உபாயத்தைச் செய்யும். உம்முடைய மனவிருப்பம் நிறைவேறும். பற்பல விருக்ஷங்களால் நிறைந்ததாயும், பிக, சுக, சாரிகம் முதலான பக்ஷிகளின் சப்தங்களோடு கூடினதாயும் ஸமஸ்த தேவர்களால் ஸேவிக்கப்பட்டதாயும் மிக ரமணீயமாயும் உள்ள ஸ்வாமிமலை என்று பெயர் கொண்ட ஒரு மலை காவேரியின் அருகாமையில் விளங்குகின்றது. அம்மலையினில் பக்தர்களுக்கு வேண்டியதை அளித்துக்கொண்டு சக்தி என்கிற ஆயுதத்தைத்தரித்து கார்த்திகேயன் வஸிக்கிருர். அவர் தன்னைத்தரிசித்தவர்களின் மஹாபாபங்களைப் போக்குபவர். ஸ்வாமிகூபத்தில் ஸ்நாநம் செய்துவருவாயாக. இன்னமும் கிருத்திகாசுத்தத்தில் சுக்லபக்ஷஷஷ்டியானது ஸ்கந்தஷஷ்டி என்று சொல்லப்படுகிறது. அந்த ஸ்கந்தஷஷ்டி முதற்கொண்டு பௌர்ணமிவரையில் ஸ்வாமிகூபத்தில் குழந்தையை ஸ்நாநம்செய்துவைத்து பகவானுக்கு அபிஷேகாதிகள் நடத்தி நியமமாக இருந்தால் அந்த குருமூர்த்தியின் அருளால் உன்னுடைய குமாரன் ஸரஸ்வதீகடாக்ஷம் பெறுவான்' என்று அசரீரி சொல்லிற்று. இதைக்கேட்டதும் மஹா

ஸந்தோஷத்துடன் புத்ரனையும் பத்னியையும் அழைத்துக் கொண்டு பிரயாணமாகி அநேகம் க்ஷேத்திரங்களைத் தர்சனம் செய்துகொண்டு ஸ்வாமிமலையின் ஸமீபத்தில் விளங்கும் திருவேரகம் என்று வழங்குகின்ற ஸ்கந்தபுரம் வந்தார். அவ்விடத்தில் ஸ்ரீஷண்முகன் பாசுபதாஸ்திரம் பெறவேண்டி, செய்து பூஜித்த ஸ்கந்தலிங்கத்தையும் இன்னும் அநேகம் தபஸ்விகளால் பிரதிஷ்டை செய்யப்பட்ட லிங்கங்களையும் தர்சனம் செய்து கடைசியாக ஸ்வாமிமலை வந்துசேர்ந்தார். வந்து கோபுரதர்சனம் செய்து நமஸ்கரித்து, ஸர்வ பாபங்களையும் போக்கி, அஷ்டைச்வர்யங்களை அளிக்கும் குமாரனைத் தர்சனம் செய்ய எண்ணித் தீர்த்தரூபிணியாக வந்தவளான காவேரி என்று பெயருள்ள கங்கையைக் கண்டார். பிராம்மண க்ஷத்திரிய வைச்ய சூத்ரர் முதலான நான்கு வர்ணாச்ரமிகளாலே நிறையப்பட்ட நான்கு வீதிகளோடு கூடினதாயும் ஆகாயத்தை அளாவின மாடமாளிகை உள்ள வீடுகளினல் அலங்கரிக்கப்பட்டதாயும் எங்கும் வேதகோஷமும் நாமஸங்கீர்த்தனமும் செய்கின்ற பக்தர்கள் வஸிக்கின்ற ப்ரதேசங்களோடு கூடினதாயும் உள்ள ஸ்ரீஸ்வாமிமலையைப் பார்த்து ஸந்தோஷமடைந்து புண்யதீர்த்தங்களில் ஸ்நாநம் செய்து ஸ்ரீஸ்வாமிநாதஸ்வாமியைத் தர்சனம் செய்து நமஸ்கரித்து ஸ்தோத்திரம் செய்து அசரீரி வாக்கின்படியே ஸ்கந்தஷஷ்டியன்று விருதாரம்பம் செய்து பத்துத் தினம் வரையிலும் பக்திச்ரத்தையுடன் ஸ்வாமி கூபத்தில் புத்ரனுக்கு ஸ்நாநம் செய்வித்து விமரிசையாக ஸ்ரீமுருகனுக்கு அபிஷேகாதிகள் நடத்தி பிறகு பிராம்மண ஸந்தர்ப்பணை செய்து பௌர்ணமியன்று விருதத்தைப் பூர்த்தி பண்ணி ஸன்னிதிஅடைந்து ஸ்தோத்திரம் செய்தார். அக்காலத்தில் குருநாதனுடைய திருவருளினல் மூகனுக இருந்த புத்ரன் பேசுந்திறமையைஅடைந்து ஸகலகலாவல்லவனுக ஆகிப் பகவானை மூன்று ச்லோகத்தினல் ஸ்தோத்தரித்தான். தேவர்கள் புஷ்பமாரி பொழிந்தார்கள். யஜ்ஞமித்திரர் பரம ஸந்தோஷத்தை அடைந்து தன் பத்நியுடனும் ஸரஸ்வதீ கடாக்ஷம் பெற்ற தன் புத்ரனுடனும் வாழ்ந்துவந்தார்.

அகஸ்தியர் வினவுகிறுர்—

ஹே பகவந்! மூகனுல் ஸ்துதிக்கப்பட்ட அந்த மூன்று ச்லோகங்களையும் சொல்லவேண்டும்.

நந்திபகவான் சொல்லுகிறார்—

ஸத்யம் சின்மயமத்விதீயமமலம் வேதாந்தஸாரம் சிவம்
தேவானுமபயப்ரதம் பசுபதேப் புத்ரஞ்ச தத்ஸ்வாமினம் l
மாயாவாப்ததனும் கிருபாளுமநிசம் மூகம் ச வாசாம்பதிம்
கர்த்தும் ய:ப்ரபவத்யநந்தமகிமா தம் தேவவந்த்யம் பஜேll (1)

ஸத்பிஸ்ஸந்ததமந்தரங்கஜநிதே ஹ்ருத்பங்கஜே தீபவத்
பாஸ்வந்தம் பரதத்வரூபகலிதைர் திவ்யை:ஸ்திரிபிர்மூர்த்திபி: l
த்யாயே த்யேயதனும் ஸுராஸுரகுரும் தேவாக்ரகண்யம் சுபம்
சக்தீ சூலகதாப்ருதம் மம மஹாமூகஸ்ய சூர்யாக்ருதிம் ll

ஆதிக்ஷாந்தமயைச்ச வர்ணவிபவை: அக்ன்யர்க்கசந்த்ராதிபி:
ஸ்துத்யம் தத்பதலக்ஷ்யமுக்தமமலம் ஸ்ரீநீலகண்டாத்மஜம் l
கார்யம் காரணமத்புதாத்ருததனும் ஸர்வேச்வரம் ஸர்வதம்
வந்தே ஸ்ரீகிரிஜாஸுதம் முநிவரைரத்யாதரேணாச்ரிதம் ll

இந்த மூகஸ்தோத்திரத்தை எவர்கள் தினம் பாராயணம் செய்கின்றார்களோ, அவர்கள் ஸரஸ்வதீகடாக்ஷம் லக்ஷ்மீகடாக்ஷம் பெறுவார்கள். அவர்களுடைய வம்சத்தில் பிறக்கின்றவர்கள் ஸகல வித்தைகளிலும் வல்லமை உள்ளவர்களாக ஆவார்கள், நல்ல நிலைமையை அடையவிரும்பினவர்கள் மூன்றுகாலமும் நியமமாகப் பாராயணம் செய்துவந்தால் ஸ்ரீகுருநாதன் இஹபரமிரண்டிலும் ஸௌக்யங்களை உண்டுபண்ணுவார்.

**ஸ்ரீஸ்வாமிமலை க்ஷேத்ரமாகாத்மியத்தில் க்ஷேத்ரமாகாத்மியத்தைச் சொன்ன ஆறுவது அத்தியாயம் முற்றிற்று.**

## ஏழாவது அத்தியாயம்.

### (ஸ்வாமிகூபத்தின் மஹிமை)

நந்திபகவான் சொல்லுகிறார்—

ஹே அகஸ்தியரே! பித்ருக்கள் மோக்ஷத்தை அடைகின்ற விஷயத்தைச் சொல்லுகிறேன். கேளும். கிருதயுகத்தில் வேதங்களை நன்றாக அப்யஸித்தவரும் சிவபூஜை செய்வதில் நிஷ்டரும் ஆன ஹரிமித்திரர் என்ற ஒரு பிராமணச்ரேஷ்டர் குருக்ஷேத்திரத்தில் வஸித்து அனேகம் சிஷ்யர்களுக்கு வே

தாத்யயனம் சொல்லிவைத்துக்கொண்டு ஸதாஸர்வகாலமும் புண்யகார்யங்களைச் செய்துவந்தார். இப்படிக்கிருக்க அந்த ஊரில் வெகுநாளாகமழையில்லாமல் ஜநங்கள் வெகுகஷ்டமடைந்தார்கள். இனிமேல் இவ்விடத்தில் ஜீவனத்திற்கு வழியில்லையென்றுஎண்ணி எல்லோரும் அவ்விடத்தை விட்டுவிட்டு வேறு தேசம் சென்றுவிட்டார்கள். ஹரிமித்ரரும் தன் பந்துக்களோடும் புத்ரர்களுடனும் சிஷ்யர்களுடனும் கிளம்பி வெகுதூரம் நடந்துசென்று, கடைசியில் விந்தியபர்வதத்தினுடைய ஸமீபம் வந்து தங்கினர். அப்பொழுது காலவித்யாஸத்தினால் இவர்கள் வஸிக்குமிடத்திற்கு நாலாபக்கங்களிலும் நெருப்பு உண்டாகி ஓங்கி வளர்ந்து இவர்கள் எல்லோரையும் பஸ்மம் செய்துவிட்டது. அதில் ஹரிமித்ரருடைய பேரன் மட்டிலும் தெய்வாதீனமாகத் தப்பிப் பிழைத்தான். யாருமற்றுஅனாதையான அவன்மாத்திரம்காட்டில் கிடக்கின்ற பழங்களைப் புஜித்துக்கொண்டு காலத்தைக் கழித்துவந்தான். கொஞ்சகாலத்திற்குப் பிறகு அம்மார்க்கமாக சிலர் போய்க்கொண்டிருந்தார்கள். அவர்களுடனும் இந்தப்பாலகனும் சேர்ந்துகொண்டு வழிநடந்து காஞ்சீபுரம் வந்துசேர்ந்தான். அவ்வூரில் ஒரு பிராமணனுடைய வீட்டில் வளர்ந்து ஸகல வித்தைகளையும் கசடறக் கற்று வேதாத்யயனம் செய்து, ஊரில் உள்ளவர்கள் எல்லோரும் மெச்சும்படியாக இருந்துவந்தான். இவ்விதம் பத்து வருஷம் ஜீவனம் செய்துவந்த அந்தப் பாலகனை அவ்வூர் வாஸிகள் ரவிமித்திரன் என்று அழைக்கலானார்கள். ஒரு தினம் அந்த ரவிமித்திரன் தன் முன்னோர்கள் அநியாயமாக அக்நியினால் மரணம் அடைந்ததை எண்ணி மிகவும் வருத்தமடைந்து வாய்விட்டுப் புலம்பிக் கண்ணும் கண்ணீருமாக நின்றான். அவ்வூர்வாஸிகள் எல்லோரும் வந்து 'ஹே ரவிமித்திரா! ஏன் இப்படிக் கதறுகிறாய்? நடந்தது என்ன? தெரிவி' என்று கேட்டும் ஒன்றுக்கும் பதில் சொல்லாமல் பசியினால்வருந்தி பிசாசுபோல்அடிக்கடி உரக்கக்கூச்சலிட்டான். சிந்தையாகிய க்ரஹத்தினால் பிடிக்கப்பட்டு இதுசெய்யத்தக்கது இது செய்யத்தகாதது என்று அறியாதவனாய், அநுஷ்டானங்களைவிட்டுவிட்டான். இவனை ப்ராம்மணர்களும் விட்டுவிட்டார்கள். அவன் வெகுகாலம் ஓரிடத்தில் நின்றுகொண்டேயிருப்

பான், இன்னொரு ஸமயம் இன்னுமோரிடத்தில் எப்போதும் தூங்கிக்கொண்டேயிருப்பன். இப்படியிருக்கையில், ருத்திராக்ஷ மாலை ஜடை விபூதி இவைகளைத்தரித்து தீர்த்தயாத்ரை செய்கிற ஒருயோகீச்வரர் தற்செயலாய் அவ்விடம் வந்தார். அநந்த ஸரஸின் கரையில் பித்துப்பிடித்துமயங்கிக்கிடந்த இந்த ரவிமித்ரனைக்கண்டார். முக்காலமறிந்த அம்முனிவர் அவனுக்கு உண்டாயிருக்கும் துக்கத்திற்குக் காரணத்தை ஜ்ஞான திருஷ்டியினால் அறிந்து தயையுடன் அந்த ரவிமித்திரனைத்தன் அருகில்அழைத்து ஒரு வார்த்தை சொல்லலானார்— "ஹே பாலக! உன்னுடைய விஷயத்தைச்சொல்லுகிறேன் கேள். நீ மாதாபிதாக்களை விட்டுப் பிரிந்து இவ்விதம் பித்தன்போல் ஆகி முன்ஜன்மாவில் செய்த தீவினையை அனுபவிக்கிறாய். பூர்வஜன்மாவில் க்ஷத்திரியனாகப் பிறந்து தருமநெறி தவராமல் நீ அரசுபுரிந்துவந்தாய். அக்காலத்தில் ப்ருகுமஹர்ஷியின் வம்சத்தில்பிறந்த ஒருபிராமணன் காசிக்குப்போய்வர எண்ணங்கொண்டு தன் மனைவியையும் தன் குழந்தையையும் ஒருவரிடமும் ஒப்புவிக்க மனமில்லாமல் அனேகம் யாகம் செய்தவனும் சிவபூஜாதுரந்தரருமான உன்னிடம் இருவர்களையும் தான் திரும்பிவரும்வரை காப்பாற்றவேண்டும் என்று ஒப்புவித்துக் காசிக்குப் போய்ச்சேர்ந்தார். தெய்வகதியால் கொஞ்சகாலத்திற்கெல்லாம் அவர் காசியில் பரணத்தையடைந்தார். வெகுகாலம் வரையிலும் தன் கணவரைக் காணாது மனம் கலங்கி உன்னிடம் வந்து அம்மாதுசிரோமணி தன் கணவரின் விருத்தாந்தத்தை அறிந்து சொல்லவேண்டுமென்று பிரார்த்தித்தும் அவள் வார்த்தையைக் காதில் வாங்காமலும் அவர்களைக் காப்பாற்றாமலும் அனாதரவாகவும் இருந்துவந்தாய். அப்பொழுது அப்பெண் புத்திரனை அழைத்து உன்னிடம் வந்து 'ஹே அரசே! இந்தக் குமாரனை நீர் வேறு வித்யாஸமில்லாமல் காப்பாற்றும். நான் என் பிராணனை விடப்போகிறேன். என் குழந்தை தாய்தந்தையர்கள் இல்லாமல் எப்படிக் கஷ்டத்துடன் தன் வாழ்நாளைக் கழிக்கப்போகின்றானோ, அதுபோல் நீரும் அடுத்த ஜன்மாவில் இந்தத் துக்கத்தை அனுபவியும்' என்று சபித்து அக்நிப்ரவேசம் செய்தாள். ஐச்வர்யத்திமிரினால் செய்த பூர்வகர்மபலனை இந்த ஜன்மாவில் அனுபவிக்கிறாய். ஸத்கார்யங்களைச் செய்ததினால் இப்பொழுது பிராமண

னாகப் பிறந்தாய். உன்னுடைய மாதாபிதாக்கள் யாதனாசரீரங்களோடு இப்பொழுது நரகத்தில் கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டு, "தன் முன்னோர்களை ஸ்வர்க்கலோகத்திற்கு அனுப்ப எண்ணத்துடன் கங்கையைக் கொண்டுவந்து காப்பாற்றின பகீரதனைப்போல், நம் வம்சத்தில் ஜனித்த ரவிமித்திரன் எப்பொழுது யதோக்தமாகக் கர்மாவை நடத்தப்போகிறான்" என்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். பித்ருக்கள் மோக்ஷத்தை அடையவேண்டி நீ ஊர்த்வக்ரியையைச் செய். அப்படிச் செய்யாதவரையில் மஹாபாபியாக ஆகிவிடுவாய்" என்று சொன்னார். அதைக் கேட்ட ரவிமித்ரன் ஸ்வபிரக்ஞை ஏற்பட்டு யோகீச்வரரின் சரணகமலங்களைப் பிடித்துக்கொண்டு என்னுடைய துக்கமாகிற இருட்டுக்குக் கோடிஸூர்யன்போல் விளங்கும் ஹே ப்ரபோ! உம்மைத் தவிர எனக்கு வேறு கதி கிடையாது. நரகத்தில் கஷ்டங்களை அனுபவிக்கின்ற மாதா பிதாக்களை எவ்விதம் கரையேற்றுவேன், நான் செய்யவேண்டியதைத் தாங்கள்தான் சொல்லவேண்டு"மென்று வணக்கத்துடன் கேட்க, "ஹே ரவிமித்திர! பூலோகத்தில் ஸமஸ்த பாபங்களையும் போக்கடிக்கின்ற கங்கையானவள் காவேரி என்கிற பெயரோடு விளங்குகிறாள். அக்காவேரியின் வடகரையில் ஸ்ரீபரமேச்வரன் உபதேசம் செய்துகொள்ள வேண்டுமென்கிற எண்ணத்துடன் கைலாஸத்திலிருந்து ஒரு சிகரத்தைக் கொண்டு வந்து ஸ்தாபனம் செய்து சூலாயுதத்தினால் புண்யதீர்த்தத்தை ஏற்பாடு செய்துகொண்டு, தன் குமாரனிடம் உபதேசம் செய்துகொண்டார். அந்தப் புண்யதீர்த்தமானது பித்ருக்களுக்கு மோக்ஷத்தைக் கொடுக்கக்கூடியதாக இருக்கிறது. ஆகையினால் நீ அப்படிப்பட்ட ஸ்வாமிமலை சென்று ஸ்வாமி கூபத்தின் அருகில் பித்ரு கார்யங்களைச் செய்வாயாக" என்று சொன்னார். அவ்வசனப்படியே உடனே புறப்பட்டு ஸ்வாமிமலை வந்து அவ்விடத்தில் வஸிக்கின்ற பிருஹத்ச்வரை வணங்கி அவருடைய அனுமதியின்பேரில் அன்றிரவு க்ஷேத்ரஉபவாஸம் இருந்து ஸ்னானம் செய்து, குசங்களினால் ப்ரதிக்ருதி செய்து தஹனஸம்ஸ்காரங்களை யதாவிதியாகச் செய்தான். அதனால் அவன் வம்சத்தில் ஜனித்த எல்லோரும் திரும்புதல் இல்லாத மேலான பதவியை அடைந்தார்கள். ஆகையினால் ஹே அகஸ்

KOVILOOR MADALAYAM
KOVILUR-630 307

தியரே! சுபாசுபகார்யங்கள் எது செய்தாலும் ஸ்ரீஸ்வாமிமலேயில் செய்தால் ஆயிரம் பங்கு பலனைக் கொடுக்கும். ஒருவன் காசிக்கு நூறு தடவையும் கயைக்கு நூறு தடவையும் போய்வந்தால் எந்த பலனோ, அந்த பலன் ஸ்ரீஸ்வாமிமலேயில் இருக்கும் ஸ்ரீ ஸ்வாமிநாதனுடைய அருளால் திருவேரகம் சென்ற க்ஷணகாலத்தில் அந்தப் புண்யத்தை அடைகிருன்.

ஸ்ரீ ஸ்வாமிமலே க்ஷேத்திரமாகாத்மியத்தில் ஸ்வாமிகூபத்தின் மஹிமையைச் சொன்ன ஏழாவது அத்தியாயம் முற்றிற்று.

---

## எட்டாவது அத்தியாயம்.

---

### (ஸ்ரீஸ்வாமி புஷ்கரணியின் மஹிமையின் வரலாறு.)

நந்திகேசர் சொல்லுகிருர்—

ஹே அகஸ்தியரே! இகபரம் இரண்டிலும் க்ஷேமத்தைக் கொடுக்கின்ற இன்னெரு கதை சொல்லுகிறேன். கேளும், கோதாவரிநதிதீரத்தில் ஸகல ஸம்பத்துக்களும் நிறைந்த புஷ்பவனம் என்கிற ஒரு கிராமத்தில் வைதிகநிஷ்டராய் ஆசாரசீலராயுள்ள வஸு என்று ஒரு விப்ரச்ரேஷ்டர் தன் பத்னியான காந்திமதியுடன் கிருஹஸ்தாசிரமத்தை ஸரிவர நடத்திவந்தார். அநேக தானதர்மங்கள் செய்துவந்தும் புத்ரபாக்யம் இல்லாததினுல் மிகவும் வியாகுலமடைந்து "ஜன்மாவை அடைந்தவனுக்கு புத்ரன் இல்லாதபோனுல் புத் என்று சொல்லும்படியான நரகத்தை அடைவன்" என்று வேதங்கள் முறையிடுகின்றனவே. நாமும் அந்த நரகத்தை அடையவேணுமே. பகவான் நமக்கு ஒரு குழந்தையைக் கொடுக்கவில்லேயே என்று எண்ணி ஸமஸ்த பாபங்களேயும் நிவாரணம் செய்யத்தக்க கங்கையில் ஸ்னனம் செய்து விசாலாக்ஷியுடன் கூடின ஸ்ரீவிச்வநாதரை தர்சனம் செய்தால் தனக்கு நிச்சயம் குழந்தை உண்டாகலாம் என்கிற நம்பிக்கை ஏற்பட்டு தன் பத்நியான காந்திமதியுடன் காசியாத்திரைக்குப்புறப்பட்டார். புண்யக்ஷேத்திரங்கள்தோறும் சென்று ஸ்வாமிதர்சனம் செய்துகொண்டு போகும்பொழுது ஒரு காட்டின் வழியைப் பின்பற்றி வெகு

தூரம் சென்று பிறகு ஸரியான மார்க்கம் தெரியாமல் தயங்கி கோரமான துஷ்ட ஜந்துக்களின் சப்தத்தைக் கேட்டு பயந்து "ஹே ப்ரியே! நாம் தெரியாமல் வந்துவிட்டோம். வழியோ தெரியவில்லை. யாரையாகினும் கேட்போமென்றால் இவ்விடத்தில் ஜனஸஞ்சாரமேயில்லை. இந்த இடத்திலேயே நமக்கு மரணகாலம் ஸம்பவித்துவிட்டது என்று எண்ணுகிறேன். என் பின்னால் சீக்கிரமாக நடந்துவா" என்று பத்னியை அழைத்துக் கொண்டுசெல்லும்போது, தாஹம் அதிகரித்ததால் தாஹவிடாயை தீர்த்துக்கொள்ள இச்சைகொண்டு தடாகத்தைத்தேடிக்கொண்டு வரும்போது, ஓரிடத்தில் மிகவிஸ்தாரமாயும் நிரம்பவும் அழகு பொருந்தியதாயும் நிர்மலமான தீர்த்தத்தினால் நிறையப்பெற்றதாயும் நாகபுன்னாக சூதம் முதலான விருக்ஷங்களினால் சூழப்பட்டதாயும் அம்மரங்களில் வஸிக்கின்ற பிகசுகசாரிகம் முதலிய பக்ஷிகளின் மதுரமான கானங்களோடு கூடினதாயும் ஆம்பல் தாமரை இவைகளினால் நிறைந்ததாயும் கண்டோர் மனதைக் களிக்கச் செய்கிறதுமான ஒரு தடாகத்தைக் கண்டு ஆனந்தம் கொண்டு காந்திமதியை அழைத்துக்கொண்டு தடாகதீரம் வந்து சேர்ந்தார். பிறகு காந்திமதியைக் கரையில் நிறுத்திவைத்து விட்டு ஸ்னானம் செய்வதன்பொருட்டு வஸுவானவர் குளத்தில் இறங்கி ஜலத்தில் மூழ்கினார். உடனே சந்திரனைப்போல் முகமும், வண்டுக்கூட்டங்கள் போன்ற அளகமும், காதுவரையில் நீண்ட கண்களும், ஸ்வர்ணகும்பங்கள் போன்ற ஸ்தனங்களும், ஸிம்மம்போன்ற இடையும், அன்னம்போன்ற நடையும் ஸர்வாங்கஸுந்தரியுமான ஒருபெண்ணாக வெளிக்கிளம்பினார். தன் நாதன் பெண்வடிவமாக ஆனதைப் பார்த்த காந்திமதி மிரள விழித்துத் தன் நாதனைப் பார்த்து ஹாவென்று புலம்பி "ஹே பரமேச்வர! தங்களைப் பூஜித்தவருக்கு இதுதான் ப்ரயோஜனமோ? என்னுடைய நாதன் தர்மநெறி தவராமல் நடப்பவராயிற்றே; மிகவும் கேவலமான இந்த ஸ்திரீரூபத்தை அடையலாமா? ஹே பக்தவத்ஸலா! நான் எங்கு செல்வேன்? யாரிடம் சொல்வேன்? ஹே பார்வதியே! எப்பொழுதும் உன்னுடைய சரணகமலங்களைப் பூஜிப்பவராயிற்றே; இந்த அநியாயத்தைப் பார்த்துக்கொண்டு நான் உயிருடன் ஒரு நாளும் இருக்கமாட்டேன்" என்று தன் முந்தானையால் முகத்தை மூடிக்

கொண்டு புலம்பினுள். அக்காலத்தில் ஆகாசவீதியில் ஸஞ்சாரம் செய்துகொண்டிருந்த பிரம்மபுத்திரரான நாரதமஹர்ஷியானவர் இவ்வழுகைக்குரலோசையைக்கேட்டு இவர்கள் இருக்குமிடம் வந்து மஹாரூபவதிகளான இரண்டு பெண்மணிகளைப் பார்த்தார். சரத்கால மேகம்போன்ற மேனியுள்ளவராய் கிருஷ்ணஜினத்தைத் தரித்தவராய், ஜடாமகுடதாரியாய், கங்காஜலம் நிறைந்த கமண்டலுவைக் கையில் வைத்துக்கொண்டிருப்பவராய், விபூதிருத்திராக்ஷதாரியாய், வீணபாணியுமாய் விளங்கும் நாரதமஹர்ஷியைக் கண்டதும் காந்திமதியானவள் எழுந்துநின்று பிரதக்ஷிணநமஸ்காரங்கள் செய்து செந்தாமரைபோன்ற இரண்டு சரணங்களைப் பிடித்துக்கொண்டு "ஹே மஹர்ஷே! எனக்கு அபயம் கொடுக்கவேணும். இதோ நிற்கின்றவர் என் கணவர். நாங்கள் காசியாத்திரையை உத்தேசித்துக் கிளம்பினேம். வழி தெரியாமல் இக்காட்டில் புகுந்து அலைந்தோம். ஸூரியகிரணங்களால் விடாய்த்த என் நாதர் அத்தாபத்தை ஆற்றிக்கொள்ள இத்தடாகத்தில் இறங்கி முழுகினவுடனே பெண்வடிவமாக ஆகிவிட்டார். புத்திரன் இல்லையே என்று காசியாத்திரைக்குக் கிளம்பின எனது புருஷன் இவ்விதம் ஆனுர். ஹே ப்ரபோ! தாங்கள் எல்லாம் அறிந்தவர்; சிவபக்தாக்ரேஸர்; தாங்கள்தான் என்னைக் காப்பாற்றவேண்டும்" என்று பிரார்த்தித்தாள். இப்படி நடந்ததைக்கேட்ட நாரதர் "ஹே பெண்ணே! உன் பர்த்தா பெண்ணக ஆனதற்குக் காரணம் சொல்லுகிறேன். கேள். முன்ஞெரு ஸமயத்தில் தேவர்கள் ஜலக்கிரீடை செய்வதற்கு இந்த அழகு பொருந்திய தடாகத்தை நிர்மாணம் செய்தார்கள். ஒரு காலத்தில் தேவலோகத்தில் வஸிக்கின்ற அப்ஸரஸ் ஸ்திரீகள் நிர்வாணமாக ஜலத்தில் இறங்கி ஸ்நானம் செய்துகொண்டிருந்தார்கள். அந்தக் காலத்தில் சிவப்பிரஸாதம் பெற்ற துர்வாஸமஹர்ஷியானவர் அனேகம் சிஷ்யர்களுடன் ஸ்நானம் செய்வதற்காகத் தடாகதீரம் வந்துசேர்ந்தார். அப்பெரியவரைக் கண்டும் மத்யபானமயக்கத்தினுல் வஸ்திரங்களைத் தரித்துக் கொள்ளாமல் ஜலக்ரீடையிலேயே இருந்தார்கள். இதைப் பார்த்ததும் மஹர்ஷிக்கு அதிக கோபம் ஏற்பட்டு "நீங்கள் எல்லோரும் பெண்மான்களாகப் பன்னிரண்டு வருஷம் இருக்கக்கடவது. இன்னமும் புருஷர்கள் இந்த ஜலத்தைத் தொட்டால் பன்

னிரண்டு வருஷம் பெண்வடிவமுள்ளவர்களாகவும், ஸ்திரீகள் தொட்டால்பெண்மான்வடிவமுள்ளவர்களாகவும் ஆகக்கடவர்கள்'' என்று சபித்துச்சென்றார். ஆகையினால்தான் உன்னுடைய பர்த்தா ஸ்திரீரூபத்தை அடைந்தார். பன்னிரண்டு வருஷம் உன் பர்த்தா இவ்விதம்தான் இருப்பார். ஆனால் நான் ஓர் உபாயம் சொல்லுகிறேன். அதின்படி செய்,உடனே முன்போல் ஆகிவிடுவார். தக்ஷிணதேசத்தில் காவேரியின் வடபாகத்தில் இரண்டு கோபுரங்களோடு கூடின ஸ்வாமிமலை என்று புண்யக்ஷேத்திரம் ஒன்று இருக்கின்றது. அம்மலையில் பார்வதியின் செல்வராய் தனிப்பெருஞ் சோதியாய் அடியார்களுக்கு வேண்டியதை அளிப்பவராய் உலக நாயகராயிருக்கிற ஸ்ரீகுருநாதன் வஸிக்கின்றார். அப்பெருமானுடைய முன்னிலையில் ஸமஸ்த பாபங்களைப் போக்கடிக்கின்ற ஸ்வாமிதீர்த்தமிருக்கின்றது. அந்த புண்யதீர்த்தத்தில் உன்பதியை ஸ்நானம்செய்துவைத்தால் பெண்வடிவம் நீங்கிவிடும்; உனக்கு புத்ரபாக்யமும் ஸ்ரீஸ்வாமிநாதன் அருளால் உண்டாகும். சீக்கிரம் செல்வாயாக'' என்று அனுக்ரஹித்து நல்வழியைக்காண்பித்துச் சென்றார். காந்திமதியும் பர்த்தாவை அழைத்துக்கொண்டு வெகுதூரம் நடந்துவந்து ஸ்வாமிமலைவந்துசேர்ந்து மங்களப்ரதமான புஷ்கரிணியில் தன் புருஷனுடன் ஸ்நானம் செய்தாள். உடனே பெண்உருவம் நீங்க வஸுவானவர் ஸ்வயரூபத்தை அடைந்தார். இவ்வதிசயத்தைக்கண்டு காந்திமதி தன் பர்தாவின் சரணங்களை பிடித்துக்கொண்டு கதற ஆரம்பித்தாள். வஸுவானவர் 'ப்ரியே! இனிமேல் நீ யாதொன்றுக்கும் பயப்படவேண்டாம்' என்று ஸமாச்வாஸநம் செய்துகோவிலுக்குச்சென்று மூன்று ப்ரதக்ஷிணங்கள் செய்து ஸன்னதி அடைந்து ஐந்து நமஸ்காரங்கள் செய்து ஆனந்தபரவசராக ஆகி ஸ்தோத்தரம் கின்றார்

### (வஸு ஸ்தோத்திரம்)

தேவதேவ மகாதேவ தேவப்ருந்த ஸமர்ச்சித ।
தீனபந்தோ தயாமூர்த்தே திவ்யரூப நமோஸ்துதே ॥ (1)
பார்வதீநந்தன ஸ்கந்த பரமானந்தவிக்ரஹ ।
ஷாண்மாதுர ஸ்வாமிநாத ஸங்கதூர நமோஸ்துதே ॥ (2)
சிகிவாஹன ஸர்வக்ஞ சீதளாபாங்க வீக்ஷண
சிகிராஜத்வஜ ஸ்வாமின் சிதானந்த நமோஸ்துதே ॥ (3)

தாரகாரே தடிச்சாயகாய மாயாவபுர்த்தர ।
தருணாதித்ய ஸங்காச தானசூர நமோஸ்துதே ॥ (4)
குமாரகுக்குடாதீசகேதநக் ரௌஞ்சபேதன ।
குணரூப குணாதீத குஹாலய நமோஸ்துதே ॥ (5)
வன்ஹிஸம்பவ ஸர்வக்ஞ விபத்திமிர பாஸ்கர
குந்த தந்த குஹானந்த குருரூப நமோஸ்துதே ॥ (6)
விரிஞ்சி விஷ்ணு ருத்ராதிஸுர பூஜிதபாதுக ।
ப்ரணவாம்போஜசரண பத்ரப்ரத நமோஸ்துதே ॥ (7)
தேவஸேனா குசத்வந்த்வ குங்குமாருண வக்ஷக ।
வல்லிகாம்பாமுகாம்போஜ மார்த்தாண்டேதம்
[நமோஸ்துதே ॥ (8)
பாஹி பாஹி ஜகன்னாத பாஹி பாஹி க்ருபாகர ।
பாஹி பாஹி ஸ்வாமிநாத பாஹி பாஹி நமோநம: । (9)

இவ்விதம் வஸுவானவர் ஸ்தோத்ரம் செய்து அந்த க்ஷேத்திரத்திலேயே வஸிக்க எண்ணங்கொண்டவராய் ஒருகிருஹத்தை நிர்மாணம் செய்துகொண்டு வஸித்து தினம் நியமமாக ஸ்வாமி தர்சனம் செய்து வந்ததால் கொஞ்சகாலத்தில் ஸ்ரீகுருநாதனுடைய அனுக்ரஹத்தால் ஸத்புத்ரன் உண்டானான். தம்பதி இருவர்களும் மஹாஸந்தோஷத்தை அடைந்து புத்ர பௌத்ர தன தான்யாதி பாக்கியங்களைப்பெற்று முடிவில் ஸ்கந்தலோகத்தை அடைந்தார்கள். ஹே அகஸ்தியரே! வஸுவினால் ஸ்தோத்திரம் செய்யப்பட்ட இந்த ஸ்தோத்திரத்தை மூன்று காலமும் பாராயணம்செய்கின்றவர்கள் மேலான பதவியை அடைகிறார்கள்.

ஸ்ரீஸ்வாமிமலை க்ஷேத்திரமாகாத்மியத்தில்
ஸ்வாமிதீர்த்த மாகாத்மியத்தைச் சொன்ன எட்டாவது அத்தியாயம்
முற்றிற்று.

---

## ஒன்பதாவது அத்தியாயம்.

---

ஸ்ரீநந்திகேசர் சொல்லுகிறார்—

ஹே அகஸ்தியமஹர்ஷியே! ஸமஸ்த பாபங்களையும் போக்கடிக்கின்றதான க்ஷேத்திரவிருக்ஷமாஹாத்மியத்தைச் சொல்லுகிறேன். கேளும். கைலாஸபர்வதத்தினுடைய கொடிமுடியில் ஸர்வேச்வரரான பரமேச்வரன் உலகமாதாவான பார்வதிதேவி



ஸ்ரீ பாலசுப்பிரமணியம்.

ஒன்பதாவது அத்யாயத்தனில் ஸ்ரீபூர்தேவிக்கு ப்ரத்யக்ஷமானது

யுடன் ஏகாந்தப்ரதேசத்தில் இருந்துவந்தார். அக்காலத்தில் அதிசூரர்களான சூரன்தாரகன் ஸிம்மவக்த்ரன் முதலான அஸுரர்களின் உபத்ரவத்தை ஸஹிக்கமுடியாத விஷ்ணு பிரம்மாதி தேவர்கள் கமனீயமான கைலாஸம் சென்று 'ஹே ப்ரபோ! பக்தவத்ஸ! பார்வதிரமண! பரமாத்மன்! நாங்கள் படும் அவஸ்தையைச் சொல்லிமுடியாது. எல்லாவற்றையும் இழந்துவிட்டோம். எங்களைத்தாங்கள்தான் காப்பாற்றவேண்டும்' என்று கண்ணுங்கண்ணீருமாகக்கதறினார்கள். இப்படிக்கதறுகின்ற தேவ கணங்களை ஸதாசிவன் மிகக்கருணையுடன் நோக்கி, "ஹே தேவர்காள்! நீங்கள் அஞ்சுதல் வேண்டாம். நான் குமாரனை உண்டு பண்ணி உங்களுக்கு இடுக்கண் செய்துவருகின்ற அஸுரர்களை நாசம் செய்கிறேன். நான் ஏகாந்தத்தில் பார்வதியுடன் இருக்கும்பொழுதுநீங்கள் கூக்குரல்போட்டதைக்கேட்டு ஓடிவந்தேன். என்னுடைய வீர்யம் ஸ்கலிதமாகிவிட்டபடியினால் இதைத் தாங்கி வஹிக்கும்படியான ஒருவரைஏற்பாடுசெய்யுங்கள்" என்று உரைத்தார். உடனே விஷ்ணுவானவர் பூமிதேவியை ஏவினார். அந்த பூதேவியும் அந்த வீர்யத்தைத்தாங்கி பிறகு சரவணத்தில் கொண்டுபோய்ச்சேர்த்துவிட்டாள். இந்தக் கார்யங்களைப்பார்த்துக்கொண்டிருந்த பார்வதிக்கு அதிக கோபம் ஏற்பட்டு "ஹே தேவர்களே! என்னுடைய க்ரீடைக்கு நீங்கள் விக்னம் செய்து என் வயிற்றினில் குழந்தை உண்டாகாமல் செய்தபடியினால் உங்களுடைய பத்னிகளிடம் உங்களுக்கு குழந்தை பிறக்காமல் ஆகக்கடவது. ஹே பூமி! நான் தரிக்கும்படியான வீர்யத்தை நீ தாரணம் செய்தபடியினால் உனக்கு அனேகம் புருஷர்கள் ஏற்பட்டு ஸமஸ்த தான்யங்களும் விளையாமல் நிர்மூலமாக ஆகக்கடவாய்" என்று சபித்தாள். அந்த சாபத்தைக் கேட்டு பூமியும் தேவர்களும் மஹாதேவனையும் தேவியையும் நமஸ்கரித்துச் சென்றார்கள். பிறகு சிறிதுகாலத்திற்கெல்லாம் பார்வதியின் சாபத்தினால் பூமிதேவி அநேக கஷ்டங்களை அனுபவித்து, தன் கஷ்டங்களை நிவர்த்திசெய்துகொள்ள வேண்டுமென்கிற எண்ணத்துடன் ஸ்ரீமஹாவிஷ்ணுவைக் குறித்து வெகுகாலம் தவம் செய்தாள். அவளுக்கு பகவான் அனுக்ரஹம் செய்ய விரும்பி பிரத்யக்ஷமானார். சங்க சக்ரகதாபாணியாய்த் தன்னெதிரினில் தோன்றிய பெருமானைக் கண்ட

பூமி ப்ரதக்ஷிணநமஸ்காரம் செய்து "ஹே நாதா! நான் தங்களுடைய வார்த்தையினால் சங்கரருடைய வீர்யத்தைத் தரித்தேன். அந்தப் பார்வதியினுடைய சாபத்தினால் எல்லோருக்கும் பத்நியாகவும் பூமியில் ஓரிடத்திலும் விளைவு இல்லாமலும் அனியாயமாக ஆனேன். இந்த ஆபத்திலிருந்து என்னைக் காக்கவேண்டும்" என்று பிரார்த்தித்தாள். அவ்வசனத்தை ஸ்ரீமந்நாராயணமூர்த்தியானவர் கேட்டு "ஹே ப்ரியே! உனக்கு ஏற்பட்டிருக்கும் கௌரியின் சாபத்தை என்னால் போக்கடிக்க முடியாது. நான் அதற்கு ஓர் உபாயம் சொல்லுகிறேன், கேள். எந்த வீர்யத்தைத் தாங்கி கங்கையில் சரவணத்தில் கொண்டுபோய்விட்டாயோ, அந்த ரேதஸ்ஸிலிருந்து ஷண்முகமூர்த்தி உண்டாகி, கைலயங்கிரியில் வஸிக்கிறார். அந்த பிரபுவிடம் சென்று பிரார்த்தித்தால் உனக்கு க்ஷேமம் உண்டாகும்" என்று சொல்லி மறைந்துபோனார். அவ்வார்த்தையின்படியே பூமிதேவி கைலாஸபர்வதம் சென்று சிவதீர்த்தத்தில் ஸ்நானம் செய்து கந்தமலை வந்து பக்தானுகூலரான ஸ்ரீ ஆறுமுகனைக் கண்டு ஆனந்தக்கூத்தாடி அடிவணங்கி அஞ்சலிஹஸ்தையாய் நின்றுகொண்டு பகவானைப் பார்த்து "சரணாகதரக்ஷகரே! தாங்கள் அறியாதது ஒன்றுமில்லை. தங்கள் தாயின் சாபத்தால் கஷ்டத்தை அடைந்துவிட்டேன்; என்னைத் தாங்கள் தான் ரக்ஷிக்கவேண்டு''மென்றுவேண்டினாள். உடனே ஆறுமுகன்சொல்கிறார்— "ஹே பூமி! உனக்கு இனிமேல் பயம் வேண்டாம், இதுமுதற்கொண்டு பூமியில் தான்யராசிகள் செவ்வையாக உண்டாகட்டும். ஏதோ உன்னை எல்லோரும் என் பூமி என்று சொல்லுகிறார்கள் என்று வருத்தமடையாதே. சப்தமாத்திரமே ஒழிய அர்த்தத்தினால் உனக்கு அபவாதம் உண்டாகாது. அத்துடன் ஸமஸ்த பசுபக்ஷி மிருகாதிகள் உன்னால் ஜீவிக்கின்றன எவர்களும் உனக்கு நிகராக ஆகமாட்டார்கள். நீ இனிமேல் ஸந்தோஷமாகச் செல்லலாம்'' என்று அனுக்ரஹித்தார். இந்த அனுக்ரஹத்தை அடைந்ததும் பூமி முன்போல் செழிப்பு உள்ளவளாக ஆனாள். பூமிதேவியானவள் தான் ஷண்முகனை விட்டுப் பிரிய மனமில்லாமல் அப்பெருமானுடைய ஸன்னிதியில் நெல்லிவிருக்ஷமாக நின்று எப்பொழுதும் குமாரனைத் தர்சனம் செய்துவந்தாள். ஹே அகஸ்தியரே! விரு

க்ஷத்தில் பித்ருதேவர்களும் அஷ்டவஸுக்களும் ஏகாதசருத்ரர்களும் விச்வேதேவர்களும் இந்திராதிதேவகணங்களும் வஸிக்கின்றார்கள். ஆகையினால் எந்த கர்மாக்கள் செய்தபோதிலும் அம்மரத்தின் அடிவாரத்தில் செய்தால் ஸம்பூர்ணமான ப்ரயோஜனத்தை அடையலாம். ஒரு ஸமயம் ஷண்முகன் எல்லா உலகங்களையும் பார்க்கக் கிளம்பி பூலோகத்தில் வரும்போது காவேரியின் அருகாமையில் இருக்கும் ப்ரதேசத்தைப் பார்த்து அவ்விடத்திலேயே வஸிக்கக்கருதி கைலயங்கிரியிலிருக்கும் புண்ய தீர்த்தங்களுடனும் புண்யவிருக்ஷமான நெல்லிவிருக்ஷத்துடனும் கந்தமலையை இவ்விடம் கொண்டுவந்து ஸ்தாபனம் செய்து எல்லோரும் கண்டுகளிக்க அம்மலையில் வஸித்துவருகிறார். நெல்லி விருக்ஷமும் பகவானுடைய முன்னிலையிலேயே நின்றது, எவர்கள் நெல்லிமரத்தினடியில் புண்யகார்யங்களைச் செய்கின்றனரோ, அவர்கள் இகத்தில் க்ஷேமத்தை அடைந்து அவர்களுடைய பித்ருக்களையும் ஸ்வர்க்கத்திற்கு அனுப்பிய உத்தமர்களாக ஆகின்றார்கள்.

ஸ்ரீ ஸ்வாமிமலை க்ஷேத்திரமாகாத்மியத்தில் நெல்லிவ்ருக்ஷத்தின் வரலாற்றைச் சொன்ன ஒன்பதாவது அத்தியாயம் முற்றிற்று.

---

## பத்தாவது அத்தியாயம்

---

### (தாத்ரீவிருக்ஷமஹிமையின் வரலாறு)

நந்திபகவான் சொல்லுகிறார்—

ஹே அகஸ்தியரே! தாம்பிரபர்ணிநதிதீரத்தில் திருநெல்வேலி என்கிற ஒரு சிவக்ஷேத்திரம் விளங்குகின்றது. அந்த க்ஷேத்திரத்தில் பாவனனென்கிற ஓர் அந்தணர் இருந்தார், அவருக்கு ஹேமவல்லி என்பவள் மனைவி. இவ்விருவர்களும் நல்லொழுக்கமுடையவர்கள். தினம் பாவனர் காலையில் எழுந்து தந்ததாவனம் செய்து ஸ்நானம் பண்ணி நித்யகர்மாக்களை முடித்துக் கொண்டு ஹேமவல்லியுடன் கோவில் சென்று சாலிவாடீவனேச்வரரையும் மாதாவான காந்திமதியையும் தர்சனம் செய்து அதிதிகளுக்கு அன்னதானம் செய்து ஸுகமாகக் காலத்தைக் கழித்துவந்தார். இப்படி தர்மகார்யங்களை நடத்திவந்தும்

அடிக்கடி குழந்தைகள் உண்டாகி மரணத்தை அடைந்துவந்தன. இதைக் கண்ட பாவனர் மிகவும் துக்கத்தை அடைந்து மூன்று மாதம் தவம் செய்யக்கருதி நிராஹாரராய் கண் மூடி மௌனியாகி தவம் செய்தார். பிறகு ஒரு தினம் இரவு நித்ரையில் இருக்கும்போது ஸர்வேச்வரன் பாவனருக்கு ஸ்வப்நத்தில் தர்சனம் கொடுத்து, "ஹே பாவன! உன்னுடைய தபஸினால் நான் மிகுந்த ஸந்தோஷமடைந்தேன். உன் அபிப்பிராயத்தை அறிந்தேன்; ஸத்புத்திரனைக் கொடுக்கிறேன். ஆனால் நீயும் ஹேமவல்லியும் உயிருடன் இருக்கமாட்டீர்கள். அப்படி உமக்குப் புத்திரன் மட்டிலும் உயிருடன் இருந்தால் போதுமென்கிற எண்ணமிருந்தால் தருகிறேன்" என்றார். அப்பெருமானுடைய வார்த்தையைக் கேட்ட பாவனர் "ஹே பிரபோ! தீர்க்காயுஸ்ஸுடன் கூடின ஸத்புத்திரன் பூமியில் இருந்தால் போதும். எங்களுடைய மரணத்தைப்பற்றி கவலைப் படவில்லை" என்று சொன்னார். அதன்படியே அனுக்ராஹம் செய்து சாலிவாடீவனேசுவரர் மறைந்துபோனார். ப்ராத:காலத்தில் பாவனர் எழுந்திருந்து தன் ப்ரியையிடம் எல்லா விபரங்களையும் சொல்லி எவ்விதமாகிலும் நமது புதல்வன் ஜீவனுடன் இருந்தால் போதும் என்று ஹேமவல்லிக்கு ஸமாதானம் கூறி இருந்துவந்தார். கொஞ்சகாலத்திற்கெல்லாம் பரமேச்வரனுடைய அனுக்ரஹத்தின்படியே ஹேமவல்லியானவள் கர்ப்பத்தைத் தரித்தாள். ஊரில் உள்ளவர்கள் பரிஹாஸமான வார்த்தைகள் பேசியும் ஒன்றையும் காதில் வாங்காமல் நல்ல காலத்தில் ஸீமந்தத்தை நடத்தினர். இப்படியிருக்க அந்த தேசத்தில் அரசன் பிரஜைகளை ஹிம்ஸிக்க ஆரம்பித்தான். ஜனங்கள் பயந்து வேறு தேசம் கிளம்பிவிட்டார்கள். பாவனரும் கர்ப்பிணியான ஹேமவல்லியுடன் ப்ரயாணமானார். தாம்பிரபர்ணீநதிதரணம் செய்வதன்பொருட்டு எல்லோரும் ஓரிடத்தில் ஏறினர்கள். இருகரையும் ஜலம் நிறைந்துபோவதால் ஓடக்காரன் மிகுந்த ஜாக்கிரதையாகப் படகைத்தள்ளிக்கொண்டு நதிமத்தியில் வருங்காலத்தில் ஹேமவல்லியானவள் ஒரு ஆண் குழந்தையைப் பிரஸவித்தாள். அதே ஸமயத்தில் ஒரு ஸர்ப்பமானது ஜலத்திலிருந்து ஓடத்தில் ஏறுவதற்கு வந்தது. அதைக் கண்டு ஓடத்திலுள்ளவர்கள் கூக்குரல் போட்டுக்கொண்டு

பயந்து எல்லோரும் ஓர்புறத்தில் வந்து ஒதுங்கினுர்கள். அதனுல் ஓடம் கவிழ்ந்தது. சில பேர்கள் மரணமடைந்தார்கள். கரையில் நின்றவர்கள் இதைக் கண்டு ஜலத்தில் இறங்கி சிலர்களைக் கரையேற்றினுர்கள். பாவனரும் ஹேமவல்லியும் மரணத்தை அடைந்தார்கள். பாவனருடைய குழந்தை ஜலத்தில் மிதந்துகொண்டு வந்தது. அதைக் கண்ட ஓர் அந்தணர் ஜலத்தில் இறங்கிக் குழந்தையைக் கரைக்குக் கொண்டுவந்து உயிருடன் இருப்பதைக் கண்டு அனுதையான குழந்தையைக் கைவிட மனமில்லாமல் கையில் எடுத்துக்கொண்டு நர்மதாநதி தீரத்தினருகில் விக்ரமம் என்று சொல்லும்படியான தன் ஊர்வந்து சேர்ந்தார். அவர் பெயர் தர்மவர்த்தனர். அவருக்கு ஐந்து குமாரர்கள் இருந்தார்கள். அப்படிக்கிருந்த போதிலும் நதியில் கிடைத்த குழந்தைக்கு நதீஜன் என்று நாமகரணம்செய்து புத்திரனை ஸ்வீகாரம் செய்துகொண்டு மிகமேன்மையாக வளர்த்து வந்தார். நதீஜன் வளர்மதிபோல் வளர்ந்து ஸகலவித்தைகளையும் கற்று, பித்ரு சிச்ருஷைகளையும் செய்துவரும்போது தர்மவர்த்தனர் தனிமையான இடத்தில் இருந்துகொண்டு நம்முடைய நதீஜனுக்கு எட்டாவது வயது நடக்கின்றதே உபநயனம் செய்து வைக்கவேண்டுமே ; இவனுடைய கோத்ரம் ஸூத்ரம் ஒன்றும் புரியவில்லையே என்று வருந்தினர். பிறகு ஒருதினம் நதீஜனை அழைத்துக்கொண்டு பூஜைக்குப் புஷ்பம் கொண்டுவருவதற்காக காட்டிற்குச்சென்று புஷ்பம் பரித்துக்கொண்டிருக்கும்போது, ஸமீபத்தில் இருக்கின்ற கிணற்றிலிருந்து அன்யாயம் அன்யாயம் என்று சப்தம் உண்டாயிற்று. இதைக்கேட்ட தர்மவர்த்தனர் நதீஜனையும் அழைத்துக்கொண்டு கிணற்றினில் உள்புறம் பார்க்க ஒரு தம்பதிகள் கால்களினுல்அருகம்பில்லைப் பிடித்துக்கொண்டு தலைகீழாகத்தொங்குவதைப் பார்த்து மிகவும் பயத்துடன் "ஹே தம்பதிகளே! நீங்கள் யார்? இந்தப் பாழுங்கிணற்றில்ஏன் இப்படிக் கஷ்டப்பட்டு வருந்துகிறீர்கள்" என்று விசாரித்தார். மேககர்ஜனையைக்கேட்ட தும்மயில் எவ்விதம் ஸந்தோஷப்படுமோ அதுபோல் ஸந்தோஷமடைந்து, அவர்கள் "ஸ்வாமின்! மகாபாபிகளான எங்கள் விருத்தாந்தத்தைச் சொல்லுகிறேம் கேளும் திருநெல்வேலியில் நாங்கள் வஸித்துவந்தோம்; வெகு காலம் வரையில் புத்திரன் உண்டாகாததினுல் பரமேச்வரனைக் குறித்துத்தவம் செய்து புத்ரனைப்ப்ரார்த்தித்தோம். அந்த பரமேச்வரர் அனுக்ரகத்தினுல்

கொஞ்சகாலத்திற்கெல்லாம் என் தர்மபத்னி கர்ப்பம்தரித்ததைக் கண்டு களித்து ஸீமந்தம் செய்து கிரமமாக இருக்கும்போது, நான் வஸித்த தேசத்தில் ராஜ உபத்திரவம் தாங்கமுடியாமல் எல்லா ஜனங்களும் வேறிடம் செல்லக்கிளம்பினார்கள். நானும் கர்ப்பிணியான பத்னியையும் அழைத்துக்கொண்டு அவர்களைப் பின்தொடர்ந்தேன். புறகு தாம்ப்ரபர்ணீநதி தரணம் செய்வதற்காக ஓடத்தில் எல்லோரும் ஏறிப்போகும் பொழுது என் மனைவி அந்த ஓடத்திலேயே ஓர் ஆண் குழந்தையைப் பெற்றாள். அந்த ஸமயத்தில் தைவாதீனமாக ஓடம்கவிழ்ந்து அதனால் நாங்கள் ஜலத்தில் உயிரை விட்டோம். எங்களுக்கு புத்ரன் ஸம்ஸ்காரம் செய்யாததினாலும் பூர்வஜன்ம பாபத்தினாலும் இந்தக் கஷ்டத்தை அனுபவிக்கிறோம். எங்கள் புதல்வன் உயிருடன் இருந்து விதிப்ரகாரம் கர்மாக்களை செய்தால் ஸ்வர்க்கத்தை அடைவோம்'' என்று சொன்னார். இந்த வரலாறுகளைக்கேட்ட தர்மவர்த்தனர் நமது நதீஜனுடைய மாதாபிதாக்கள்தான் என்று எண்ணி "ஹே தம்பதிகளே! உங்களுடைய குமாரன் ஜீவனோடு என்னால் வளர்க்கப்பட்டு தங்களுடைய ஸமீபத்தில் நதீஜன் என்கிற பெயருடன் இருக்கிறான், எட்டு வயது ஆகின்றது, கோத்ரம் தெரியாததினால் உபநயனம் செய்யாமல் கவலையுடன் இருந்து வருகிறேன் என்று சொல்லி நதீஜனை நமஸ்காரம் செய்யச்செய்து, ஹே தம்பதிகளே உங்களின் புத்ரன் நமஸ்காரம் செய்கிறான் என்றார். தம்பதிகள் விஷயங்களைக்கேட்டு குமாரனைப் பார்க்க முடியாமல் வியாகுலமடைந்து பாரத்வாஜ கோத்ரத்தில் உண்டான ஹே குழந்தாய்! நீ தீர்க்கஜீவியாக இருக்கக் கடவாய் என்று ஆசீர்வதித்து, "ஹே தர்மவர்த்தனரே என் புதல்வனுக்கு உபநயனத்தைச் செய்துவைத்து ஸம்ஸ்காரம் இல்லாமல் இப்படிக்கஷ்டப்படுகின்ற எங்களைத்தாங்கள்தான் உத்தாரணம் செய்யவேண்டும். காவேரியின் வடதிசையில் இருக்கும் ஸ்வாமிமலை க்ஷேத்திரத்தில் ஸ்ரீகுருநாதன் வஸிக்கிறார். அந்த பரம்பொருளின் முன்னிலையில் பூமிதேவியானவள் நெல்லிவிருக்ஷமாக இருக்கிறாள். அம்மரத்தில் பித்ருதேவர்கள் முதலானவர்கள் வஸிக்கிறபடியினால் அந்த புண்ய விருக்ஷத்தினடியில் நதீஜனைக்கொண்டு யதாவிதியாக கர்மாக்களைச் செய்யும்படி தாங்கள் கிருபை செய்யவேணும்'' என்று பிரார்த்தித்தார்கள். தர்மவர்த்

தனர் தாமதிக்காமல் நதீஜனுக்கு உபநயனத்தை செய்துவைத்து திருஎரகம் வந்து நதீஜனை ஸ்வாமி சூபத்தில் ஸ்னானம் பண்ணச் சொல்லி க்ஷேத்ரவிருக்ஷத்தின் அடிவாரத்தில் பித்ருகர்மாக்களை நடத்திவைத்தார். அதனால் பாவனரும் ஹேமவல்லியும் திரும்புதல் இல்லாத மோக்ஷபதவியை அடைந்தார்கள். தர்மவர்த்தனரும் நதீஜனுக்கு நல்லகுலத்தில் உண்டான பெண்ணைக் கல்யாணம் செய்துவைத்து மஹாஸந்தோஷத்தை அடைந்தார். ஹேஅகஸ்தியரே ஸமஸ்தபாபங்களையும் நாசம் செய்கின்ற இந்த அத்யாயத்தைச் சொன்னவர்கள் கேழ்க்கின்றவர்கள் எல்லோரும் ஸ்ரீஷண்முகனுடைய அனுக்ரகத்தினால் மேலான பதவியை அடைவார்கள்.

ஸ்ரீஸ்வாமிமலை க்ஷேத்ரமாகாத்மியத்தில் நெல்லிவிருக்ஷத்தின் மகிமையைச்சொன்ன பத்தாவது அத்தியாயம் முற்றிற்று.

---

## பதினோராவது அத்தியாயம்

---

அகஸ்தியர் ப்ரச்னம் செய்கிறார்:—

ஹே நந்திகேச்வரரே! மகாதர்மிஷ்டர்களாயும் சிவனை ஆராதித்தவர்களுமான அந்த பாவனரும் ஹேமவல்லியும் ஸ்வர்க்க லோகத்தை அடையாமல் ஏன் நரகத்தை அடைந்தார்கள். அதின் விபரத்தைச் சொல்லவேண்டுமென்றார்:—

நந்திபகவான் சொல்லுகிறார்:—

ஹே அகஸ்தியரே! புண்யத்தினால் ஸ்வர்க்கமும் பாபத்தினால் நரகமும் அனுபவித்தே தீரவேணும். பிர்ம்ம விஷ்ணு ருத்திராதிகளினாலும் அதைமாற்ற முடியாது. சிவபக்தனாக இருந்தாலும் பாவனர் முன்செய்த தீவினையை அனுபவித்தார். இந்த பாவனருடைய பூர்வஜன்ம சரித்திரத்தைச் சொல்லுகிறேன். கேளும். ஹிமவத்பர்வதத்தின் ஸமீபத்தில் பிரும்மவனம் என்ற ஒரு க்ராமம். அதில் கபிலர் என்கிற ஒருபிராமணர் போகவதியான தன் ஸம்ஸாரத்துடன் இல்லறத்தை நடத்திவந்தார். தர்மாதர்மங்களை அறியாமல் தானம் செய்தும் உடனே அதைப் பிடுங்கிக்கொண்டும் ஒரு ஸமயம் பெரிய தர்மகாரியங்களைச் செய்

தும் சிலஸமயம் மகத்தான பாபங்களைச் செய்தும் வந்தார். அந்த கபிலருக்கு மகாரூபவதிகளான அனேகம் பெண்குழந்தைகள் இருந்தன. சில குழந்தைகளைக் கன்னிகாதானம் செய்து கொடுத்து, சிலபெண்களை விக்ரயமும் செய்துவிட்டார். அநேகம் பெண்குழந்தைகள் இருந்தும் எப்படி அனேக பழங்களையும் அடைந்த மரம் தனக்கு ஒருபழம்கூட இல்லாமல் ஆகிவிடுமோ அதுபோல் ஒருகுழந்தைகூட வீட்டில் இல்லாத்தினால் மிகவும் வருத்தமடைந்து புத்ரனை அடையவேணுமென்கிற எண்ணத்துடன் போகவதியையும் அழைத்துக்கொண்டு தீர்த்தயாத்ரையை உத்தேசித்துக் கிளம்பி, அநேக க்ஷேத்திரங்கள்தோறும் சென்று புண்யதீர்த்தங்களில் ஸ்னானம் செய்து ஒருகாட்டின் மார்க்கமாகச் செல்லும்போது அந்தவனத்தில் ஒருதம்பதிகள் பசியினால் வாடி தன் இளங்குழந்தையை ஒரு மரத்தினடியில் வைத்துவிட்டுத் தீர்த்தம் சாப்பிடுவதற்காககிணற்றின் அருகில்உட்கார்ந்தார்கள். இவர்களையும் குழந்தையையும் கண்டு குழந்தையின் பேரில் ஆசைகொண்டு காலடி சப்தம் கேட்காதபடி மெள்ள நடந்து கிணற்றில் அந்த தம்பதிகளைத் தள்ளி அவர்கள்மறுபடியும் ஏறிவராதபடிசெய்து கபிலன் குழந்தையை எடுத்துக்கொண்டு போகவதியுடன் தன் கிராமம் வந்துசேர்ந்தான். அவ்வூரிலுள்ளவர்கள் வந்து இக்குழந்தை ஏது என்று கேட்டதற்கு 'ஸ்ரீபரமேச்வரன் அனுக்ரகம் செய்தார்' என்று ஸந்தேகிக்காதபடி பதிலுரைத்து குழந்தைக்கு ஸுமந்து என்று நாமகரணம் பண்ணி மிகு அன்புடன் வளர்த்து வந்தார். ஸுமந்துவானவன் ஸகல கலாவல்லவனாக ஆனான். கபிலர் தன் புதல்வனுக்கு தகுந்த வயதில் உபநயனம் செய்து நல்ல பெண்ணையும் கல்யாணம் செய்து வைத்து வெகுகாலம் கழித்து மரணத்தை அடைந்தார். போகவதியும் பர்த்தாவுடன் உடன்கட்டை ஏறினாள். ஹே அகஸ்தியரே! அந்த கபிலரே பாவனராகவும் அந்த போகவதியே ஹேமவல்லியாகவும் பிறந்தார்கள், அவர்களால் வளர்க்கப்பட்ட ஸுமந்துவே நதிஜனாக பிறந்து ஸ்ரீஸ்வாமிமலையில் ஸகல கர்மாக்களையும் செய்து அவர்களை மோக்ஷத்தை அடையும்படியாகச் செய்தான்.

ஸ்ரீஸ்வாமிமலை க்ஷேத்திரமாகாத்மியத்தில் பதினோராவது அத்யாயம் முற்றிற்று.

## பன்னிரண்டாவது அத்தியாயம்.

### (குமாரதாரையின் வரலாறு)

நந்திபகவான் சொல்லுகிறார்—

அகஸ்தியமஹர்ஷே ! குமாரதாரையின் விருத்தாந்தத்தைச் சொல்லுகிறேன், கேளும். முன்னொரு காலத்தில் கங்கைக்கு அருகாமையில் இருக்கிற நந்திக்ராமம் என்கிற ஊரில் மஹாபாபியான அமித்ரன் என்று ஒரு சூத்ரன் இருந்தான். அவன் அங்யஸ்திரீகளிடம் மோஹம் கொண்டு பணத்தின் ஆசையினால் ஒவ்வொரு தினமும் ஆபரணங்களை அணிந்து கொண்டிருக்கும் பிராமணச் சிறுவர்களை ஒருவருக்கும் தெரியாமல் கங்கைக்கு ஸமீபத்தில் கொண்டுவந்து குழந்தை வாயில் துணியை அடைத்து நகைகளை அபகரித்துக் குழந்தைகளைக் கொன்று கங்காநதியில் புதைத்துவந்தான். ஒருதினம் இவன் செய்கிற அக்ரமத்தையறிந்த அவ்வூர் கிராமாதிகாரி அவனைக் கழுமரத்தில் ஏற்றிக் கொன்றார். இப்படிக்கிருக்க, கங்காதேவியானவள் தம் மனதில் எண்ணமிடுகிறாள். ஸாதாரணமாகவே அநேகம் பேர்கள் மஹாபாபங்களைச் செய்துவிட்டு நம்முடைய ஜலத்தில் ஸ்னானம் செய்து எல்லாப் பாபங்களையும் நம்மிடம் ஒப்புவித்து பரிசுத்தர்களாகச் செல்கின்றார்கள். அதற்கே நமக்கு ஏற்பட்டிருக்கும் பாபங்களை எவ்விதம் போக்கமுடியும் என்று சிந்தித்துக்கொண்டிருக்கும்போது மஹாபாபியான அமித்ரன் பிராமணபாலகர்களைத் தினம் கொன்று நம்முடைய ஸைகதத்தில் புதைத்துச் சென்றானே. அந்த பாபத்திலிருந்து நாம் எவ்விதம் தப்பிக்கப்போகிறோம் என்று மனம் வருந்தி முப்பத்துமுக்கோடி தேவர்களால் வணங்கப்பட்டதாயும் ஸர்வாபீஷ்டங்களைக் கொடுக்கிறதாயும் மனோரஞ்ஜகமாயும் இருக்கிற கைலாஸபர்வதம்சென்று அம்மலையதனில் ஒன்பதுசக்திகளினால் தாங்கப்பட்டிருக்கும் நவரத்ன ஸிம்மாஸனத்தில் மந்தஹாஸ வதனத்தோடு தேவதேவரான சந்திரசேகரர் பார்வதியுடன் வீற்றிருப்பதைக் கண்டு ஓடோடியும் வந்து பிரதக்ஷிணநமஸ்காரங்கள் செய்து சரணாரவிந்தங்களைப் பிடித்துக்கொண்டு ஆனந்தக்கண்ணீருடன் ஸ்தோத்திரம் செய்கிறாள். "ப்ரம்ம விஷ்ணு இந்திராதிகள் நமஸ்கரித்து அர்ச்சித்த பாதாரவிந்தங்களை உள்ளவராய் ஸ்ரீமஹாவிஷ்ணுவுக்கு சக்ராயுதத்தை அளித்

தவராய் நாதபிந்து ஸ்வரூபராய் த்ரிபுராதிகளை ஸம்ஹாரம் செய்தவராய் விஷ்ணு பிரம்மாதிகளினுலும் ஓடியும் தேடியும் காணமுடியாத ஸ்வரூபம்கொண்டவராய் பக்தவாத்ஸல்யமுள்ளவராய் த்ரிணேத்திரராய் பார்வதிநாதராய் சசிசேகரராய் காலாந்தகராய்நித்யராய் மாயாதீதராய் விளங்கும் ஹே பரமேச்வர! உமக்கு அநேக நமஸ்காரம்; என் குறையைத் தாங்கள்தான் தீர்க்க வேண்டும். உலகத்திலுள்ளவர்கள் மஹாபாபங்களைச் செய்து பிறகு என்னிடம் சேர்த்துவிடுகிருர்கள். அத்துடன் பிராம்மணச்சிறுவர்களைக் கொன்று என் மணலில் ஒரு பாபி புதைத்து வந்தான். எல்லாப் பாபங்களையும் நான் நினைந்து எப்பொழுதும் வருந்துகிறேன். என்னைப் பரிசுத்தையாகச் செய்யவேண்டு"மென்று பிரார்த்தித்தாள். பகவான் கங்கையைப் பார்த்துச் சொல்லுகிருர்— "ஹே கங்கே ! உனக்கு ஏற்பட்டிருக்கும் பாபங்கள் விலக ஓர் உபாயம் சொல்லுகிறேன், கேள். தக்ஷிண தேசத்தில் ஸர்வ பாபங்களைப் போக்கடிக்கிறதாயும் அஷ்டைச்வர்யங்களைக் கொடுக்கிறதாயும் இருக்கிற காவேரி என்று ஒரு நதி இருக்கின்றது. அந்த நதியில் ஸர்வ தேவர்களும் ஸமஸ்த பிராணிகளும் ஸ்னனம் செய்கின்ருர்கள். அந்நதி தீரத்தில் இருக்கின்ற ஸ்வாமிமலேயில் பார்வதீகுமாரனுன ஸ்ரீஸ்வாமிநாதன் பக்தர்களுக்கு வேண்டிய அபீஷ்டங்களைக் கொடுத்து வஸித்துவருகிருர். நீ அவ்விடம் சென்று காவேரியில் ஸ்னனம் செய்து குமாரனைத் தர்சனம் செய்தால் உன்னுடைய பாபங்கள் எல்லாம் நாசமடையும்" என்று சொன்னுர். உடனே கங்கையானவள் திருவேரகாம் வந்து காவேரி நதியில் ஸ்னனம் செய்து ஸ்ரீ ஸ்வாமிநாதஸ்வாமியைத் தர்சனம் செய்து ஸமஸ்த பாபங்களிலிருந்து விடுபட்டவளாக ஆனுள். ஹே அகஸ்தியரே! குமாரனைத் தர்சனம் செய்யவந்த கங்காதேவியானவள் ப்ரபுவை விட்டுப் பிரிய மனமில்லாமல் தீர்த்தரூபிணியாகக் காவேரியுடன் சேர்ந்தாள். குமாரதர்சனத்திற்காகத் தாராபூர்வமாகக் கங்கை வந்தபடியினுல் குமாரதாரை என்று பெயர் வழங்கலாயிற்று. அந்தக் குமாரதாரையில் ஸ்னனம் செய்தவர்கள், இந்த அத்யாயத்தைப் படித்தவர்கள் கேட்டவர்கள் எல்லோரும் இகபரமிரண்டிலும் பரமக்ஷேமத்தை அடைவார்கள்.

ஸ்ரீ ஸ்வாமிமலே க்ஷேத்திரமாகாத்மியத்தில் குமாரதாரையின் வரலாறுகளைச் சொன்ன பன்னிரண்டாவது அத்தியாயம் முற்றிற்று.

# பதிமூன்றுவது அத்தியாயம்

## (ஸ்வாமிபுஷ்கரிணியின் வரலாறு)

அகஸ்தியர் கேட்கின்றார்—

நந்திபகவானே! குமாரதாரையின் மாஹாத்மியத்தைக் கேட்டு ஸந்தோஷமடைந்தேன். ஸ்வாமிபுஷ்கரிணியின் மஹிமையைச் சொல்லவேண்டுமென்று பிரார்த்தித்தார்.

நந்திபகவான் சொல்லுகிறார்—

ஸமஸ்த பாபங்களையும் போக்கடிக்கின்ற ஸ்வாமிபுஷ்கரிணியின் மாஹாத்மியத்தைச் சொல்லுகிறேன், கேளும். பாண்டிய தேசத்தில் தாளவனம் என்று சொல்லும்படியான ஊரில் வினதர் என்று ஒரு பிராமணர் இருந்தார். அவருக்கு மகா பதிவ்ரதாசிரோமணியான சந்திரவதி என்று ஒரு மனைவி இருந்தனள். வினதர் சிவபூஜைசெய்வதை வ்ரதமாகக் கொண்டு நடத்திவரும்போது ஒரு ஆண்குழந்தை சந்திரவதியிடம் பிறந்தது. அக்குழந்தை ஸர்வாவயவஸம்பூர்ணனாக இருந்தும் பிறப்பிலேயே குருடனாகப் பிறந்தான். வினதர் ஐந்தாவது வயதில் உபநயனம் செய்து வைத்துக் குருவிடம் வித்யாப்யாஸத்திற்கு அனுப்பினார். குருடனாக இருந்தபோதிலும், நான்கு வேதம், ஆறு சாஸ்திரம், அறுபத்துநான்கு கலைகள் எல்லாவற்றையும் அறிந்து மஹா ஸாமர்த்தியசாலியாக விளங்கினான். தன் புதல்வனுக்கு விவாஹம் நடத்திவைக்கவேண்டுமென்று அதிகப் பிரயாஸப்பட்டும் பொட்டையாக இருப்பதை நினைத்து ஒருவரும் பெண்ணைக் கொடுக்க ஸம்மதிக்கவில்லை. அதனால் மிகவும் வியாகுலத்தை அடைந்து க்ஷேத்திராடனம் செய்ய விருப்பங்கொண்டு சந்திரவதியையும் குருடனான ஸுமதியையும் அழைத்துக்கொண்டு கிளம்பினார். அநேக புண்ய க்ஷேத்திரங்கள்தோறும் சென்று புஷ்கரிணிகளில் ஸ்நாநம் செய்து ஈச்வரதர்சனம் செய்தும் புத்ரனுக்குக் கண் தெரியாமையினால் வருந்தி ஒரு காட்டின் மார்க்கமாக வேறு க்ஷேத்திரத்திற்குப் போகும்போது ஸூர்ய தாபத்தினால் தாகம் எற்பட்டு திவ்யரமணீயமான ஒரு தடாகத்தைக் கண்டு அவ்விடம் சென்று தாகவிடாயைத் தீர்த்துக் கொண்டு ச்ரமபரிகாரம் செய்துகொள்வதற்காக ஒரு விருக்ஷத்

தின் அடிவாரத்திற்கு வந்துசேர்ந்தார். அவ்விடத்தில ஒரு பில்வமரத்தினடியில் விபூதிருத்திராக்ஷதாரியாய் ஜடாமகுடத்தினுல் மிக்க அழகு பொருந்தியவராய் புலித்தோலே ஆடையாக உடையவராய் நிர்மலஸ்வரூபரான பரத்வாஜர் என்கிற மஹர்ஷியானவர் கண்மூடி மௌனியாகித் தவம் செய்துவந்தார். அவரைப் பார்த்ததும் அமிருதம் கிடைத்ததுபோல் நினேத்து ஸந்தோஷித்து தாராபுத்ரர்களுடன் வந்து நமஸ்காரம் செய்து அஞ்ஜலிஹஸ்தராய் நின்ருர். ஒரு முகூர்த்தகாலத்திற்கெல்லாம் பரத்வாஜமஹர்ஷியானவர் தவம் கலேந்து கண் விழித்துத் தன் முன்னுல் அஞ்சலிஹஸ்தனுய் நிற்கும் வினதரைப் பார்த்து "ஹே விப்ரச்ரேஷ்டரே! நீர் யார்? உன் ஸமீபத்தில் இருக்கின்ற இவ்விருவர்களுடன் இங்கு வந்த காரணம் யாது?" என்று கேட்டார். அவ்வசனத்தைக் கேட்ட வினதர் "ஹே தபோநிதியே! என் பெயர் வினதர். இவள் என் மனேவி. இவன் என்னுடைய புத்ரன். ஸமஸ்த வித்யாபாரங்கதனுக என் புதல்வன் இருந்தும் குருடனுக இருப்பதால் ஒருவரும் பெண்ணேக் கொடுக்க மறுத்துவிட்டார்கள். என்னுடைய குமாரனுன இந்த ஸுமதிக்குக் கண் தெரியவேண்டுமென்கிற எண்ணங்கொண்டு தீர்த்தயாத்திரைக்காகக் கிளம்பி அநேக புண்யதீர்த்தங்கள்தோறும் சென்று நியமமாக ஸ்னுனம் செய்துவந்தும் கார்யம் அனுகூலமாகவில்லே. இப்பொழுது எங்கள் நல்வினேயினுல் உங்களேக் கண்டேன்; ஆனந்தம் கொண்டேன். ஹே ப்ரபோ! தாங்கள்தான் எனக்குக் கிருபை செய்து ரக்ஷிக்கவேண்டும்" என்று வணங்கி வேண்டினுர்.

பரத்வாஜர் சொல்லுகிருர்:—

ஹே வினத! உன்னுடைய புத்ரன் முன்ஜன்மாவில் பிராமணச் சிறுவனுக இருக்கும்பொழுது ஸ்திரீ புமான்கள் சேர்க்கையைப் பார்ப்பதில் மிகுந்த விருப்பத்துடன் ஒருவருக்கும் தெரியாமல் மறைந்து நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டு வந்தான்; ஒரு தினம் ஸ்திரீ புருஷர்கள் ஏகாந்த ப்ரதேசத்தில் உல்லாஸமாக இருக்கும்பொழுது, அவர்களுக்குத் தெரியாமல் ஒளிந்துகொண்டிருந்த சிறுவன் அகாரணமாக சிரித்துவிட்டான். தம்பதிகளிருவர்களும் மிகவும் ஸங்கோசத்தையடைந்து வஸ்திரங்களேத் தரித்துக்கொண்டு,பிராமணச் சிறுவனேப்பார்த்து

"ஹே பாலக! எங்களுடைய க்ரீடையைப் பார்த்திருந்து விக்னம் செய்தபடியினுல் ஏழு ஜன்மா குருடனுகப்பிறக்கக்கடவா"யென்று சபித்தார்கள், ஹே வினத! உம்முடைய புதல்வனுக்கு இது ஏழாவது ஜன்மா நடக்கின்றது. இந்த ஜன்மாவிலேயே நேத்ரம் உண்டாகவேண்டுமென்கிற விருப்பம் உமக்கு இருந்தால் நான் ஒரு உபாயம் சொல்லுகிறேன் கேளும். தக்ஷிண தேசத்தில் தர்சனத்தினுல் பாபங்களை விலக்குகிறதாயும் ஜ்ஞான ப்ரதமாயும் ஸமஸ்த மங்களங்களைக் கொடுக்கிறதாயுமுள்ள காவேரி என்கிற ஒரு நதியிருக்கின்றது. அதில் உன் குமாரனை ஸ்நானம் செய்து வைத்து, அந்த நதீ தீரத்தில் விளங்குகின்ற ஸ்வாமிமலையில் வஸிக்கின்ற ஸ்ரீகுருநாதனை ஆராதித்து வந்தால் அந்த குஹனுடைய அனுக்ரஹத்தினுல் உன் மனோரதம் பூர்த்தியாகும்; செல்வாயாக" என்று உத்திரவு கொடுத்தார். உடனே வினதர் பிள்ளை பெண்டீருடன் அதிவிரைவாக நடந்து ஸ்வாமிமலை வந்து சேர்ந்தார். அவ்விடத்தில் காவேரி நதியில் ஸங்கல்பம் செய்து கொண்டு, ஸ்னனம் செய்து, பக்தியுடன் கோவிலை வலம் வந்து பக்தவத்ஸலனுய் ஸத்ய ஸங்கல்பராய் இருக்கும் பகவானைப் பார்த்து அநேக நமஸ்காரங்கள் செய்து, கண்களில் ஆனந்த பாஷ்பம் பெருக, அஞ்சலிஹஸ்தராய் நின்றுகொண்டு, 'ஹே குருநாதா! தங்களைத் தவிர்த்து எனக்கு வேறு துணை கிடையாது. என் புதல்வன் க்ஷேமத்தை அடையச் செய்யவேணு"மென்று பிரார்த்தித்து மறுபடியும் பிரதக்ஷிண நமஸ்காரம் செய்து, கொஞ்ச காலம் ஸ்வாமிமலையில் வஸிக்கக் கருதி ஒரு விடுதியில் தங்கினர். இப்படிக்கிருக்க, ஸ்ரீஸ்வாமிநாத ஸ்வாமியானவர் இவர்களுக்கு அனுக்ரஹம் செய்ய எண்ணங்கொண்டு தன் கையில் வைத்து இருக்கும் சூலாயுதத்தினுல் பூமியை தன் முன்னுல் குத்தினர். அந்த இடத்திலிருந்து பாதாள வாஹினியான கங்கையானவள் ஜலரூபிணியாகத் தோன்றினள். அன்று ஷண்முகன் வினதருடைய ஸ்வப்னத்தில் வந்து, ஹே பக்த! உன்னுடைய புத்ரனுக்கு நேத்ரம் உண்டாகுவதன் பொருட்டு என் ஸன்னிதியில் ஒரு புஷ்கரிணீ ஏற்பாடு செய்து இருக்கிறேன். அதில் ஸுமதியை ஸ்நானம் செய்துவைப்பாயாகஎன்று சொல்லி அந்தர்த்தானமானர். விடியற்காலத்தில் கண்ட ஸ்வப்னத்தைக் கண்டு களிகூர்ந்து துயிலெழுந்து நித்ய கர்மானுஷ்டானங்களை

முடித்துக்கொண்டு, பார்யா புத்ரனுடன் ஸ்ரீஸ்வாமி ஸன்னிதியில் வந்து சேர்ந்தார். ஸ்வப்னத்தில் கண்டபடி மிகவும் ரமணீயமான புஷ்கரிணியைக் கண்டு புத்ரனுடன் தடாகத்தில் ஸ்னானம் செய்தார். உடனே ஸுமதிக்கு திவ்ய லோசனங்கள் உண்டாயின. அதைப் பார்த்து வினதரும், சந்திரவதியும் ஆனந்த ஸாகரத்தில் மூழ்கி, கிரிப்ரதக்ஷிணம் செய்து, ஸ்ரீகுருநாதன் ஸன்னிதிக்கு வந்து சேர்ந்தார். அப்பெருமானைக் கண்களால் நேரில் பார்த்து மயிர்க்கூச்சல் உண்டாகி, ஆனந்தக் கண்ணீருடன் ஸுமதி ஸ்தோத்திரம் செய்கிறான்.

ஸுமதி ஸ்தோத்திரம்.

நமஸ்தே தேவ தேவேச நமஸ்தே பக்தவத்ஸல ।
நமஸ்தே பார்வதிபுத்ர நமஸ்தே சிவதேசிக ॥
சிகிவாஹன ஸர்வக்ஞ சிகிராஜநிகேதந ।
சிகிஸம்பவ தேவாத்ரிசிகராலய தே நம: ॥
கமலாஸனவந்தியாங்க்ரே கமலாங்க கராத்மஜ ।
கமலாகாந்த விநுத கமலாவஹ தே நம: ॥
ஹரிகோடிலஸன்மூர்த்தே ஹரிபிம்பநிபானன ।
ஹரிமத்தகஜாதீச ஹரிவல்லபதே நம: ॥
கோ நாத கர்வஹரண கோத்வாதச விரோஜித ।
கோபஞ்சகாயுத தகோ கோஜிதாஸுரதே நம: ।
ஸ்தூலாதிதேஹரஹிதாவஸ்த்தாத்ரயவிவர்ஜித ।
ஷடூர்மிதூர ஸர்வாத்மன் ஸச்சின்மய நமோஸ்துதே ॥
சப்தாதிவிஷயாதீத க்ரோதாகாரோங்குசோஜ்வல ।
நிர்விகார நிராகார நித்யானந்த நமோஸ்துதே ॥
பஞ்சகோச குணாதீத பஞ்சப்ரமநிவாரக ।
பஞ்சதன்மாத்ர ரஹித பஞ்சாயுத நமோஸ்துதே ॥
தத்வாதீத தயாபூத ஸ்வாந்த சாந்த ஸனாதந ।
ஸங்கதூரஸதாதார ஸ்வாமிநாத நமோஸ்துதே ॥
ப்ரும்ம ரூப பவாடோப பாபநீஹார பாஸ்கர ।
பார்வதீஸுத விச்வாத்மன் பத்ரப்ரத நமோஸ்துதே ॥

இவ்விதம் ஸ்ரீஸ்வாமிநாதனை ஸ்தோத்திரம் செய்து, ஹே ப்ரபோ! என் பொருட்டு தங்களால் நிர்மாணம் செய்யப்பட்ட

ஸ்வாமிபுஷ்கரிணியில் நியமத்துடன் ஸ்னானம் செய்து இந்த இதிஹாஸத்தைப் பாராயணம் செய்கின்றவர்களுக்கு ஸர்வாபீஷ்டங்களையும் கொடுக்கவேணுமென்று பிரார்த்தித்தான். அதின்படியே பகவானும் அனுக்ரஹம் செய்தார். ஸுமதியானவன் நல்ல குலத்திலுதித்த பெண்ணை விவாகம் செய்துகொண்டு தன் மாதா பிதாக்களுடன் ஸுகமாக வாழ்ந்தான்.

ஸ்ரீ ஸ்வாமிமலை க்ஷேத்திரமாகாத்மியத்தில் ஸ்வாமி புஷ்கரிணியின் வரலாற்றைச் சொன்ன பதின்மூன்றுவது அத்தியாயம் முற்றிற்று.

---

## பதினான்காவது அத்தியாயம்.

---

### (பிரம்மதீர்த்தத்தின் வரலாறு.)

நந்திபகவான் சொல்லுகிறார்—

ஹே கும்பஸம்பவரே! பிரம்மதீர்த்தத்தின் மாஹாத்மியத்தைச் சொல்லுகிறேன், கேளும். முன்னொரு ஸமயத்தில் பிரம்மதேவர் ஸாக்ஷாத் உமாபதியைத் தர்சனம் செய்ய எண்ணங்கொண்டு ஹம்ஸவாஹனத்தில் ஏறிக்கொண்டு கைலயங்கிரி வந்துசேர்ந்தார். அப்பொழுது ஷண்முகன் நவவீரர்களுடன் உல்லாஸமாக முதல் வாசலில் நின்றுகொண்டிருந்தார். அக்குமாரனை பிரம்மதேவன் பார்த்தும் பார்க்காததுபோல் பரமேச்வரனுடைய ஸமீபம் சென்று பூஜித்து அனுக்கிரஹம் பெற்று மறுபடியும் ஸ்கந்தனை லக்ஷியம் செய்யாது சென்றார். இதைப் பார்த்ததும் ஸேனானிக்குக் கோபம் ஏற்பட்டு 'ஹே வீரபாஹோ! இந்த சதுர்முகன் நம்மை அலக்ஷியம் செய்து நம்முடன் பேசாது செல்லுகிறான்; அதிவிரைவாக நீ சென்று அந்த பிரம்மதேவனைக் கொண்டுவா' என்று உத்திரவு செய்தார். அவ்வசனத்தின்படியே ஸரஸ்வதிநாதன் கொண்டுவந்து நிறுத்தப்பட்டார். பகவான் "ஹே சதுரானன! என்னை நீர் பார்த்தும் பார்க்காததுபோல் சென்ற காரணம் யாது? வாஸ்தவமாகவே நான் கல்வியில் சிறந்தவன் இல்லையென்று எண்ணினீரா? வேதஸ்வரூபியான பரமசிவபுத்ரன் என்றாகிலும் எண்ணவேண்டாமா? எல்லோரும் மூடர்கள் என்று எண்ணி நீரே

ஸகல சாஸ்திரங்களிலும் வல்லமையுள்ளவர் என்று மனதில் அஹங்காரம் கொண்டு என்னை அனுதரவு செய்தீர். இருந்தபோதிலும் இப்பொழுது எனக்கு ப்ரணவத்திற்கு அர்த்தத்தைச் சொல்லும்'' என்று கேட்டார். பிரம்மதேவன் மிகவும் பயந்து ப்ரணவார்த்தத்தை உரைக்கமுடியாமல் திகைத்து நின்ருர். இதைக் கண்டதும் ஷண்முகன் பிரம்மதேவனுக்கு விலங்கு பூட்டி சிறையில் வைத்தார். பிறகு வெகுகாலம் கழித்து ஸிருஷ்டித்தொழில் நின்றுவிட்டதை அறிந்த ஸர்வேச்வரனுன ஸதாசிவன் விஷயத்தை அறிந்து புத்திரனிடம் வந்து நல்ல வார்த்தை சொல்லி பிரம்மதேவனை விடுவித்தார். பிறகு சதுரானனன் பிரணவார்த்தத்தைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்கிற எண்ணத்துடன் ஸ்ரீஸ்வாமிமலை வந்து திவ்யமான ஒரு தடாகம் உண்டாக்கி ஒரு லிங்கப்ரதிஷ்டை செய்து பிரம்மலிங்கம் என்று நாமம் சூட்டி வெகுகாலம் ஆராதித்துவந்தார். பரமேச்வரன் பிரம்மாவுக்கு அனுக்ரஹம் செய்யக் கருதி ப்ரத்யக்ஷமானுர். ஸர்ப்பாபரணராய் நீலகண்டராய் அபயப்ரதராய் இருக்கும் பார்வதிநாதனைக்கண்டு ஸரஸ்வதீநாதன் 'ஹே ப்ரபோ! எனக்குப்ரணவார்த்தத்தை உபதேசிக்கவேணு'மென்று பிரார்த்தித்தார்.

ஸ்ரீசங்கரர் சொல்லுகிருர்—

"ஹே பிரம்மன்! எனக்கு உபதேசம் செய்தவராய் விளங்கும் ஸ்ரீஸ்வாமிநாதனை நமஸ்கரித்து பிரார்த்திப்பாயாக. உனக்கு அப்பெருமான் உபதேசம் செய்வார். நான் இந்த க்ஷேத்திரத்தில் உபதேசம் செய்ய அர்கனல்ல'' என்று அனுக்ரஹித்தார். உடனே பிரமன் ஸ்வாமிபுஷ்கரிணியில் ஸ்நாநம்செய்து ஸ்ரீ குருநாதனைக் குறித்துத் தவம் செய்ய ஆரம்பித்துவிட்டார். வெகுகாலம் கழித்து ஸ்ரீஸுப்பிரமண்யர் பிரத்தியக்ஷமானுர். சக்திஹஸ்தராய் கோடிமன்மதாக்ருதியாய் மந்தஹாஸவதனராய் கருணுமூர்த்தியாய் தேவஸேனு வல்லி இவ்விரு சக்திகளுடன் கூடினவராய் ஸ்வப்ரகாசனுய் தன் முன்னுல் தோன்றின பிரணவப்பொருளைப் பார்த்து எழுந்து நமஸ்கரித்து ஸ்தோத்தரிக்கின்ருர்.



ஸ்ரீ ஸ்வாமிநாதஸ்வாமி.

பதினைந்தாவது அத்யாயத்தினில்

ப்ரஹ்மாவுக்கு ப்ரணவார்த்தத்தை உபதேசித்த காக்ஷி.

(பிரம்ம ஸ்தோத்திரம்)

நமோ நமஸ்தே கிரிஜாஸுதாய
நமோ நமஸ்தே சிகிவாஹநாய ।
நமோ நமஸ்தே சிகிராட்த்வஜாய
நமோ நமஸ்தே சிகிஸம்பவாய ॥ (1)

ஸ்ரீதேவஸேனு குச ஹேமகும்ப
ஸிந்தூரஸம்முத்ரித பாஹுமத்ய ।
ஸ்ரீவல்லிகாம்பாமுக சந்திரபிம்ப
சகோரஸங்நேத்ர நமோ நமஸ்தே ॥ (2)

நித்யாய சுத்தாய நிராமயாய
ஸத்யப்ரபோதாய ஸனுதநாய ।
ஆர்யாய மார்த்தாண்ட ஸமப்ரபாய
மனேபிராமாய நமோ நமஸ்தே ॥ (3)

இவ்விதம் ஸ்துதித்து ஹே குருநாத! ப்ரணவார்த்தத்தை உபதேசிக்கவேண்டுமென்று பிரார்த்தித்தார். உடனே பகவான் பிரம்மதேவனுக்கு ப்ரணவத்தின் பொருளை உபதேசித்து மறைந்துபோனுர். ஸரஸ்வதீநாதன் மிகுந்த ஸந்தோஷமடைந்து தாரகபரமேச்வரரை வணங்கி ஸத்யலோகம் சென்றுர். ஹே அகஸ்தியரே! பிரம்மாவினுல் பூஜிக்கப்பட்ட லிங்கத்திற்கு பிரம்மேச்வரர் என்றும், தடாகத்திற்குப் பிரம்மதீர்த்தம் என்றும் பெயர் வழங்கலாயிற்று. இதைப் பாராயணம் செய்தவர்கள் ஸர்வாபீஷ்டங்களையும் அடைவார்கள்.

ஸ்ரீஸ்வாமிமலை க்ஷேத்திரமாகாத்மியத்தில்
பிரம்மதீர்த்த மாகாத்மியத்தைச் சோன்ன
பதினுன்காவது அத்தியாயம் முற்றிற்று.

## பதினைந்தாவது அத்தியாயம்.

### (சரவணதீர்த்தத்தின் வரலாறு.)

நந்திபகவான் சொல்லுகிறுர்—

ஹே குருமுனியே! முன்னெரு காலத்தில் ராதந்தரகல்பத்தில் நடந்த கதையைச் சொல்லுகிறேன், கேளும். ரேவா

நதியின் அருகில் ஹேமாகரம் என்கிற கிராமம் மிக்க அழகு பொருந்தியதாய் விளங்கியது. அந்தக் கிராமத்தில் தனவான்களாயும் சாஸ்திரங்களை நன்கறிந்தவர்களாயும் அக்னிஹோத்திரிகளாயும் உள்ள அநேகம் பிராம்மணச்ரேஷ்டர்கள் வஸித்து வந்தார்கள். அவர்களில் மந்தரன் என்று சொல்லுகிற பிராமணன் ஸர்வசாஸ்திரங்களை அப்யஸித்தும் சாந்தியில்லாமல் பிறர் செல்வங்களை அபஹரிக்க எண்ணங்கொண்டு பத்னியான காமவல்லியையும் புத்ரனான சரவணனையும் விட்டுப் பிரிந்து காட்டை அடைந்து கடிகாசலத்தின் ஸமீபத்தில் இருக்கும் ரமணீயமான ஓடையின் அருகில் ஒரு பில்வவிருக்ஷத்தின் அடிவாரத்தில் விபூதி ருத்திராக்ஷங்களைத் தரித்துக்கொண்டு தவம் செய்கின்ற மத்ஸ்யநாதர் என்கிற மஹர்ஷியைப் பார்த்து ஸந்தோஷமடைந்து, அந்த மத்ஸ்யநாதருக்குப் பணிவிடைகள் செய்துகொண்டு மந்தரனும் தவம் செய்ய ஆரம்பித்தான். இவ்விதம் மூன்று மாதம் வரையில் நிராஹாரனாய் தவம் செய்வதை அறிந்த மத்ஸ்யநாதர் அந்த மந்தரனைத் தன் அருகில் வரவழைத்து 'ஹே விப்ரச்ரேஷ்டரே! உமக்கு யாது வேண்டும்' என்று கேட்டார். இதைக் கேட்டதும் மந்தரன் 'ஹே தபஸ்வியே! நான் எந்த ரூபம் எடுக்கவேண்டுமென்று எண்ணுகிறேனோ அந்த ரூபம் உண்டாகவேண்டும்' என்று வேண்டினான். இதைக் கேட்டதும் மத்ஸ்யநாதர் "ஹே பிராம்மண! இந்த மூலிகையை ஒருவருஷம்வரையிலும் உபயோகப்படுத்திவந்தால் எதை மனதில் எண்ணுகிறாயோ அதன்படி நடக்கும்" என்று அநுக்ரஹித்தார். 'ஒரு வருஷம் வரையில் விடாமல் மந்தரன் மூலிகையை உண்டுவந்தான். அதனால் மனக்கோரிக்கை நிறைவேறி மஹர்ஷியிடம் அனுமதி பெற்றுக்கொண்டு தன் கிராமம் வந்து சேர்ந்து தன் மனைவியிடம் விஷயங்களைச் சொல்லி புலி பூனை முதலான ரூபங்களை எடுத்துக்கொண்டு அவ்வூர் வாஸிகள் எல்லோரையும் பயப்படும்படி செய்துவந்தான். இந்தக் கார்யத்தைக் கண்டு மனதிற்குப் பிடிக்காமல் காமவல்லியானவள் "நாதா! தாங்கள் செய்துவருகிற கார்யம் ஒழுங்காக இல்லை. யாராகிலும் பெரியோர்கள் உங்களை சபித்துவிடுவார்கள். இந்த அக்ரமமான கார்யத்தைச் செய்யக்கூடாது" என்று தடுத்தும் கேட்காமல் கெட்ட நடத்தையைச் செய்துவந்தான். இப்படி இருக்க ஒரு நாள் ஜமதக்னிமுனி கிராமத்தின் அருகில் வரும்

போது ஸூர்யதாபத்தினல் வருந்தி ஒரு மரத்தினடியில் தங்கினர். அந்த ஸமயத்தில் மந்தரன் கரடிரூபம் எடுத்து உருமிக்கொண்டு எல்லோர்களையும் பயப்படச்செய்து கடைசியில் ஜமதக்னிமுனிவரை விரட்டினன். முனிவர் மிகவும் பயந்து ஸமீபத்தில் இருக்கும் ஓடையில் இறங்கி த்ரிகாலமறிந்த மகாஞனதால் மந்தரனுடைய விஷயங்களை அறிந்து மஹாகோபத்துடன் "ஹே பாபி! நீ விப்ரனுக இருந்தும் கரடிவேஷமெடுத்து ஜனங்களை ஹிம்ஸித்து என்னையும் அஞ்சும்படி செய்தபடியினல், நீ கரடியாகவே ஆகக்கடவாய்" என்று சபித்தார். மந்தரன் மறுபடியும் தன் ரூபத்தை எடுத்துக்கொள்ளமுடியாமல் திகைத்து அவர் முன்னிலையிலேயே ஏங்கிநின்றுன். இந்த ஸமாசாரத்தைக் கேள்விப்பட்ட காமவல்லியானவள் தன் குழந்தை சரவணனையும் அழைத்துக்கொண்டு ஓடோடியும் வந்து மஹாகோபத்துடன் வீற்றிருக்கும் ஜமதக்னிமஹர்ஷியைக் கண்டு வணக்கத்துடன் நமஸ்கரித்து சரணகமலங்களைப் பிடித்துக்கொண்டு இருவர்களும் பிரார்த்திக்கின்றுர்கள்— "ஹே ஸ்வாமின்! என்னுடைய நாதன் இவர்; இந்தப் பையனுக்கு தகப்பன்; பெரிய கல்விமானுக இருந்தும் ஏதோ காலவித்யாஸத்தினல் கெட்ட மார்க்கத்தை அவலம்பித்து எல்லோருக்கும் பீதியை உண்டுபண்ணிவந்தார். தாங்கள் மகிமையை அறியாது தங்களுக்கும் அபசாரம் செய்து தீராத கஷ்டத்தை அனுபவிக்கும்படி ஆகிவிட்டார். ஹே கருணைக்கடலே! நான் என் நாதனை இழந்து எங்கு செல்வேன்? தாங்கள் கிருபைசெய்து மஹாபராதம் செய்தவராக இருந்தபோதிலும் என் நாதனைக்குப் பூர்வரூபத்தைக் கொடுக்கவேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறேன்" என்று வேண்ட, அதனல் மஹர்ஷி ஸந்தோஷமடைந்து அனுக்ரஹம் செய்யக்கருதி 'குழந்தாய் சரவண! நான் கொடுத்த சாபத்தைப் போக்கடிக்க நம்மால் முடியாது; உன்னுடைய பிதா ஸ்வரூபத்தை அடைய ஓர் உபாயம் சொல்லுகிறேன், கேளு. தக்ஷிணதேசத்தில் ஸ்மரணத்தினல் ஸர்வ பாபங்களை நாசம் செய்கிறதாயும் தர்சனத்தினல் மோக்ஷத்தைக் கொடுக்கிறதாயும் இருக்கிற காவேரி என்று ஒரு புண்யநதி இருக்கின்றது. அதற்கு உத்தரதீரத்தில் ஸ்வாமிமலையில் பகவான் ஸ்ரீஸ்வாமிநாதன் ஸர்வாபீஷ்டங்களையும் பக்தர்களுக்கு அளித்

துக்கொண்டு விளங்குகிறார். நீ கரடிரூபங்கொண்ட உன் பிதாவுடன் அவ்விடம் சென்று ஒரு தடாகம் உண்டாக்கி அந்த தீர்த்தத்தில் உன் தகப்பனை ஸ்நாநம் செய்துவைப்பாயாக. ஸ்ரீகுருநாதன் திருவருளால் உன்னுடைய அபீஷ்டம் நிறைவேறும்" என்று சொல்லி ஜமதக்னிமுனிவர் சென்றார். உடனே சரவணன் தாயார்தந்தையருடன் ஸ்வாமிமலை வந்துசேர்ந்து ஸ்ரீமுருகனுக்கு ஈசான திசையில் ஒரு தடாகம் நிர்மாணம் செய்து நிர்மலமான தீர்த்தத்தோடு கூடின அந்த புஷ்கரிணியில் தன் தகப்பனாரை ஸ்நாநம் செய்துவைத்தான். மந்தரனும் பூர்வரூபத்தை அடைந்தான். பிறகு எல்லோரும் ஸ்நாநம் செய்து ஸ்ரீஸ்வாமிநாதஸ்வாமிக்கு அபிஷேகாதிகள் செய்துவைத்து ப்ரஸாதம் பெற்று ஆனந்தபரவசராக ஆகி கொஞ்சகாலம் அந்த க்ஷேத்திரத்திலேயே வஸித்து அந்தத்தில் திரும்புதல் இல்லாததான மேலான பதத்தை அடைந்தார்கள். ஹே அகஸ்தியரே! சரவணன் நிர்மாணம் செய்ததினால் சரவணதீர்த்தம் என்று வழங்கலாயிற்று. அந்தப் புண்யதீர்த்தத்தில் ஸ்நாநம் செய்கிறவர்கள் மேலான உலகத்தை அடைகின்றார்கள். இந்த அத்யாயத்தை படனம் செய்தவர்கள் இதைக் கேட்கின்றவர்கள் எல்லோருக்கும் ஸ்ரீ குருநாதன் தர்மார்த்த காமமோக்ஷங்களைக் கொடுக்கின்றார்.

ஸ்ரீ ஸ்வாமிமலை க்ஷேத்திரமாகாத்மியத்தில் சரவணதீர்த்தத்தின் மகிமையைச் சோன்ன பதினைந்தாவது அத்தியாயம் முற்றிற்று.

---

## பதினாறுவது அத்தியாயம்.

---

க்ஷேத்திரவிசேஷங்கள் சொல்லப்படுகின்றன. ஹே அகஸ்திய மஹர்ஷியே! ஸர்வபாபங்களையும் நாசம் செய்கிறதாயும் எல்லா க்ஷேத்திரங்களைக்காட்டிலும் மிகவும் மேன்மை பொருந்தியதுமான ஸ்ரீஸ்வாமிமலை க்ஷேத்திரமாகாத்மியத்தைச் சொன்னேன்; ஒருவன் எவ்வளவு பாபங்கள் செய்திருந்தபோதிலும் ஸ்வாமிமலை சென்று ஸ்ரீ குருநாதனைத் தர்சனம் செய்யப் போகிறேன் என்று சொன்னமாத்திரத்திலேயே ஸமஸ்த பாபங்களாலேயும் விடுபட்டவனாக ஆகிவிடுகிறான். பன்னிரண்டு மாதங்களிலும் விசேஷங்களைச் சொல்லுகிறேன், கேளும்.

(சித்திரைமாத பலன்)

சித்திரைமாதத்தில் சுக்லபக்ஷத்தில் அஷ்டமியுடன் சேர்ந்த திருவாதிரைநக்ஷத்திரத்தில் ப்ரபாதகாலத்தில் எழுந்து கர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு சாஸ்திரவிதிப்பிரகாரம் ஸங்கல்பம் செய்துகொண்டு மௌனமாக ஸ்வாமிதீர்த்தத்தில் ஸ்னானம் செய்தால் பிரம்மஹத்தியினால் ஏற்பட்ட பாபங்கள் விலகி க்ஷேமத்தை அடையலாம்.

(வைகாசிமாத பலன்)

வைகாசிமாதத்தில் சுக்லபக்ஷா திதியில் அபபரணீநக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் ப்ராத:காலத்தில் எழுந்து நித்யக்கடன்களை முடித்துக்கொண்டு சிரத்தையாக காவேரி என்கிற குமார தாரையில் ஸ்னானம் செய்து ஒரு ரூபாய் அல்லது அரைரூபாயாகிலும் ஒரு சிவபக்தருக்குக் கொடுத்து சக்திதானுன ஸ்ரீ ஸ்வாமிநாதஸ்வாமியைத் தர்சனம் செய்தால் பசுவைக்கொன்ற தோஷம் விலகி க்ஷேமத்தை அடையலாம்.

(ஆனிமாத பலன்)

ஆனிமாதத்தில் சுக்லபக்ஷஸப்தமிதிதியன்று பரிசுத்தமான மனதுடன் நான் மத்யபானம் செய்தேன் என்று சொல்லி, ஸ்வாமிதீர்த்தத்தில் ஸ்னானம் செய்து ஸ்ரீ ஸ்வாமிநாத ஸ்வாமியைத் தர்சித்தால் ஸுராபானதோஷம் விலகி க்ஷேமத்தை அடையலாம்.

(ஆடிமாத பலன்)

ஆடிமாதத்தில் பௌர்ணமியிலோ அல்லது அமாவாஸை யன்றோ ஸ்வாமிதீர்த்தத்தில் ஸ்நாநம் செய்து குடும்பிகளான ச்ரோத்ரியர்களுக்கு ஸ்வர்ணமாகிலும் வஸ்திரமாகிலும் தானம் செய்து ஸ்ரீ பகவானைத் தர்சனம் செய்தால் ஸ்வர்ணத்தைத் திருடின தோஷம் விலகி க்ஷேமத்தை அடையலாம்.

(ஆவணிமாத பலன்)

ஆவணிமாதத்தில் ப்ரோஷ்டபதநக்ஷத்திரத்துடன் கூடின ஞாயிற்றுக்கிழமையன்று ஸூர்யமந்திரங்களினால் ஸ்வாமிதீர்த்தத்தில் ஸ்நாநம் செய்து அக்னிஹோத்ரிகளுக்கு ஸ்வர்ணங்களினால் அலங்கரிக்கப்பட்ட அழகுள்ள பசுவைத் தானம் செய்தால் மிகவும் மேலான பதவியை அடையலாம்.

(புரட்டாசிமாத பலன்)

புரட்டாசிமாதத்தில் அஷ்டமிதிதியில் ஸ்வாமிதீர்த்தத்தில் ஸ்நாநம் செய்தால் அன்னவிக்ரயம் முதலான பாபங்கள் விலகும்.

(அற்பசிமாத பலன்)

அற்பசிமாதத்தில் கிருஷ்ணபக்ஷத்தில் ஞாயிற்றுக்கிழமையன்று ஸ்வாமிதீர்த்தத்தில் மூன்று தடவை ஆசமனம் செய்து ஸ்வாமியைப் பிரதக்ஷிணம் செய்து ஸ்ரீ ஆண்டவனுக்கு அபிஷேகாதிகள் நடத்தி பிறகு ஆறுரஸங்களோடு கூடின ஆஹாரங்களைப் பக்தர்களுக்குச் செய்துவைத்தால் எந்தவிதமான பாபங்களும் விலகிப்போய்விடும்; ஸமஸ்த மங்களமும் உண்டாகும்.

(கார்த்திகைமாத பலன்)

கார்த்திகைமாதத்தில் கிருத்திகையிலாவது பௌர்ணமியிலாவது ஸ்வாமிதீர்த்தத்தில் ஸ்நாநம் செய்து பிராமணர்களுக்குச் சக்திக்குத் தகுந்தபடி ஸுவர்ணம் தக்ஷிணை கொடுத்து நெல்லிபத்ரங்களால் பார்வதீகுமாரனை அர்ச்சித்தால் இருபத்தோறு வம்சத்தைக் கரையேற்றி ஏழு ஜன்மாக்களில் செய்த பாபங்கள் விலகி ஸ்கந்தலோகத்தையடைந்து ஸாரூப்யத்தையடைந்து மூன்று கல்பத்திற்குப் பிறகு வேதவித்துக்களான விப்ரச்ரேஷ்டர்களின் வம்சத்தில் பிறந்து மிகவும் தனிகனுயிருந்துகொண்டு அநேக ஸௌக்யங்களை அனுபவிக்கிறுன். பூமியில் உள்ளவர்கள் அறியாமல் ஸ்வாமிமலைக்குச் செல்லாமல் இருந்தால் அவர்கள் நூறு ஜன்மாக்களில் கழுதையாகப் பிறக்கிறுர்கள், ஸத்யம்.

(மார்கழிமாத பலன்)

மார்கழிமாதத்தில் மிருகசீர்ஷநக்ஷத்திரங்கூடிய சுபதினத்தில் ஸ்வாமிதீர்த்தத்தில் ஸ்நாநம்செய்து கிரிப்ரதக்ஷிணம்செய்து பூதானம் செய்தால் நிச்சயமாக அடுத்த ஜன்மாவில் அரசனுகப் பிறப்பார்கள்.

(தைமாத பலன்)

தைமாதத்தில் பால்குனசுத்தத்தில் ஒரு பிடி அன்னம் கொடுத்தால் மேருமலைக்கு நிகரான புண்யம் உண்டாகும். அத்துடன் ஸ்ரீஸ்வாமிநாதஸ்வாமிக்கு மிகவிமரிசையாக ரதோத்ஸவத்தை நடத்திவைத்தவர்கள் பிரம்மாதிதேவர்களால்

ஸ்தோத்ரிக்கப்பட்டு திவ்யஸுகங்களை அனுபவித்து மறுபடியும் உத்தமவம்சத்தில் பிறந்து அநேக யாகங்கள் செய்து பிறகு ஸ்கந்தனுடைய உலகத்தை அடைகின்றார்கள்.

(மாசிமாதப் பலன்).

மாசிமாதத்தில் மகாநக்ஷத்ரத்தில் ஸ்நாநம் செய்து பரிசுத்தனாய் கிருஷ்ண எள்ளுடன் கூடிய பாத்ரத்தைக் கொடுக்கிறவன், ஸம்ஸாரபந்தத்திலிருந்து விடுபடுகிறான்.

(பங்குனிமாத பலன்)

பங்குனிமாதத்தில் உத்தரபல்குனிநக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் மௌனியாகஇருந்து உதயாத்பூர்வம் ஸ்வாமிதீர்த்தத்தில் ஸ்நாநம் செய்தால் எல்லாவிதமான பாபங்களும் விலகி மேலானவர்களாக ஆகின்றார்கள். இந்த க்ஷேத்திரத்தில் எவர்கள் இருக்கின்றார்களோ, எவர்கள் பிறக்கின்றார்களோ, எவர்கள் வஸிக்கின்றார்களோ அவர்கள் தேவர்கள்தான்; கொஞ்சம் கூட ஸந்தேஹமில்லை. ஸ்வாமிமலைக்குப் போகிறேன் என்று சொல்லி மூன்றடி வைத்தவர்கள் அச்வமேதபலனை அடைகின்றார்கள். இன்னமும் மலையில் தீபம் வைக்கின்றவர்கள் அந்த தீபத்தைத் தர்சனம் செய்தவர்கள் ஸம்ஸாரகஷ்டங்களையடையமாட்டார்கள். பஞ்சாம்ருதங்களினாலும் பஞ்சகவ்யங்களினாலும் சுத்தோதக குசோதகங்களாலும் மிகுந்தபக்தியுடன் மஹாபிஷேகத்தை ஸ்ரீஸ்வாமிநாதஸ்வாமிக்கு நடத்திவைக்கின்றவர்களுக்கு பித்ரு மாத்ருஹத்தி பண்ணின தோஷம் எல்லாம் விலகிப் பரிசுத்தராக ஆகிவிடுவார்கள். பணமிருந்தும் உலோபியாக இருந்தால் மஹாபாபியாக ஆய்விடுவன். கோவில் திருப்பணி தர்மத்தைத் தான் ஏகதேசத்தில் நடத்தமுடியாமலிருந்தால் யாசித்தாகிலும் அவச்யம் செய்யவேண்டும். அப்படி ஸ்ரீகார்யங்களைச் செய்தவர்களுக்குப் பலன் எவ்வளவு என்று சொல்லுவதற்கு ஸரஸ்வதிநாதனாலும் முடியாது. இந்த க்ஷேத்திரத்திரத்திற்கு நல்ல பசுவாகக் காணிக்கை செலுத்தினவர்கள் பரமமங்களத்தை அடைகின்றார்கள். எப்படியாவது மேலே சொல்லப்பட்டபடி ஒவ்வொரு மாதங்களிலும் நியமமாகப் புண்யங்களைச் செய்கின்றவர்கள் திரும்புதல் இல்லாததான ஸ்கந்தனின் உலகத்தை அடைகின்றார்கள். ஹே அகஸ்தியமஹர்ஷியே!

ஸ்வாமிமலை க்ஷேத்திரமாகாத்மியத்தைப் பாராயணம் செய்கின்றவர்களின் பித்ருக்கள் ஸந்தோஷமடைகின்றார்கள். அஷ்டைச்வர்யப்ரதமாயும் ஸ்வாமிமலையுடன் ஐந்து க்ரோசம் கொண்டதாயும் இருக்கிற இந்த ஸ்ரீஸ்வாமிநாதஸ்வாமியின் திவ்யசரித்திரங்களை உன்னிடம் ஏற்பட்ட அன்பினால் சொன்னேன். ஆஸ்திகர்களுக்குச் சொல்லக்கூடும்; நாஸ்திகர்களுக்குச் சொல்லக்கூடாது என்று சொல்லி நந்திபகவான் மறைந்துபோனார். அகஸ்தியர் பரமஸந்தோஷமடைந்து தவம் செய்வதற்குச் சென்றார்.

ஸூதர் சொல்லுகிறார்:—

ஹே நைமிசாரண்ய ருஷிகளே! நான் பரமாசார்யாளான வேதவ்யாஸமஹர்ஷியிடமிருந்து கேட்ட ஸ்ரீகுருநாதனுடைய திவ்ய சரித்திரங்களை உங்களுக்குச் சொன்னேன். ஸமஸ்த மங்களங்களும் உண்டாகக்கடவது என்று ஸூதபுராணிகர் அனுக்ரஹித்துச் சிஷ்யர்களுடன் க்ஷேத்திராடனம் செய்யப் புறப்பட்டுவிட்டார்.

ஸ்ரீஸ்வாமிமலை க்ஷேத்திரமாகாத்மியத்தில் பதினாறாவது
அத்யாயம் முற்றிற்று.

ஸ்ரீஸ்வாமிமலை க்ஷேத்திரமாகாத்மியம் முற்றிற்று.



## ஸ்ரீ மீனாக்ஷி ஸுந்தரேச்வரரின் வரலாறு.

மதுராபுரியை நீதிதவராது அரசுபுரிந்துவந்த வரகுணபாண்டியன் ஒரு தினம் வேட்டையாட எண்ணங்கொண்டு, நான்கு வகை ஸேனைகளுடன் அரண்யம்சென்று வேட்டையாடி, தன் நகரை நோக்கி வருங்காலத்தில் அரசன் ஏறிவரும் அச்வமானது தற்செயலாய்ஒரு பிராமணனை மிதித்துவிட்டது. அதனால் அந்த விப்ரன் மரணத்தை அடைந்தான். உடனே அரசன் மதுராநகரம் வந்து, அனேக பிராயச்சித்தங்கள் செய்தும், பிரும்மஹத்தி நீங்காது மிகவும் துன்பத்தை அடைந்து வருந்தி, ஸ்ரீமீனாக்ஷி ஸுந்தரேச்வரரை ப்ரார்த்திக்க,ஒருஅசரீரி உண்டாயின— "ஹே வரகுண ! நீ ஒன்றுக்கும் அஞ்சுதல்வேண்டாம். அதிசீக்கிரமாக ரோமசமகர்ஷியினால் ஸேவிக்கப்பட்ட திருவிடைமருதூரை அடைந்து காவேரி நதியில் ஸ்நானம் செய்து ஸ்ரீமத்யார்ஜுனேச்வரரை ஆராதிப்பாயாக. அந்தப் பரமேச்வரருடைய கிருபையால் உனக்கு ஏற்பட்டிருக்கும் பிரும்மஹத்தி தோஷம் விலகி விடும்" என்பது. அவ்வசனப்படியே பாண்டியன் பிரயாணமாகி, அனேக க்ஷேத்திரங்களைத்தர்சனம் செய்துகொண்டு வரும் பொழுது ஸ்ரீஸ்வாமிமலை வந்ததும், வரகுண பாண்டியனுக்கு ஒரு புதிதான உணர்ச்சி ஏற்பட, உடனே தன்னுடைய ஆசார்யர் மூலமாக குருநாதனுடைய மாகாத்மியத்தைக் கேட்டு, குமாரதாரையில் ஸ்நானம் செய்து கிரியை வலம் வந்து, ஆலயத்திற்குள் பிரவேசித்த உடன் விக்னேச்வரரை தர்சித்து, ஸ்ரீமகாலிங்க தர்சனம் செய்ய எண்ணி பெரியோர்களை விசாரிக்குங் காலத்தில் இந்த க்ஷேத்திரத்தில் லிங்கம் கிடையாது என்று சொன்ன வசனத்தைக் கேட்டு, தினமும் ஸ்ரீ மீனாக்ஷிரமணனை தரிசிக்காது இருப்பதில்லை என்கிற வைராக்யம் கொண்ட பாண்டியன் ஸ்ரீ பார்வதீநாதனைத் துதிக்க, உடனே ஹாலாஸ்யநாதர் அவ்விடந்தனில் வரகுணபாண்டியனுக்கு உலகமாதாவான ஸ்ரீ மீனாக்ஷி தேவியுடன் ஸ்ரீஸுந்தரேச்வரர் பிரத்யக்ஷமாக ஆனார். அப்பரம்பொருளை வணங்கி, ஸ்ரீஸ்வாமிநாதஸ்வாமிக்கு அபிஷேகாதிகள் நடத்தி ஸ்ரீ கார்த்திகேயன் அருள்பெற்று ஸ்ரீ மத்யார்ஜுனம் சென்றான். மதுரையம்பதியில் வீற்றிருக்கும் மீனாக்ஷி ஸுந்தரேச்வரரே இந்த க்ஷேத்திரந்தனில் தோன்றியபடியினால் ஸ்ரீமீனாக்ஷிஸுந்தரேச்வரரைத் தர்சித்தவர்கள் ஸமஸ்த மங்களங்களையும் அடைவார்கள். [இந்த விஷயம் வேறு மாகாத்மியங்களில் சொல்லி இருப்பதால் பக்தர்களின் உபகாரத்தின் பொருட்டு இங்கு அச்சிடத் துணிந்தேன்.]

# விசேஷக் குறிப்பு.

## பஞ்சக்ரோச யாத்ரையுடன் ஸ்வாமி தர்சனம் செய்யவேண்டிய முறைகள்.

### முதல் க்ரோசம்

ஸ்ரீஸ்வாமிமலைக்கு தென்மேற்காக இருக்கும் திருவலஞ்சுழி சென்று புஷ்கரணியில் ஸ்நானம் செய்து, நித்ய நாயகியுடன் கூடின ஸ்ரீ ஸித்தீச்வரரைத் தர்சித்து, ஸர்வ விக்னங்களையும் விலக்கி, ஸர்வாபீஷ்டங்களையும் அளிக்கும் அமிருதஸ்வரூபமான ஸ்ரீச்வேத விக்னேச்வரரை வணங்கி, மோதகம் முதலான பக்ஷ்ய வர்க்கங்களுடன் நிவேதனம் செய்து, பிராமண ஸந்தர்ப்பணம் செய்து, இரவு க்ஷேத்ர உபவாஸம் இருந்து மறுதினம் காலையில் எழுந்திருந்து ஸ்நானம் செய்து, பித்ரு தர்ப்பணம் செய்த பின் பிரதக்ஷிணம் செய்து, ஸ்ரீச்வேதவிக்னேச்வரரிடம் உத்திரவு பெற்று.

### இரண்டாவது க்ரோசம்.

ஸ்ரீ ஸ்வாமிமலைக்கு வடமேற்காகவிருக்கும் திருப்புள்ளம் பூதங்குடி சென்று, கிருத்திரதீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, ஜடாயுவுக்கு மோக்ஷமளித்த ஸ்ரீராமபிரானை வணங்கி, அபிஷேகாதிகள் நடத்தி பிராமண ஸந்தர்ப்பணம் செய்து இரவு க்ஷேத்ர உபவாஸம் இருந்து ஜடாயு தீர்த்தத்தில் தர்ப்பணம் செய்து, ஸ்ரீராமச்சந்திரஸ்வாமியிடம் உத்திரவு பெற்று.

### மூன்றாவது க்ரோசம்.

ஸ்ரீஸ்வாமிமலைக்கு வடகிழக்காக இருக்கும் திருவேரகாம் என்று வழங்கி வரும் குமாரபுரம் (முருகன் தான் லிங்கபிரதிஷ்டை செய்து பூஜித்து ஸ்ரீபரமேச்வரரிடம் மகாபாசுபதாஸ்திரம் பெற்றார். அதினால் குமாரபுரம் என்று பெயர் உண்டாயின). என்றக்ஷேத்திரத்திற்கு சென்று புஷ்கரணியான சரவணப்பொய்கையில் ஸ்னனம்செய்து,(கங்காதேவியுடன்) ஸ்கந்தபரமேச்வரரை வணங்கி, மஹாபிஷேகாதிகள் நடத்திவைத்து பிராமண ஸந்தர்ப்பணம் செய்து இரவு க்ஷேத்ர உபவாஸமாக இருந்து மறுதினம் காலையில் எழுந்திருந்து சரவணப்பொய்கையில் பித்ரு தர்ப்பணம்

செய்துபிரதக்ஷிணம் செய்து, ஸ்ரீஸ்கந்த பரமேச்வரரிடம் உத்திரவு பெற்று.

### நான்காவது க்ரோசம்.

ஸ்ரீஸ்வாமிமலைக்குத் தென்கிழக்கில் கும்பகோணம் என்று வழங்கிவரும் திருக்குடமூக்கு சென்று புஷ்கரணியில் ஸ்னானம் செய்து, ஆதிகும்பேச்வரருக்கு அபிஷேகம் முதலானவைகளை நடத்தி, அனுமதிபெற்று ஸ்ரீமந்திரபீடந்தனில், பராசக்தி, ஆதிசக்தி, இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி என்கிற ஐவகை சக்திகளின் ஸ்வரூபிணியாய் அநேகம் தாஸிகளோடு கூடினவளாய் ஸிம்மவாகனந்தன்னில் அமர்ந்திருக்கும் ஸ்ரீ மங்களாம்பிகா தேவிக்கு அபிஷேகாதிகளுடன் ஸஹஸ்ரநாமார்ச்சனை செய்து, பின் பிராமண ஸந்தர்ப்பணம் நடத்தி இரவு க்ஷேத்ர உபவாஸம் இருந்து, காலையில் காவேரியில் ஸ்னானம் செய்து பிதுர் தர்ப்பணம் செய்து ஸ்ரீமங்களாம்பிகா தேவிபிடம் உத்திரவு பெற்று பிரதக்ஷிணமாக.

### ஐந்தாவது க்ரோசம்.

ஐந்தாவது க்ரோசமான ஸ்வாமிமலை வந்து சேர்ந்து குமாரதாரை என்று வழங்கி வரும் பாகீரதிநதியில், ஸங்கல்பபூர்வமாக ஸ்னானம் செய்து, பிராமணர்களுக்குக் காவேரி ஸ்னானதக்ஷிணை கொடுத்து வெண்பட்டாடை உடுத்தி, விபூதியைத் தரித்து உருத்திராக்ஷமாலை அணிந்து, மௌனமாக கிரிப்பிரதக்ஷிணம் செய்து, தெற்கு கோபுரவாயிலில் வந்து த்வாரபாலகர்களைத் தர்சனம் செய்து, சதிர்க்காய் உடைத்து, தன் பெயர், கோத்ரம் இவைகளைச் சொல்லி, ஐந்து நமஸ்காரங்கள் செய்து, மிக வணக்கத்துடன் கோபுரவாசல் நடுவில் இருக்கும் தெய்வப் பெண்களை வணங்கி பிரதக்ஷிணம் வந்து க்ஷேத்ர கூபமான கங்கையில் ப்ரோக்ஷண ஸ்நான ஆசமனம் செய்து, ஸோபானமாக (படிகளாக) இருக்கிற ப்ரபவ முதலான அறுபது வருஷ தேவர்களையும் வஸந்தன் முதலான ஆறு ருதுக்களையும் பிரார்த்தித்து, மலைப்படிகளில் ஏறி, பிரதக்ஷிணம் செய்து, த்வஜஸ்தம்பத்தின் அடிவாரம் வந்து பரமபக்தனான கணநாதரையும், நவவீரர்களையும் அர்ச்சித்து ப்ராகாரம் சுற்றிவந்து, மண்டபங்களில் வஸிக்கின்ற முப்பத்தி முக்கோடி தேவர்களையும் வணங்கி, ஸ்ரீதாரகபரமேச்வர

ருக்கு அர்ச்சனை செய்து, உத்திரவு பெற்று பிரும்மவிஷ்ணு ருத்ரஸ்வரூபமாய் இருக்கும் குன்றில் சரணாகதவத்ஸலனாய், சக்திதரனாய், சிவதேசிகனாய் வீற்றிருக்கும் ஸ்ரீஸ்வாமிநாதஸ்வாமிக்கு ருத்ரபாராயணத்துடன் மஹாபிஷேகம் விபூதி அபிஷேகத்தைப் பார்த்துகளித்து ஆறுரஸத்துடன்கூடினபதார்த்தங்களைநைவேத்யம் செய்து, ஸஹஸ்ர நாமார்ச்சனை செய்து, ஸ்ரீ ஸ்வாமிநாதஸ்வாமியைப் பார்த்தபடியே புறங்காட்டாது கீழ் இறங்கிவந்து ப்ரதக்ஷிணம் வந்து கீழ கோவில் வாசற்படி வழியாக ஸ்வாமி புஷ்கரணிதீரம் வந்து ப்ரோக்ஷணஸ்நான ஆசமனங்கள் செய்து, மறுபடியும் கீழ வாசல் வழியாகவே உள்ளே சென்று ப்ராகாரமூலைதனில் ஸமஸ்த பித்ருக்களும் வஸிக்கின்ற பூமியான க்ஷேத்ரவிருக்ஷத்தை நமஸ்கரித்து, பித்ரு தர்ப்பணாதிகளைச் செய்து, தென்வாசலில் வந்து நின்று, பிராம்மீ, மாகேச்வரி, கௌமாரி, வைணவி, வராஹி, இந்திராணி, சாமுண்டிமுதலான ஏழு தாயார்கள் வஸிக்கின்ற ஏழு கோபுரங்களைத் தர்சனம் செய்து, இல்லம் வந்து பிராமண ஸந்தர்ப்பணம் நடத்தி தாம்பூலம்தக்ஷிணையுடன் பிராம்மணர்களுக்குத் திருப்தி செய்து வைத்தவர்கள், இவ்வுலகத்தில் ஸகல பாக்யங்களையும் பெற்று முடிவில் அனந்த கல்யாண குணங்களோடு சக்தியைத் தரித்தவரான ஸ்ரீஸ்கந்த உலகத்தை அடைந்து குஹனோடு எப்பொழுதும் வஸிக்கும்படியான மகா பாக்யசாலிகளாக ஆகிவிடுகிறார்கள். முன்னொருகாலத்தில் ஹேஹயதேச மன்னன் சிவத்ரோகம் செய்ததினால் அடைந்த தீராத வாத ரோகத்தினால் நலிந்து, ஜாபாலி மஹர்ஷியின் உத்திரவின்படி ஸ்ரீஸ்வாமிமலையை அடைந்து மேல் சொல்லிய வண்ணம் ஸ்ரீ குருநாதனை ஆராதித்து, ரோகத்திலிருந்து விடுபட்டு, ஸ்ரீ குருநாதனுக்கு ஸ்வர்ண கவசம் முதலான ஆபரணங்கள் செய்து வைத்து பெருமானது கருணையினால் மிகுந்த வலிமையடைந்தவனென்று அனைவராலும் கொண்டாடப்பட்ட கார்த்தவீர்யனைப் பெற்றான்.

சுபம்.

## திருப்புகழ்.

1. சரணகமலாலயத்தை அரைநிமிஷ நேரமட்டில்
தவமுறைதியானம் வைக்க அறியாத
சடகசட மூடமட்டி பவவினையிலே சனித்த
தமியன் மிடியால் மயக்க முறுவேனோ
கருணைபுரியா திருப்ப தெனகுறையாவேளை செப்பு
கயிலைமலை நாதர் பெற்ற குமரோனே
கடகபுயமீதிரத்ந மணியணிபொன்மாலைசெச்சை
கமழுமணமார்கடப்ப மணிவோனே
தருணமிதையா மிகுந்த தனமதுறுநீள் சவுக்ய
சகலசெல்வயோகமிக்க பெருவாழ்வு
தகைமை சிவஞானமுத்தி பரகதியும் நீ கொடுத்து
தவிபுரியவேணுமெய்த வடிவேலா
அருணதளபாதபத்ம மறுநிதமுமேதுதிக்க
அரியதமிழ்தானளித்த மயில்வீரா
அதிசயமனேகமுற்ற பழனிமலைமீதுதித்த
அழகதிருவேரகத்தின் முருகோனே.

2. நாவேறுபாமணத்த பாதாரமேநினைத்து
நாலாறு நாலுபற்று வகையான
நாலாறுமாகமத்திநூலாயஞானமுத்தி
நாடோறுநானுரைத்த நெறியாக
நீவேறெனாதிருக்க நான்வேறெனாதிருக்க
நேராக வாழ்வதற்கு னருள்கூர
நீடார்சடாதரத்தின் மீதேபராபரத்தை
நீகாணெனா அனைச்சொ லருள்வாயே
சேவேறுமீசர்சுற்ற மாஞானபோதபுத்தி
சீராகவே யுரைத்த குருநாதா
தேரார்கள் நாடுசுட்ட சூரர்கள் மாளவெட்டு
தீராகுகாகுறத்தி மணவாளா
காவேரிநேர்வடக்கி லேவாவிபூமணத்த
காவார்சுவாமிவெற்பின் முருகோனே
கார்போலு மேனிபெற்ற மாகாளிவாலைசக்தி
காமாரிவாரிபெற்ற பெருமாளே.

3. பாதிமதிநதி போதுமணிசடை நாதனருளிய குமரேசா
பாகுகனிமொழி மாதுகுறமகள் பாதம் வருடிய மணவாளா
காதுமொருவிழி காகமுறஅருள் மாயனரிதிரு மருகோனே
காலனெனையணு காமலுனதிரு காலில்வழிபட அருள்வாயே
ஆதியயனொடு தேவர்சுரருல காளும்வகையுறு சிறைமீளா
ஆடுமயினிலேறி யமரர்கள் சூழவரவரும் இளையோனே
சூதமிகவளர்சோலை மருவுசுவாமிமலைதனில் உறைவோனே
சூரனுடலற வாரிசுவரிட வேலைவிடவல பெருமாளே.

---

## செய்யுள்.

(எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.)

(1) ஆதியே பரமா னந்தவா ரிதியே
யன்பர்க டம்முளத் துறையுஞ்
சோதியே தூய நீதியே யிமவான்
றந்தருள் சுந்தர வுமையோர்
பாதியே வைத்த பரமனு ரளித்த
பாலகா பவங்கெடுத் தாள
நாதியே முளைத்த வேரக சாமி
நாதனே பரமசற் குருவே.

(2) கந்தனே கருணை மூர்த்தியே கார்த்தி
கேயனே கடம்பனே யென்னச்
சிந்தனை செய்துன் றிருக்கழல் வணங்காச்
சிறியனேற் கருளுநா ளுளதோ
விந்தமும் பணியச் செய்குறு முனிக்கும்
விமலமெய்ஞ் ஞானம தருளா
நந்தனே யருண கிரிமகிழ் சாமி
நாதனே பரமசற் குருவே.

(3) கீரனுக் கிடுக்க ணேர்ந்தவப் பொழுது
கிரிவுஞ்ச கிரிபிளந் தொளிரும்
பேரருள் வடிவாம் வேல்விடுத் தருளிப்
பிணிதவிர்த் தாண்டவெம் பெருமான்
றூரகப் பொருளை யீசனுக் கோது
சண்முகா நின்னடி பரவு

நாரக மருள்வா யேரக சாமி
நாதனே பரமசற் குருவே.

(4) நித்தமுன் ருளிற் பனிமலர் சூட்டி
நியமமா யருச்சனை புரியச்
சித்தமி னுயேன் றனையக மகிழ்ந்து
சிறிதுகண் பார்த்திலை யெனிலோ
பித்தனை னுய்யு நெறியிலை பிள்ளை
பிழையினைப் பெற்றவர் பொறுப்பர்
நத்தனன் மருகா வத்தனே சாமி
நாதனே பரமசற் குருவே.

(எண்சீரடி ஆசிரியவிருத்தம்)

(5) பொன்னரங்காக வுறை மார்பன் சகோதரி
புரந்தரிதுரந்தரி யுமை
பூமிபுகழ் வாமியபிராமி சிவகாமியருள்
புதல்வ குருபர சுவாமிநின்
சன்னிதியடைந்தவர்க்கெந்நிதியமும் முதவுந்
தயாநிதி கிருபா நிதிபதி
சடாட்சர சுபாகர கடாட்சமது செய்யவிது
சமையநல் சமையமையா
உன்னுருவ முலகுயிர்களி யாவுமென்று லெந்த
னுண்மெவிவை நீயறியையோ
ஓம் நமோ சரவணேற் பவகுமர முருகவென்
னுறுதிநிறை வேற்றிவைத்தாள்
மன்னுமொரு சொன்னமொழி கன்னலெழில்மின்
னரசி வள்ளி மணவாள சரணம்
வன்னமயில் வாகனு பொன்னே ரகப்பதியில்
வளர்சாமி நாதகுருவே.

(6) ஒருதரஞ்சரண பவாவென்று சொல்பவ
ருளத்தினி னினைத்தவெல்லா
முடனே கைகூடுமென வேதங்கள் மொழியுதே
யுண்மையறிவான பொருளே

பரிவாகவே யனந்தரஞ் சரவண
பவாவென்று நான்சொல்லியும்
பாங்குமிகு காங்கேயா வடியனெ னெண்ணியது
பலியா திருப்பதேனே
குருபரா முருகயா கந்தா கடம்பா சொல்
குமரா குகா சண்முகா
கோலா கலாவெற்றி வேலா வெனக்கருள்
கொடுத்தாள்வை முத்தையனே
மருமலர்க்குழலழக தேவகுஞ்சரி வள்ளி
மணவனே யென்றுணேவனே
வன்னமயில் வாகனு பொன்னே ரகப்பதியில்
வளர்சாமி நாதகுருவே.

(7) கந்தா குழந்தைவடி வேலா குகா சண்மு
காபரம குருதேசிகா
கனம்பெறவுனக்கே ஜெயந்தருவம் நீயுன்
கருத்திற் பயப்படேலென்
றெந்தாயவேளையினு மசரீரி மொழியானு
மெண்ணில் சகுனங்களானு
மியம்புமுன் னுத்திரவு பொய்க்குமோ வுனைநம்பி
யென்மன மயங்கலாமோ
சிந்தாகுலந்தவிர்த் திந்தாவெனக்கருணை
செய்தென் னபீஷ்டம் யாவுஞ்
சித்திக்கவே யருள்செய் பத்தற்கிரங்குமென்
றெய்வமே யுனைநம்பினேன்
மந்தாகினிக்கினிய மைந்தா முகுந்தற்கு
மருகா சிறந்த முருகா
வன்னமயில் வாகனு பொன்னேரகப்பதியில்
வளர்சாமி நாதகுருவே.

(8) ஆறுதலை யாரருள்செய் யாறுதலை யாவெனக்
காறுதலை யாருனையலால்
ஐயனே யீராறு கையனே மெய்யனே
யனைத்தினுநீ யொருவனே
தேறுபொருளெனவே தாந்தமதனினுந்
தீர்க்கமாவாக்கிய மெலாந்

திவ்யதேஜோமயா நந்தபரிபூரணத்
தேவசிவ குருவேயுனே
வீறுள்ளதேவென்று கூறுவதலாலெங்கும்
வேறுமொரு தெய்வமுளதோ
விண்ணவர்கள் சிறைமீள வாயிரங்கண்ணுளான்
மேலுலகு தன்னையாள
மாறிட்ட சூரனைக் கூறிட்ட வேலால்
மனத்துயரொழித் தருள்செய்வாய்
வன்னமயில் வாகனு பொன்னே ரகப்பதியில்
வளர்சாமி நாதகுருவே.

(9) கண்டி கதிர்காமம் திருச்செந்தூர் பரங்கிரி
காசினியில் புகழ்படைத்த
கனமான திருவாவினன்குடி திருத்தணி
கனங்கொண்ட எட்டுகுடியாம்
மண்டியே கோடான கோடிஜனம் சூழ்கின்ற
தில்லையாம் அருணகிரி
சிக்கல் வேளூர் மகிதலந்தன்னிலே பெருமைசேர்
ஏரசம் இவ்வுலகில் மதிக்கமுடியாத் தலங்கள்
தெண்டி சாமுண்டி மகாதேவி சங்கரி
திரிபுரை ஈன்றபாலன்
செகமதில் புகழ்பெற்ற முருகன் கார்த்திகேயன் ஸ்தலங்
களின் பெருமையை செப்பவும் முடியாது காண்
தண்டிக்கவேலா யுதங்கொண்ட மூர்த்தியே
தமியேனை ஆதரிப்பாய்
சதுர்மறைகள் புகழ்கின்ற ஏரகந்தன்னில் வாழ்
சாமிநாதக் கடவுளே.

(10) கனியொன்று நின்தந்தை காட்டியே நின்முனேன்
கருதிநின் தன்தனைப் பார்த்துமே

கரமுடன் பூவுலகை தலம்வந்த பேர்கட்கு
இக்கனிதகும் என்றுசொல்ல
பனிகண்ட பவ்வமது போல மயிலேறி
பாதாளம் பூமியெல்லாம்
படபடென ஓடியே மூவுலகை வலம்வந்த
பண்பான வடிவேலனே பக்தியாய் நின்முனேன்
கனிவேண்டி கடவுளே உலக மென
கருத்தினில் நினைந்துகொண்டு
கர்த்தனே சித்தனே முத்திக்குரித்தான
கடவுளை வணங்கிவந்து
தனியாகக்கனியை வாங்கநீ பின்வந்து பழனியெனும்
பதியைத் தலமாக ஆர்கொண்டவா
சதுர்மறைகள் புகழ்கின்ற ஏரகந்தன்னில்வாழ்
சாமிநாதக் கடவுளே.

---

KOVILOOR ANDAVAR
A. No. 863
LIBRARY, KOVILOOR

# விஜ்ஞாபனம்.

ஸ்ரீஸ்வாமிமலைக்கு மூன்றுவதுக்ரோசமான திருவேரகரமானது மஹாபுண்யபூமியாகவும், அங்குள்ள ஸ்கந்தபரமேச்வரர் மகாவரப்ரஸாதம்செய்பவராயும் ஸ்ரீஸ்காந்தத்திலும் இந்தக்ஷேத்திரமாஹாத்மியத்திலும் சொல்லியிருக்கிறது. அந்த க்ஷேத்திரம் இப்பொழுது மிகவும் ஜீர்ணமாக ஆகிவிட்டது. அந்த க்ஷேத்திரத்தைப் புண்யவான்கள் கிருபை கூர்ந்து ஜீர்ணோத்தாரணம் செய்து கும்பாபிஷேகம் நடத்தி உத்ஸவம் முதலிய யாவும் நடக்கும்வண்ணம் தகுந்த ஏற்பாடு செய்யவேண்டுமாய் மிகுந்த வணக்கத்துடன் கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படிச் செய்தவர்கள் ஸ்ரீ குருநாதன் அருளாலும் ஸ்ரீ ஸ்கந்தபரமேச்வரரின் அருளாலும் ஸர்வாபீஷ்டங்களையும் அடைவது திண்ணம்.

இப்படிக்கு

**ஆர். எஸ். ஸாம்பமூர்த்தி பாகவதன்,**

ஸ்வாமிமலை.

---

ஸ்ரீ ஸ்வாமிமலை க்ஷேத்திரமாஹாத்மியம் கிடைக்குமிடம்:—

**R. S. ஸீதாராம பாகவதர்,**

ஸந்நிதித்தெரு,

**ஸ்வாமிமலை.**

*S. I. R.*